திருப்பூவணநாதர்

வரலாற்று நாடகம்



கே. பி. சிவப்பிரகாசம்

திருப்பூவணநாதர்

திருப்பூவணநாதர்

-வரலாற்றுச் சிறப்புடன் கூடிய புராண நாடகம்-

கே.பி.சிவப்பிரகாசம்

அலமேலு பதிப்பகம்,
50, எல்லைக்கல் தெரு,
குறிஞ்சிப்பாடி 607 302.
தொ.பேசி: 04142 258942

திருப்பூவணநாதர்

(நாடகம்)

ஆசிரியர்: கே.பி. சிவப்பிரகாசம்

அலமேலு வெளியீடு எண்: 9

முதல் பதிப்பு: டிசம்பர் 2008

முகப்பு வடிவமைப்பு: எஸ்.வி.என், கும்பகோணம்.

ஒளி அச்சு: வை. ஜீவா, ல. சரண்யா

முகப்பு அச்சாக்கம்: SPS, சென்னை–14.

நூல் அச்சாக்கம்: சந்திரா ஆப்செட் பிரிண்டர்ஸ்,
குறிஞ்சிப்பாடி 607 302.

பக்கம்: 96

விலை: 50

பதிப்புரை

'திருப்பூவணநாதர்' என்னும் இந்நாடகம் வரலாறும் புராணமும் இணைந்தது. வரலாறிலிருந்து அடி பிறழாமலும் புராணத்திலிருந்து நழுவாமலும் இரு தண்டவாளங்களைப் போல் ஒன்றுக்கொன்று முரண்படாமல் மிகச்சிறப்பாக இந்நாடகத்தை வடிவமைத்துள்ளார் நாடகாசிரியர் அமரர் கே.பி. சிவப்பிரகாசம் அவர்கள்.

அறுபதாண்டுகளுக்கு முன் எழுதி நடிக்கப்பட்டாலும், இன்றும் இளமையுடனும், சுவைமாறாமலும், வாசிப்பதற்கு நெருடல் இல்லாமலும், பதினோறாம் நூற்றாண்டின் வரலாறை நம் கண் முன் படர வைக்கிறது இந்நாடகம்.

அந்தச் சிறப்புகளைக் கருதியும், பதினோறாம் நூற்றாண்டின் வரலாறை தமிழ் மக்கள் எளிமையாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்னும் எண்ணத்துடனும்தான் இந்நூலை வெளியிட்டுள்ளோம்.

நாடகாசிரியரின் மகள் திருமதி. சு. திலகம் ராமேஸ்வரி அவர்கள் இந்நாடகத்தின் கையெழுத்துப் பிரதியை இவ்வளவு காலம் பாதுகாத்து வைத்திருந்து எங்கள் பதிப்பகம் மூலம் வெளியிடுவதற்கு அனுமதியளித்தமைக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்புடன்

எஸ்.கே.என்.ராஜாமணி

முன்னுரை

திருப்பூவணநாதர் – என்னும் இந்த நாடகம் மதுரை சோமசுந்தரக்கடவுள் திருப்பூவணத்தில் இர்சவாதம் புரிந்த திருவிளையாடற் புராணக்கதையைச் சொல்கிறது. பாண்டிய நாட்டை ஆட்சி செய்த மூன்றாம் சடைய வர்ம குலசேகர பாண்டிய மன்னன் காலத்தில், (11–ஆம் நூற்றாண்டில்) மதுரையின் மீது படையெடுத்து வெற்றி கொண்ட இராஜராஜ குலோத்துங்கச் சோழன் மதுரைக்குக் கிழக்கே 18கி.மீ தொலைவில் இராமேஸ்வரம் செல்லும் சாலையில் உள்ள திருப்புவனத்தில் "திரிபுவனச்சக்ரவர்த்தி" என்று முடிசூட்டிக் கொள்கிறான்.

சோழன் முடிசூட்டிக் கொண்ட அதே திருப்புவனத்தின் ஒரு பகுதியில் ரகசியமாக, இளவரசன் சுந்தரபாண்டியனுக்கு மக்கள் நெற்கதிர்களால் ஆன மணிமுடி சூட்டி அரசனாக்குகின்றனர். இன்று அப்பகுதி நெல்முடிகரை என்று அழைக்கப்படுகிறது.

பாண்டிய நாட்டை வென்ற சோழன் பாண்டியரிடமே ஆட்சியை ஒப்படைத்துவிட்டு நாடு திரும்புகிறான். ஆயினும் பாண்டிய நாட்டுக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைத்தெறியும் வகையில் சோழநாட்டின் மீது படையெடுத்து வெற்றி கொள்ளும் சுந்தர பாண்டியன் அங்கேயே முடிசூடி பழிக்குப்பழி வாங்குகிறான் என்பது வரலாறு.

மன்னன் சுந்தர பாண்டியனுக்கு அரசவை நர்த்தகி பொன்னனையாள் மீது காதல் ஏற்படுகிறது. திருப்புவனத்தைச் சேர்ந்த அவளோ அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் இறைவன் திருப்பூவணநாதர் மீது மையல்கொண்டு பொன்னாலான திருவடிவம் செய்ய விரும்புகிறாள். அவளது விருப்பத்தையறிந்த இறைவனே சித்தராக–சிற்பியாக வடிவெடுத்து, சிலை செய்வதற்காக இரசவாதம் செய்து திருவிளையாடல் புரிகிறார். இந்நிலையில் பொன்னனையாள் மீது இராஜதுரோக குற்றம் சுமத்திய மன்னன் விசாரணைக்கு உத்தரவிடுகிறான். இறுதியில் சோமசுந்தரக் கடவுள் காட்சி தந்து அருள்பாலிக்கிறார்.

இறைவனின் திருவடிவில் மயங்கிய பொன்னனையாள் "அச்சோ என்ன அழகு!" என்று கன்னத்தில் கிள்ளிக் கொஞ்சுகிறாள். இப்போதும் இறைவன் திருமேனியில் அந்த வடுவைக் காணலாம்.

பாண்டிய மண்டலத்து 16 சிவஸ்தலங்களில் ஒன்றான இத்திருத்தலத்தில் எழுந்தருளிய இறைவனை அப்பரும், சுந்தரரும் பதிகம்பாடிச் சிறப்பித்துள்ளனர். இத்தகைய பெருமை வாய்ந்த திருவிளையாடற்புராணக் கதையினை, எனது தந்தை கே.பி.சிவப்பிரகாசம் அவர்கள் நாடகவடிவில் புனைந்துள்ளார். தனது இளவயதில் அவர் எழுதிய இந்நாடகம் 1939–40ல் "நம்அன்னை" கையெழுத்து இதழில் வெளியிடப்பட்டதுடன் பன்முறை அரங்கேற்றமாகியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனை நூல் வடிவமாக்கிடப் பெரிதும் உதவிய எங்களின் வழிகாபடியும், சாகித்திய அக்காதெமி விருது எழுத்தாளருமாகிய அய்யா குறிஞ்சிவேலன் அவர்களுக்கும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கடலூர் மாவட்டச் செயலாளரும் தமிழக அரசு விருது எழுத்தாளருமாகிய ப.ஜீவகாருண்யன் அவர்களுக்கும், எனது தந்தையின் "கல்வெட்டுகள்" சிறுகதைத் தொகுப்பை அவர் வாழுங் காலத்திலும், "சின்ன மருது பெரிய மருது" நாடகத்தையும், "திருப்பூவணநாதர்" என்னும் இந்நாடகத்தையும் அவரது மறைவுக்குப் பின்னரும் தொகுத்து உதவிய எனது கணவரும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க நெய்வேலி நகரச் செயலாளருமாகிய மு.சுப்ரமணி அவர்களுக்கும், சிறப்புற வடிவமைத்து நூலாக்கம் செய்துள்ள அலமேலு பதிப்பகத் தாருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

நன்றிகளுடன்,

எஸ்.திலகம் ராமேஸ்வரி.

429–இ, முதல் வகைக் குடியிருப்பு,
வட்டம்–29,
நெய்வேலி–607807.

சமர்ப்பணம்

வழிகாட்டி உதவிய மதுரைத் தமிழ்ச் சங்கப் பேராசிரியர் அய்யா சாம்பசிவம்பிள்ளை அவர்களுக்கும்,

எனது பெற்றோர் திருப்புவனம் நெல்முடிகரை
திரவியம் (எ) க.பூவணலிங்கம்
முத்துராக்கம்மாள் ஆகியோருக்கும்

கே.பி.சிவப்பிரகாசம் எழுதிய-

"நம் அன்னை" கையெழுத்து சஞ்சிகையில் (1939–1940ல்) வெளிவந்த திருப்பூவணநாதர் வரலாற்றுச் சிறப்புடன் கூடிய புராண நாடகம்–

மதுரையிற் சித்தராகிய சோமசுந்தரக் கடவுள்
திருப்பூவணத்தில் இரசவாதம் செய்தருளித்
திருவிளையாடல் புரிந்த கதை.

திருப்பூவணநாதர் கதாபாத்திரங்கள்

1.	மூன்றாம் சடையவர்ம குலசேகரபாண்டியன்	– பாண்டியமன்னன்
2.	அழகப்பெருமாள்தேவர்	– பாண்டிஅமைச்சர்
3.	வேங்கைமார்பன்	– பாண்டித்தளபதி
4.	மாறவர்மசுந்தர பாண்டியன்	– பாண்டிஇளவரசன்
5.	இராஜராஜகுலோத்துங்கசோழன்	– சோழமன்னன்
6.	ஜெயவீரதேவன்	– சோழநாட்டுத்தளபதி
7.	பொன்னனையாள்	– அரசுநர்த்தகி
8.	செங்கமலம்	– வளர்ப்புத்தாய்
9.	நல்லார்க்கினியன்	– நட்டுவனார்
10.	கமலநயனன்	– பொன்னனையாள் மாமன்
11.	சித்தன்	– சோமசுந்தரக் கடவுள்
12.	மலர்வண்ணன்	– சோழநாட்டுவீரன்
13.	அந்தணர் சுயம்பு	– ஆஸ்தானஅந்தணர்
14.	வைரமுத்து	– பாண்டிவீரன்
15.	நாகமுத்தன்	– பெரியதனக்காரர்
16.	மதுரை நாகனார்	– தமிழறிஞர்

மற்றும்

சிவபக்தர்கள், பொதுமக்கள், புலவர்கள், நாட்டியக்குழுவினர், வீரர்கள், ரோமாபுரி சிற்பி, ஏழை விவசாயி, வீரன் பவளம், விவசாயி சிங்காரம், ஆகியோர்.

திருப்பூவணநாதர்

காட்சி : 1

இடம் : சிவலிங்கம் உள்ள நந்தவனம்

பாத்திரங்கள் : சிவபக்தர்

(சிவ பக்தர் ஒருவர் நந்தவனத்திலுள்ள சிவலிங்கத்தின் முன் பக்திப் பரவசத்துடன் பாடி பூஜை செய்து கொண்டிருக்கிறார்.)

"வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமே லிளமதியந் தோன்றுந் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத் தெம்புனித னார்க்கே"

-திருநாவுக்கரசு நாயனார்- திருத்தாண்டகம்.

(காட்சி மாறுகிறது)
(அதே இடத்தில் பலபக்தர்கள் பூஜை செய்கின்றனர்)

"மின்னனை யாள்திரு மேனிவி ளங்கவோர்
தன்னமர் பாகம தாகிய சங்கரன்
முன்நினை யார்புரம் மூன்றெரி ஊட்டிய
பொன்னனை யான்உறை பூவணம் ஈதோ"
"எண்ணி இருந்து கிடந்து நடந்தும்
அண்ண லெனாநினை வார்வினை தீர்ப்பார்
பண்ணிசை யார்மொழி யார்பலர் பாடப்
புண்ணிய னார்உறை பூவணம் ஈதோ"

-சுந்தர மூர்த்தி நாயனார்-

(காட்சி மாறுகிறது)
(பல பக்தர்கள், பொதுமக்கள் கூட்டு வழிபாடு ஆராதனை நடைபெறுகிறது)

"அறையார் புனலு மாமலரு மாடர வார்சடைமேல்
குறையாற் மதியஞ்சூடி மாதோர் கூறுடை யானிடமாம்
முறையால் முடிசேர் தென்னர் சேரர் சோழர்கள் தாம்வணங்கும்
திறையா ரொளிசேர் செம்மை யோங்குந் தென் திருப்பூவணமே"

"மாடவீதி மன்னிலங்கை மன்னனை மாண்பழித்துக்
கூடவென்றி வாள்கொடுத்தாள் கொள்கையினார்க் கிடமாம்
பாடலோடும் ஆடலோங்கிப் பன்மணிப் பொன்கொழித்து
ஓடநீரால் வைகை சூழும் உயர்திருப்பூவணமே"

"திண்ணார் புரிசை மாடமோங்குந் தென்றிருப் பூவணத்துப்
பெண்ணார் மேனி யெம்பிறையைப் பேரியல் இன்தமிழால்
நண்ணா ருட்கக் காழி மல்கு ஞான சம்பந்தன் சொன்ன
பண்ணார் பாடல் பத்தும் வல்லார் பயில்வது வானிடையே"

-திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்- (தேவாரம் திருமுறை)

(அபிஷேக ஆராதனை நடைபெறுகிறது)
(பக்தி கோஷங்கள் ஒலிக்கிறது)

ஒருவர்: தென்னாடுடைய சிவனே போற்றி!

ஒருவர்: பொன்னார் மேனியனே புஷ்பவனேஸ்வரா போற்றி போற்றி!

ஒருவர்: தென்பாண்டித் தலமுடையோய் திருப்பூவணத் திறைவா போற்றி போற்றி!

(ஒவ்வொரு கோஷமாக எல்லோரும் முழங்க காட்சி மாறுகிறது)

காட்சி : 2

இடம் : மதுரை அரண்மனை

பாத்திரங்கள் : மன்னர் சடையவர்ம குலசேகர பாண்டியன், அமைச்சர் அழகப்பெருமாள் தேவர், வீரர்கள், புலவர்கள், நாட்டியக்குழுவினர், சோழநாட்டு வீரன் மலர்வண்ணன், பொதுமக்கள்.

(மன்னர் சபைக்கு வர வாழ்த்தொலி முழங்குகிறது)

வீரன் : இராஜாதி ராஜ இராஜ கெம்பீர இராஜ மார்த்தாண்ட இராஜ பராக்கிரம வீர தீர அகில புவனம் வென்றருளிய சந்திர வம்ச குல திலக சர்வ சாம்ராஜ்ஜிய மண்டலாதிபதி மூன்றாம் சடைய வர்ம குலசேகர பாண்டித் தேவர்!

எல் : வாழ்க!

வீரன் : எம் மண்டலமும் கொண்டருளிய வீரதேவர் தென்னாடுடைய சடையவர்ம குலசேகர பாண்டிய மாமன்னர்!

எல் : வாழ்க!

வீரன் : வாழ்க பாண்டிய சாம்ராஜ்ஜிய பூ மண்டலம்!

எல் : வாழ்க!

(முன்னர் ஆசனத்தில் அமர்ந்ததும் புலவர்கள் ஒவ்வொருவராக வந்து வாழ்த்துப்பா பாடுகின்றனர்)

1 புலவர் : "மாமன்னர் பெருமைக் கோர் மகுடமாய்
மாநகரின் கோபுரங்கள் கொலுவிருக்கும்
தேமதுரத் தீந்தமிழில் இயல் இசை நாடகங்கள்
தெருவெங்கும் தினம் முழங்கும்
பூ மகளும் நா மகளும் பொதிந்துறையும் புவிமிசைக்குள்
புண்ணியங்க ளோடி லங்கும்
இப்பேர் மா மதுரைப் பேரரசின் பெருமை கூற
பொழுதுண்டோ பொருளுண்டோ தேட உலகீர்.."

(புலவர் பரிவு பெற்றுச் செல்ல மற்றவர் வந்து பாடுகின்றார்)

2 புலவர் : "வரமொன்று பெறவேண்டிப் பல்லாண்டு தவம்புரிந்து
இறையருள் பெறுவார் கோடி
தினம் எங்கள் கொற்றவரின் கொடை பெற்று
பல்வரம் பெற்று வாழ்வடைந்தோர் கோடி கோடி
அறம் எங்கட்கு அரிச்சுவடி மறம் எங்களின் பாலர் பாட்டு
திறம் எங்கள் குலக் கொடிச் சிறப்பு.. கொடை
மனம் எங்கள் மாமன்னர்க் கன்றி இம் மாநிலத்தில்
வேறெவர் பெற்றார் யாரேனும் கூறப்போமோ.."

(புலவர் பரிசு பெற்றுச் செல்ல மூன்றாம் புலவர் பாடுகிறார்)

3 புலவர் : "அளந்து கொடுத்தறியார்....
எண்ணி.... அளந்து.... கொடுத்தறியார்....
அதோ.... விளைந்த வெண்முத்துக்கள் குவியல்...
உம் தேவைக்கு...
அள்ளிக் கொள் என்பார் எம் மன்னர்.....
வியந்து அயலரும் வடவரோடு சேரரும் சோழரொடு

சிங்களர் ஏனையோரும்
மலர்ந்து அகம் குளிர்ந்து பொதி பொதியாகத் தங்கள்
தோள்களில் சுமந்து நிமிர்ந்து
அசைந்து செல்லும் காட்சி தினக் காட்சியன்றோ
எம் தென் பாண்டிச் சீமையிலே....

(பலத்த கரவொலி ஆரவாரத்துக்கிடையே புலவர் செல்ல நாட்டியக் குழுவினரின் நிகழ்ச்சி தொடங்குகிறது)

(ஆண்பெண் கிராமிய நாட்டியக் கலைஞர்கள் ஆடிப்பாடுகின்றனர்)

இருவ : தந்தனத் தானா தந்தனத் தானா தந்தானாத் தன தானா -தன தந்த-

பெண் : சொக்கா சொக்கா ஏதுக்கிப்படி என்னயச் சுத்துற வீணா-அட-

ஆண் : சொக்கி சொக்கி உன்னயக் கண்டு சொக்காதவனும் ஆணா-அடி-

இருவ : தந்தனத்–

ஆண் : தக்காளிப் பழம் போல உடம்பு தக தகன்னு இருக்கு செவந்த-

பெண் : உன் அக்கா மகளைப் போல நெனச்சு பண்ணாதே சரி வழக்கு-உன்

இருவ : தந்தனத்

பெண் : என் மாமன் மகன் மாடனும் என்னைக் கட்டாமல் விடுவானா-என்

ஆண் : அவனைத் தேடி அலைஞ்சு காணாமெ உங்க ஆத்தா -இளச்சுப் போனா-

இருவ : தந்தனத்–

ஆண் : எடக்கு மடக்காப் பேசாமெ சும்மா என்னோட வந்துஆடு சொக்கி-

பெண் : அது கெடக்கு மச்சான் வாங்க வாழப் போவோம் பாண்டி நாடு-

இருவ : தந்தனத் தானா தந்தனத் தானா தந்தானத் தன தானா
தன-தந்த

(வேறுமெட்டு)

இருவ : தந்தனத் தய்யா தந்தனத் தய்யா தந்தனத் தானா-
தய்யனத் தானா

இருவ : தந்தனத் தய்யன தந்தனத் தய்யன தந்தனத் தானா-
தய்யனத் தானா

இருவ : பொங்கி வரும் வைகை நதி வெள்ளத்திலே - ஏலேலோ
பொற்குடம் பரிசல் கட்டிப் புறப்படுவோம் -ஐலசா

ஆண் : மங்கை நீயும் அருகிருக்க நகருதடி - ஏலேலோ
திங்கள் உன்னைக் கண்டு நாணி மறையுதடி- ஐலசா

பெண் : படைநடுவே பாய்ந்து செல்லும் வீரனைப்
போல் - ஏலேலோ

தடை அகன்றே படகுசெல்லும்
பாங்கினைப் பார் - ஐலசா

ஆண் : தென்னைசூழும் தென்கரையின் சுழற்சியிலே - ஏலேலோ
மூங்கில் பண்ணைசூழும் வடகரையை
வளைந்து செல்வோம் - ஐலசா

பெண் : புஷ்பவனக் காசி அங்கே பூப்பறிச்சு - ஏலேலோ
புவி காக்கும் சொக்கருக்கு பூஜை செய்வோம் - ஐலசா

இருவ : கோடி கோடி உயிர் சுமக்கும் கொற்றவரும் - ஏலேலோ
பாண்டி நாடும் நீடு வாழ நாளும்
வழிபடுவோம் - ஐலசா

இருவ : கோடி கோடி உயிர் காக்கும் கொற்றவரும் - ஏலேலோ

பாண்டிநாடும் நீடுவாழ நாளும் வழிபடுவோம் - ஐலசா

(கரவொலி ஆரவாரத்துக்கிடையே நாட்டியக்
கலைஞர்கள் பரிசு பெற்றுச் செல்லல்)

(அமைச்சர் எழுந்து)

அமைசர் : மன்னர் மன்னா! சோழ நாட்டு வீரன் ஒருவன்
வேந்தரின் பேட்டிக்காகக் காத்திருக்கிறான்.

மன்னர் : சபைக்கு வரட்டும் அமைச்சரே!

(சோழ நாட்டு வீரன் மலர்வண்ணன் சபைக்கு வந்து வணங்கி)

மலர் : மன்னர் மன்னா! வணக்கம்! கங்கை கொண்ட சோழப் பேரரசின் ராஜீய சபைப் பிரதிநிதி நான்! மலர்வண்ணன்! எங்கள் மாமன்னர் மாவீர இராஜராஜ இராஜ பராக்கிரம இராஜ பிரதாப இராஜ மகேந்திர இராஜ குல திலக இராஜ இராஜ குலோத்துங்க சோழ பூபதி அவர்கள், அண்மையில் கொங்கு நாட்டை வென்று அதன் தலை நகராம் கருவூரில் விஜயமாமுடி தரித்து வீராபிஷேகம் செய்து கொண்டதையும், 'சோழ கேரளன்', 'கொங்கு நாடு கொண்ட சோழன்' எனும் வீரச் சிறப்புப் பட்டங்களைப் பெற்று வெற்றியுடன் திரும்பியதையும் தாங்கள் அறிந்திருக்கக் கூடும்! அதன் தொடர்பாக நட்பு நாடாம் இப்பாண்டிய நாட்டிலும் வீராபிஷேக விஜய மா முடி தரித்துக் கொள்ளத் தணியாப் பேரவாக் கொண்டுள்ளார், எம்மாமன்னர் சோழத்தேவர்! மன்னர் தங்களின் சம்மதம் பெற்றுத் திரும்பவே நான் நேரில் தங்களிடம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறேன்...?

மன்னர் : என்ன! வீராபிஷேகமா? (ஏளனமாகச் சிரித்து) விஜயாபிஷேகம்... வீராபிஷேகம்... சோழ மன்னனுக்குப் பாண்டிய நாட்டில் வீராபிஷேகம்... வேடிக்கை! பெரும் வேடிக்கை! இம்மாதிரியான பேராசை உம் மன்னருக்கு ஏற்பட்டது பெரும் பேதமை வீரனே! பாண்டியன் படை வலிமையற்றிருக்கும் இந்த நேரத்தில் உம் மன்னர் தம் தோள் வலிமையைக் காட்டத் துணிந்துவிட்டார் போலும்?

மலர் : இல்லை அரசே இல்லை! நட்பு நாடு என்றெண்ணியே எம்மன்னர் இப்படிக் கோருகிறார் மன்னா....

மன்னர் : நட்பு! எம் மீது நட்புக் கொண்டிருப்பதாகக் கூறிக் கொள்ள உம் மன்னருக்கு நாக்கூச வில்லையா வீரனே!

திரிபுவனத்தையும் வென்றதாகப் பட்டங்களைச் சுமந்து கொள்ள உமது மன்னருக்கு நட்பு நாடு தான் கண்ணில் பட்டதோ?

(சபையினரின் ஏளனச்சிரிப்பு)

மலர் : அரசே! பரிகாசம் வேண்டாம்! வீராபிஷேகம் ஒன்றே எம் மன்னவர் குறி! தங்கள் தந்தை மாறவர்ம விக்கிரம பாண்டியருக்கு அன்று பெரும் படையும் நிதியும் கொடுத்துதவி சரியவிருந்த இப்பாண்டிய சாம்ராஜ்ஜியத்தை நிலைநிறுத்தி வைத்தவர் எமது மாமன்னர் சோழப்பெருந்தகை! அச்செய்நன்றியை இதற்குள் கொன்றுவிட்டிருக்க மாட்டீர்களென்றே எண்ணிவிட்டார் எம் கொற்றவர்!

மன்னர் : .... நன்றி .... காலத்தே செய்த அவ்வுதவி ஞாலத்தின் மானப்பெரிது தான் வீரனே... ஆனால் நன்றியின் பெயரால் ஒரு நாட்டின் தன் மானத்துக்கே களங்கம் விளைவிக்கக் கருதுவது கடை கெட்ட அரசியல் கபட நாடக மென்பதை உம் மன்னர் அறிய மாட்டாரோ? ஒரு கையால் கொடுத்துதவி விட்டு மறு கையால் தட்டிப் பறித்துக்கொள்ள நினைப்பது மனிதகுலத்தின் தர்மமல்லவே மலர் வண்ணா?

மலர் : .... முடிவாக அரசர் கூறுவது....?

மன்னர் : சோழ மண்டலத்துக்கு என்றும் நன்றிக் கடன் பட்டிருக்கிறது இப்பாண்டிய சாம்ராஜ்ஜியம்... மூவேந்தருள் தற்போது படைவலிமை கொண்டிருக்கும் சோழ நாட்டுக்கரசன் இராஜராஜ குலோத்துங்க சோழனுக்கு எம்முடைய நன்றியறிதலை மீண்டும் தெரிவித்துக் கொண்டதாகக் கூறு!

மலர் : மன்னிக்க வேண்டும் அரசே- அடுத்து அங்கிருந்து வரும் செய்தி இப்பாண்டியம்பதியில் எமது மாமன்னர் சோழத் திருத்தேவரின் விஜயமாமுடி வீராபிஷேகத்திற்கு உரிய சுபதினத்தைக் குறித்ததாக இருக்கும் வேந்தே!

மன்னர் : ஓ- அப்படியானால் போருக்குத் தயாராயிருக்கும்படி கூறுகிறாயா நீ.... இல்லையா மலர்வண்ணா?

மலர் : இல்லை அரசே! வேறுவழி ஒன்று கூறுங்கள் எம்வேந்தரின் வீராபிஷேகத்துக்கு என்று தான் வேண்டுகிறேன் வேந்தே!

மன்னர் : வீரத்தை என்றும் விலைகொடுத்தறியாப் பாண்டிநாட்டு மறக்குலத்தின் மானத்தைத் தானமாகக் கேட்கிறார் உம் மன்னர்– நீ போ– பிறருக்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா பிற்பகல் தாமே வரும் என்று மறை வழங்கும் நீதியை மட்டும் உம்மன்னரிடம் மறக்காமல் கூறு!

மலர் : சென்று வருகிறேன் அரசே! இப்பாண்டியம்பதியில் ‘சேரத்தை வென்ற சோழர்’ ‘கொங்குநாடு பெற்ற கோமான்’ ‘காவேரிக் கரைக் காவலன்’ இப்பூமண்டலத்தின் நேர் நிகரற்ற கொற்றவர் இராஜாதி ராஜ இராஜ கெம்பீர இராஜ பராக்கிரம இராஜராஜ குலோத்துங்க சோழபூபதி அவர்களின் திக்விஜய திரிபுவன வீராபிஷேக வெற்றி விழா சர்வ நிச்சயம்! வருகிறேன் அரசே வருகிறேன்! (வணங்கிச் செல்லல்)

மன்னர் : (எழுந்து)... அமைச்சரே! அகம்பிடித்த சோழன் முத்துடைத்த நமது சவங்களின் மேல்நின்று வேண்டுமானால் வீராபிஷேக விஜயமாமுடி தரித்துக் கொள்ளட்டும்! சரணடைந்து சோழனுக்குப் பணிந்து கிடந்ததாகக் கூறும் பழி ஒன்று பாண்டியர் வரலாற்று ஏடுகளில் இடம் பெற்று விடக் கூடாது! படை வீரர்கள் இப்போதே போருக்குத் தயாராகட்டும்! மானமிகு மறக் குலத்து மாமல்லர்களின் வீரகர்ஜனை எண்திக்கும் எதிரொலிக்கட்டும்! முழங்கட்டும் முரசம்!

(முரசம் முழங்கிறது)

வீரன் : இராஜாதி ராஜ இராஜ கெம்பீர இராஜ பராக்கிரம இராஜ குல திலக சடையவர்ம குலசேகர பாண்டிய மாதேவர்!

எல் : வாழ்க!

வீரன் : வாழ்க தென் பாண்டித் திருநாடு

எல் : வாழ்க!

(சபை கலைகிறது) (காட்சி மாறுகிறது)

காட்சி : 3

இடம் : வீதி

பாத்திரங்கள் : பறை சாற்றுவோன் - பொதுமக்கள்

(வீதியில் பொதுமக்கள் சூழ நின்று கொண்டிருக்கும் வீரன் ஒருவன் பறைசாற்றி விட்டு அரசாணையை வாசிக்கிறான்.)

வீரன் : இதனால் சகலருக்கும் தெரிவிப்பது என்னவென்றால், சிறிதும் எதிர்பாராத விதமாக ஒரு போரைச் சந்திக்க வேண்டிய நிலையில் நம்நாடு இழுத்து விடப்பட்டிருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்; வீரத்தின் விளைநிலம் நமது மண்! அன்று... சேரனுக்குப் பாடம் புகட்டினோம்! சோழனை ஓட ஓட விரட்டி சாதனையும் படைத்துள்ளோம்! –இன்று இயற்கையின் சீற்றத்தால் சிறிது பாதிக்கப்பட்டுள்ள நிலையைப் பயன்படுத்தி நமது பூமியைக் கபளீகரம் செய்யத் திட்டமிட்டுள்ளான் சோழன்! நீதிக்கு ஒரு சோழன் நமது வீரத்தைச் சோதிக்க இன்று வீதிக்கு இறங்கி வந்துவிட்டான்! நீதியைக் காலில் துவைத்து விட்டு வரும் அச்சோழ நாட்டானுக்கு இப்பாண்டி மண்ணில் விழும் அடி இம்மாதிரியான அநீதிக்கு விழும் முடிவான மரண அடியாக இருக்க வேண்டும்! மனித நேயத்துக்கும் தொன்மை மிகு மரபுக்கும் போர் நிலை நெறி முறைகளுக்கும் இலக்கணம் வகுத்தளித்த பாரம்பரியமுடைய நமது கப்பற்படை, தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய பாண்டிப்படை வீரர்கள், நாட்டில் எங்கிருந்தாலும் எவ்வித காரணமும் கூறாமல் உடனே புறப்பட்டு அவரவர் படைத் தளபதியின்

முன் ஆஜராக வேண்டுமென இவ்வறிக்கையின் மூலமாகவும் நாட்டு மக்கள் வாயிலாகவும் அறிவுறுத்தப் படுகிறார்கள்...! (பறைசாற்றி)

இது நமது மாமன்னர் சடையவர்ம குலசேகர பாண்டிய பூபதி அவர்களின் ஆணை.

(பறைசாற்றுவோன் செல்ல – பொதுமக்கள் கலைந்து செல்கின்றனர்)

(காட்சி மாறுகிறது)

காட்சி : 4

இடம் : ஆயுத சாலை

பாத்திரங்கள் : பாண்டிய மன்னர், அமைச்சர், வீரர்கள், தளபதி வேங்கை மார்பன், இளவரசன் மாறவர்ம சுந்தர பாண்டியன்

(மன்னர் சிந்தனையுடன் நடந்து கொண்டிருக்க)

அமைச்சர் : மன்னித்தருள வேண்டுகிறேன் மன்னர் மன்னா... வீராபிஷேகத்தின் மீது வேட்கை கொண்ட சோழன் சூறாவளியெனப் பெரும்படை கொண்டு பொருதுவான்... ஏராளமான படை பலத்துடன் எதிர் கொண்டாலன்றி சோழப் பெரும்படையைத் தடுத்து நிறுத்துவதென்பது மகாகடினம்! எவ்வாறாயினும் முன்னேற்பாடாக... இளவரசரை... பாதுகாப்பான இடத்துக்கு அனுப்பி வைப்பது நல்லதென்று எண்ணுகிறேன் பிரபு...?

மன்னர் : உங்கள் விருப்பம் போலவே நடக்கட்டும் அமைச்சரே!

அமைச்சர் : வேங்கை மார்பா... தமிழ் வளர்த்த மதுரையம்பதியின் தவக்கொழுந்து... எழில் மிக்க இம்மாமண்டலத்தின் எதிர்கால மாமன்னன்... சந்திரவம்சத்தின் குன்றாக் குலவிளக்கு... (இளவரசனைக் காட்டி) எப்பொருளுக்கும் இணையற்ற இப்பெரும்பொருளை உன்னிடம் ஒப்படைக்கிறேன்...!

வேங்கை : (வணங்கி)..... காலம் வரும் வரை கண்ணின் மணியெனக் காத்து ஒப்படைக்கிறேன் அமைச்சரே!

இளவரசர் : தந்தையே!

மன்னன் : – போய் வா சுந்தர பாண்டியா! ஆலவாய் சுந்தரேசன் அருளால் மீண்டும் நலமுடன் சந்திப்போம் மகனே!

வேங்கை : ....புறப்படுங்கள் இளவரசே!

அமைச்சர் : ...சென்று வாருங்கள் இளவரசே! விரைவில் மிக நல்ல செய்தியே உங்களுக்கு வரும்! புறப்படுங்கள்!

(இளவரசனும் வேங்கை மார்பனும் வணங்கிச் செல்ல வீரன் ஒருவன் ஓடி வந்து வணங்கி)

வீரன் : மகாராஜா... சோழப் பெரும் படை நமது எல்லைப் பாதுகாப்பு அரண்களையெல்லாம் நொடிப் பொழுதில் தகர்த்து விட்டு பொங்கிய கடலெனப் பாய்ந்து முன்னேறிக் கொண்டிருக்கிறது பிரபு!

மன்னன் : (வாளை உருவி) வீரர்களே... புறப்படுங்கள்! (செல்ல)

அமைச்சர் : (வாளை உருவி) வீரர்களே... புறப்படுங்கள்! (செல்ல)

வீரன் : ....வாழ்க மாதேவர் மாமன்னர் மாவீர குலசேகர பாண்டிய பூபதி!

எல் : வாழ்க!

வீரன் : வாழ்க வாழ்க தென்பாண்டித் திருநாடு!

எல் : வாழ்க வாழ்க!

(சபை கலைகிறது) (காட்சி மாறுகிறது)

காட்சி : 5

இடம் : மதுரை அரண்மனை

பாத்திரங்கள் : சோழமன்னன் இராஜராஜ குலோத்துங்கசோழன், தளபதி ஜெயவீர தேவன், அந்தணர் சுயம்பு, மலர்வண்ணன், பொதுமக்கள், வீரர்கள்.

(பாண்டியன் அரியணையில் சோழமன்னன் அமருதல் – வாழ்த்தொலி முழங்குகிறது)

வீரன் : பாண்டி நாடு வென்ற சோழப் பெரும் தேவர் இராஜராஜ ராஜ குலோத்துங்க சோழ பூபதி!

எல் : வாழ்க!

(ஆஸ்தான அந்தணர் சுயம்பு எழுந்து)

அந்தணர் : சோழமன்னா, வாழ்க நீ பல்லாண்டு! வளர்க நின் கொற்றம் பல்லாண்டு பல்லாண்டு! இப்பூமண்டலம் முழுதும் இன்று சோழத்தின் புலிக்கொடி பட்டொளி வீசிப் பறக்கிறது! சங்கம் கொண்ட இம்மாமதுரை மண்டலத்தின் மணி மகுடத்தையும், தங்கம் நிகர் இப்பெரும் நாட்டை வெற்றி கொண்ட பேரரசன் உனக்கு 'சோழபாண்டியன்' எனும் வீரச் சிறப்புப் பட்டத்தையும் மட்டற்ற மகிழ்ச்சியோடு அணிவிக்கிறேன்.

(சுயம்பு, சோழ மன்னனுக்கு மணி மகுடம் தரித்து செங்கோல் வழங்க வாழ்த்தொலி முழங்குகிறது)

வீரன் : 'கங்கை கொண்ட சோழர்', 'சோழ கேரளர்', 'கொங்குநாடு கொண்ட கோமான்', 'சோழ பாண்டியர்', பாண்டிய மாமண்டலம் வென்றருளிய சோழத் திருத்தேவர், அகில புவனம் கொண்டருளிய பூ மண்டலாதிபதி, இராஜராஜ இராஜகெம்பீர இராஜபராக்கிரம திரிபுவன திக் விஜயாதிபதி இராஜராஜ குலோத்துங்க சோழ மாதேவர்!

எல் : வாழ்க! வாழ்க!

தளபதி : மன்னர் மன்னா...! இங்கிருந்து கிழக்கே வெகு சமீபத்தில் வைகை ஆற்றின் தென் கரையில் திருப்பூவணமென்னும் ஓர் அழகான ஸ்தலமிருக்கிறது- அத்தலத்தின் எண்திக்கு நோக்கினும் கண்ணுக்கெட்டிய தூரம் தங்கத்தட்டில் முத்துக்களைப் பரப்பி வைத்தது போன்று புஷ்பங்கள் சொரியும் பூந்தோட்டங்கள் இருப்பது வெகு மனோரம்யமான காட்சியாயிருக்கிறது- அத்தகைய சுந்தரமான மலர்க்காட்டின் மத்தியில் நீண்ட நெடுங்காலத்துக்கு முன்பே பாரிஜாத மரத்தடியில் ஒரு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு மிகவும் பிரபல்யமடைந்து வந்திருக்கிறது.

அப்புஷ்பவனேஸ்வர பெருமானைப் பூமிக்கு முன் பிறந்த பூவணலிங்கம் என்றே போற்றி வணங்குகிறார்கள். மக்கள்... காசியிலும் கால் மடங்கு உயர்ந்த புண்ணியஷேத்திரம் எனக்கருதி அவ்வூரை புஷ்பவனக்காசி எனவும் கூடச் சிறப்பிக்கிறார்கள்... மேலும் அங்கு ஒரு வேதபாட சாலையும், சுற்றிலும் பரவலாக வாழ்ந்து வரும் எழுத்தாயிரமுடையார் எனும் ஆயிரத்துக்கு மேற்பட்ட அந்தணர் குடும்பங்களும் நமது வீராபிஷேக விழாவை நடத்திவைக்க மிகவும் ஏதுவாகவே அங்கிருப்பதும் ஒரு தற்செயல் நிகழ்ச்சியாகவே அமைந்திருக்கிறது வேந்தே... ஆகவே தான் அந்த இடத்தையே மன்னரின் வீராபிஷேக விழாவிற்குத் தகுந்த இடமெனக் கருதித் தீர்மானித் திருப்பதோடு அதற்கான வேலைகளும் மிகத் துரிதமாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது மன்னர் மன்னவா...!

மன்னன் : ...மிகவும் மகிழ்ச்சி தளபதியாரே!

(மலர்வண்ணன் வந்து வணங்கி)

மலர் : மன்னர் மன்னா... வீராபிஷேக விழாவிற்கான ஏற்பாடுகளனைத்தும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில்...?

மன்னன் : என்ன நடந்தது வீரனே?

மலர் : ...அப்பகுதியிலிருந்த அந்தணர் அனைவரும் இரவோடிரவாக எங்கோ தப்பி ஓடி விட்டார்கள்.

மன்னன் : என்ன தப்பி ஓடி விட்டார்களா?

மலர் : ஆமாம் பிரபு! தப்பித்தான் ஓடி விட்டார்கள்! ஓடியவர்கள் போக எஞ்சியோரில் பெண்கள் வயோதிகர்கள் உட்பட ஆயிரக்கணக்கான 'அசக்தர்கள்' தங்களைத் தாங்களே தீயிட்டுக் கொளுத்திக் கொண்டும் வாள் கொண்டு நெஞ்சிலே பாய்ச்சிக் கொண்டும் மாண்டு கிடக்கிறார்கள் மன்னா!

மன்னன் : ...ஓ... அவர்கள்... வெறும் வயிற்றுக்காக மட்டுமே வேதங்கள் ஓதும் வேதியர்களில்லை என்பதை நிருபணமாக்கி விட்டார்கள்... ஆமாம்... இராஜ விஸ்வாசமுடைய சிறந்த வீரர்கள் அவர்கள்...!

மலர் : ...பிரபு... இதோ... 'வரலாறு படைத்த பாண்டியன் பரம்பரைக்கு மட்டுமே பணிவோம், சோழனுக்கு அடி பணியோம்' என்று ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கையாலேயே எழுதிப் போட்டுப் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டது போல இம்மாதிரியான ஓலைச்சுருள்கள் அப்பிணக்குவியலின் மத்தியில் ஏராளமாகக் குவிந்து கிடப்பதையும் கண்டோம் மகாபிரபு...?

(மன்னர் ஓலைச்சுருளை வாங்கிப் பார்த்து விட்டு எழுந்து)

... இருக்கட்டும்... எது எப்படி நடந்தபோதும் சரி.... வீராபிஷேக விழாவிற்கான வேலைகள் தடையின்றி நடைபெறட்டும்! சோழ நாட்டினின்றும் அந்தணர் கூட்டம் ஆயிரம் ஆயிரமாக வந்து குவியட்டும்! திருப்பூவணம் திருவிழக் கோலம் பூணட்டும்! (செல்ல).

வீரன் : கங்கை கொண்டருளிய சேர சோழ பாண்டிய அகில புவன மண்டலாதிபதி இராஜராஜ குலோத்துங்க சோழ மா தேவர்!

எல்லோரும்: வாழ்க!

(சபை கலைகிறது) (காட்சி மாறுகிறது)

காட்சி : 6

இடம் : திருப்பூவணம் பகுதியில் ஒரு சிற்றூர்-குடிசை.

பாத்திரங்கள் : தளபதி வேங்கை மார்பன், வீரன் வைரமுத்து.

(தளபதி வேங்கை மார்பனும் வீரன் வைரமுத்துவும் உரையாடிக் கொண்டிருக்கிறார்கள்)

வேங்கை : ...தகவல் ஏதேனும் கிடைத்ததா வைரமுத்து?

வைரமுத்து : மதுரையம்பதிக்குள் கால் வைக்க முடியவில்லை தளபதியாரே... சோழர்கள் தலைநகரை முற்றிலும்

ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றனர்.. அங்குலத்துக்கு ஒரு வீரனாக உலவுகிறார்கள்.... அரண்மனைக்குள் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைக்கூட நமது ஒற்றர்களால் அறிந்துகொள்ள முடியவில்லையாம்.. பொதுவாக.. நமது பட்டையினர் பெருமளவில் அழித்தொழிக்கப் பட்டதாகவும் பல நூற்றுக்கணக்கானோர் சிறைபிடிக்கப்பட்டுள்ளதாகவும் கிடைத்த தகவலைத் தவிர வேறு தகவலெதுவும் அங்கிருந்து கிடைக்கவில்லை. நமது ஒற்றர்கள் மேலும் தகவல்களுக்காக பகீரத முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் தளபதியாரே...!

வேங்கை : .....உம்..... இந்நிலையில் நமது மன்னர் உயிர் பிழைத்திருக்க முடியுமென்று நம்புவதற்கில்லை... (நடந்து) எதுவாயினும் நாம் திட்டமிட்டபடி இளவரசருக்கு மகுடாபிஷேகம் செய்து வைத்து இப்பாண்டி நாட்டுப் பேரரசர் எனப் பிரகடனம் செய்துவிட வேண்டியது தான்....!

வைரமுத்து : .....மேலும்....?

வேங்கை : ......உம்..... சொல் வைரமுத்து....!

வைரமுத்து : சோழமன்னனுக்கு அருகில் புஸ்பவனக் கோட்டையில் தான் வீராபிஷேக விழா நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கான தயாரிப்பு வேலைகளுக்காக ஆயிரம் ஆயிரம் சோழத்து வீரர்கள் வைகைக் கரையில் வந்து குவிந்த வண்ணமிருக்கின்றனர்.. இத்தகைய நிலையில்.. இளவரசர் இங்கிருப்பது ஆபத்தாகவும் முடியக்கூடும்.. உடனடியாக நாம் இந்த இடத்தைக் காலிசெய்து விட்டு தூரத்தில் வேறொரு பாதுகாப்பான இடத்திற்குச் சென்று விடுவது நலமென்று எண்ணுகிறேன் தளபதியாரே?

வேங்கை : ...பயம் வேண்டாம் வைரமுத்து! எத்தகைய ஆபத்திலிருந்தும் தப்பிச்செல்ல ஏதுவாகவே சகல ஏற்பாடுகளும் செய்து வைத்திருக்கிறேன்.. மேலும்.. சோழனுக்கு வீராபிஷேக விழா நடைபெறும் இந்த

இடத்திலேயே நாமும் இருப்பது தான் சிறந்த ராஜதந்திரமாகும்- ஏனெனில் பகைவர்கள் எப்போதும் தூரத்தில் தான் எதிரிகளைத் தேடி அலைவார்கள்- ஆனாலும் நாம் எச்சரிக்கையோடு இருப்போம் வீரனே- வா... சோழனுக்கு வீராபிஷேகம் நடைபெறும் இதே திருப்பூவணத்து மண்ணில் அதே முகூர்த்த நேரத்தில் நமது இளவரசருக்கும் மகுடாபிஷேக விழா நடைபெறுவதற்கான தயாரிப்பு வேலைகளை உடனே தொடங்குவோம்... இந்த மண் என்றும் பாண்டிய வம்சத்தினருக்கே சொந்தம் என்பதைப் பாருலகமுழுதும் பறைசாற்றுவோம்!

(செல்கின்றனர்) (காட்சி மாறுகிறது)

காட்சி : 7

இடம் : அலங்கரிக்கப்பட்ட வீடு

பாத்திரங்கள் : வைரமுத்து, நாகமுத்தனார், தளபதி வேங்கை மார்பன், இளவரசன், பொதுமக்கள்.

(வீரன் வைரமுத்துவும் பெரியவர் நாகமுத்தனும் உரையாடிக்கொண்டிருக்கின்றனர்)

நாகமுத்து : ...பாண்டிய மண்ணில் சோழனுக்கு வீராபிஷேகம்.... விஜய மாமுடி... இரத்தம் கொதிக்கிறது...

வைரமுத்து: எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வம் அடிக்கும்! சோமசுந்தரக் கடவுள் சோழனுக்குச் சரியான பாடம் கற்பிக்காமல் ஒரு நாளும் விட மாட்டான்...!

நாகமுத்து : என்ன கோலாகலம்- என்ன கொண்டாட்டம்.... கொடுமை கொடுமை.... பெருங்கொடுமை...

வைரமுத்து: மிகவும் கோலாகலமாக நடைபெறும் அவ்விழாவில் கலந்துகொண்டிருக்கும் லட்சோபலட்சம் மக்களில் நமது மண்ணின் மக்கள் ஓரிருவர் கூடக் கலந்து கொண்டிருக்க மாட்டார்களென்பது திண்ணம்!

நாகமுத்து : இப்போது சோழனுக்கு சுக்கிர திசை!

வைரமுத்து: இயற்கை விளைவித்த கொடுமைகளாலும் மனக்கசப்புகள் குடிகொண்டிருந்த சிற்றரசர்களின்

ஒற்றுமைக் குறைவுகளாலும் பலமற்றிருந்த பாண்டியில் காலூன்றி விட்ட சோழனுக்குச் சுக்கிரதிசை தான் பெரியவரே—!

நாகமுத்து : ...அதோ இளவரசர்!

(இளவரசர் சுந்தர பாண்டியன், தளபதி வேங்கை மார்பன், பொதுமக்கள் வருகின்றனர்)

வேங்கை மார்பா! நேரம் நெருங்கிவிட்டது! தாமதமின்றி இளவரசருக்கு மகுடாபிஷேக விழா நடைபெறட்டும்! (ஒரு பெட்டியைத் திறந்து மகுடத்தை எடுத்து) இதோ மணிமுடி! நெல் மணிகளால் தயாரிக்கப்பட்ட மணிமுடி!

வேங்கை : என்ன! நெல்மணிகளால் தயாரிக்கப்பட்ட மணிமுடியா? (மணிமுடியை வாங்கிப் பார்த்து வியந்து) பவளமும் முத்தும் பதித்த நவரெத்தின முடியைப் போலவே அழகாயிருக்கிறது... கலை அழகோடு விளங்குகிறது! நாகமுத்தனார் அவர்களே- இளவரசருக்கு இராஜமகுடம் அணிவிக்கும் இவ்விழாவினைக் கிராமப் பெரிய தனக்காரரான தாங்களே முன்னின்று நடத்தி வைக்கும்படி பணிவோடு வேண்டிக் கொள்கிறேன்...

நாகமுத்து : ....வேங்கை மார்பா.... இதை என் வாழ்க்கையில் கிடைத்த மிகப்பெரும் பாக்கியமாகவே கருதுகிறேன்- (மணிமுடியைப் பெற்று வணங்கி) திருப்பூவணத்திறைவா.... பூமிக்கு முன் பிறந்த பூமி நாதா... புஸ்பவனேஸ்வரா.... நின்னருளால் சகலமும் நலமுடன் நடைபெறப் பிரார்த்திக்கிறேன் சர்வேஸ்வரா—! (இளவரசன் ஆசனத்தில் அமர்ந்ததும்)

...இளவரசே! இப்பாண்டியம்பதியின் மாமன்னர் மாவீர சந்திரவம்ச குலதிலக சடையவர்ம குலசேகர பாண்டிய பூபதி அவர்கள் தற்போது எங்களிடையே இல்லாத காரணத்தால் நமது வம்ச மரபுப்படி இளவரசராகிய தங்களை இன்று முதல் இப்பாண்டிய மாமண்டலத்தின் மாமன்னரெனப் பிரகடனம் செய்து இம்மணிமுடியை இராஜமுடியாக அணிவிக்கிறேன்!

திருப்பூவணத்திறைவரும் ஆலவாய் அங்கையற்கண்ணி சொக்கேசனும் உங்களுக்குச் சகல சௌபாக்கியங்களும் அருள்வார்களாக..!

(இளவரசனுக்கு மணிமகுடம் அணிவிக்க, எல்லோரும் மலர்தூவி வாழ்த்துகிறார்கள்)

வீரன் : எம்மண்டலமும் கொண்டருளிய பூமண்டலாதிபதி சந்திரவம்ச குலதிலக பாண்டிய சாம்ராஜ்ஜிய பூபதி மாமன்னர் மாறவர்ம சுந்தரபாண்டிய மாதேவர்!

எல் : வாழ்க, வாழ்க! (மலர் தூவி வாழ்த்த-இளவரசன் சபையை வணங்குகிறான்.) எல்லா நலன்களும் பெற்று சீரோடும் சிறப்போடும் நீடூழி வாழ்க மன்னா நீடூழி வாழ்க!

இளவரசன் : (எழுந்து)... என் தந்தையினும் இனிய பெரியவர் நாகமுத்தனார் அவர்களே... என்னை வளர்த்து ஆளாக்கிய தளபதி வேங்கை மார்பன் அவர்களே.... வீரர்களே... வீரமிகு பாண்டியம்பதியின் பிரஜைகளே... நீங்கள் கொடுத்துள்ள இந்த இராஜ்ஜியபாரத்தின் பெரும்பொறுப்பை நான் பூரணமாக நிறைவேற்றப் பாடுபடுவேன் என உறுதியளிக்கிறேன்... கடலெனப் படை கொண்டு கணப்பொழுதில் நமது அமைதியைக் குலைத்து விட்ட சோழனின் பெரும் படையைச் சுக்கு நூறாகத் தகர்த்தொழித்து நமது தாயகத்தைப் பாதுகாக்கவேண்டிய தலையாய ராஜீயக்கடமை நம் முன்னிருப்பதை உங்கள் முன் நினைவுபடுத்திக் கொள்கிறேன்.... நமது மாமன்னரை நம்மிடமிருந்து பிரித்து நம் மாமண்டலத்தின் வீரத்தைக் களங்கப்படுத்தி விட்டதாகக் கருதும் சோழனுக்கு அவன் பரம்பரை என்றும் மறக்கமுடியாத பாடத்தை நாம் கற்றுக் கொடுத்தே ஆகவேண்டும்.... விரைவில் நமது மண்ணை மீட்போம்... எழில்மிகு கயல் மீன் கன்னிக் கொடியை இப்பூண்டலத்தின் எண் திக்கும் உயர்த்துவோம்! பாண்டி மாமண்டலம் என்றும் நமதே! வாழ்க மீன்கொடி! வாழ்க பாண்டிய சாம்ராஜ்ஜியம்! (வணங்க)

வீரன் : வாழ்க பாண்டிய சாம்ராஜ்ஜிய சந்திரவம்ச குலதிலக மாறவர்ம சுந்தர பாண்டிய பூபதி!

எல் : வாழ்க!

வீரன் : வாழ்க தென்பாண்டித் திருநாடு!

எல் : வாழ்க!

(சபை கலைகிறது) (காட்சி மாறுகிறது)

காட்சி : 8

இடம் : மதுரை அரண்மனை

பாத்திரங்கள் : சோழமன்னன் இராஜராஜ குலோத்துங்க சோழன், தளபதி ஜெயவீரதேவன், புலவர் மதுரை நாகனார், மலர்வண்ணன், வீரர்கள், பொதுமக்கள்.

(சோழமன்னன் சபைக்கு வர வாழ்த்தொலி முழங்குகிறது)

வீரன் : முப்புவனமும் வென்றருளிய திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜராஜ குலோத்துங்க சோழவேந்தர்!

எல் : வாழ்க!

வீரன் : திரிபுவன வீரதேவர் இராஜராஜ குலோத்துங்க சோழ மாமன்னர்!

எல் : வாழ்க!

வீரன் : அகிலபுவனம் கொண்டருளிய பூ மண்டலாதிபதி இராஜராஜ குலோத்துங்க சோழபூபதி!

எல் : வாழ்க!

வீரன் : கங்கை கொண்ட சோழர், சோழகேரளர், சோழபாண்டியர், வீராபிஷேக விஜயமாமுடி கொண்ட திரிபுவன வீரதேவர், அகில புவனச் சக்கரவர்த்தி, இராஜராஜ குலோத்துங்க சோழமாதேவர்!

எல் : வாழ்க!

(மன்னன் ஆசனத்தில் அமர்ந்ததும்)

நாகனார் : (உள்ளிருந்து)– சோழமன்னா..!

(வீரன் ஒருவன் ஓடிவந்து)

வீரன் : ....மன்னர் மன்னா.... சினங் கொண்டு சீறிப் பாயும் ஒரு கொடிய வேங்கையின் தோற்றமென ஐயுறும் வண்ணம் யாரோ ஒரு பெரியவர் சபைக்கு வந்து கொண்டிருக்கிறார் பிரபு!

(மதுரை நாகனார் சபைக்கு வந்து)

நாகனார் : ...சோழ மன்னா...!

மன்னன் : பெரியவரே தாங்கள் யாரோ?

நாகனார் : நாகன்! மதுரை நாகன்!

மன்னன் : ...ஓ... நாகன்! மதுரை நாகன்! தமிழ்ச் சங்கத்துப் பெரும்புலவர் நாகனார் அவர்களே... வருக வருக....! வெளி தேசங்கள் சென்று திரும்பியிருக்கும் தங்களை இப்பாண்டி மண்டலத்தின் அரியணையில் சோழன் நானிருந்து வரவேற்கும் பாக்கியம் கிடைத்ததை என் வாழ்க்கையில் கிட்டிய பெரும் பேறாகவே கருதுகிறேன் பேரறிஞரே! தங்கள் வருகையால் நான் பெரிதும் உவகையடைகிறேன் புலவரே!

நாகனார் : போதும் நிறுத்து! வெந்தபுண்ணில் வேல்சொருகுவது போலிருக்கிறது உன் வரவேற்பு!

மன்னன் : ..... இருக்கும்! (ஏளனமாகச் சிரித்து) வேதனையாகத் தானிருக்கும் பெரியவரே வேதனையாகத் தானிருக்கும்...! உங்களைப் பிறந்த இடத்துப் பாசம் விடவில்லை! ஆம்... வளர்ந்த மண்ணின் பாசம்... தின்ற வீட்டுப்பாசம் உங்களுக்கு.... ஏன்..... வந்து நின்ற போதெல்லாம் வாரிக் கொடுத்த வள்ளல் பாண்டியனுக்கு இப்படியும் ஒரு சோதனைக் காலம் இந்தச் சோழனால் ஏற்பட்டு விட்டதே எனும் அழுக்காறு உங்களை ஆட்கொண்டு விட்டதா தமிழறிஞரே....?

நாகனார் : ...சேச்சே... என்ன பேசுகிறாய் சோழா நீ... பொன்னுக்கு ஒரு புகழ் பாடி மண்ணுக்குச் சுமையாக வாழும் மதிகெட்ட கூட்டத்தோடு என்னையும் சேர்த்துக் கொண்டா பேசுகிறாய் நீ... உம்ம்...நீ என்ன செய்வாய்... வெற்றிப் போதையில் தன்நிலை மறந்து கிடக்கும்

உன்னிடமிருந்து வேறென்ன எதிர்பார்க்க முடியும்… வன் செயல்கள் புரிந்துவிட்டு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் குவித்துக் கொண்டிருக்கும் உன்னிடமிருந்து இன்சொல் ஒன்றை எங்ஙனம் எதிர்பார்க்க முடியும்… எனினும்… சற்று நிதானமாகக் கேள் கோமகனே…. இப்பூமண்டல முழுவதையும் வெற்றி கொண்ட உனக்கு இப்போது காலம் சற்று சாதகமாய் அமைந்துவிட்டிருக்கலாம்…. ஆனாலும் காற்று நாளையே மாறியும் அடிக்கலாம் மன்னா…. திரிபுவனத்தையும் வெற்றி கொண்டு விட்டதாகக் கருதிக் கொக்கரிக்கும் உனது படை வலிமை அனைத்தும் ஒருநாள் இப்பாண்டியன் கைபட்டு இருக்குமிடந்தெரியாமல் அழிந்து பட்டும் போகலாம்… இன்று சோழன் பூ மண்டலாதிபதி…. நாளையே பாண்டியன் இச் சர்வ புவனத்துக்கும் அதிபதி… இது அரசர்களாகிய உங்களுக்கு ஒரு விளையாட்டாகப் போய்விட்டது. கேட்டால் வீரவிளையாட்டு என்பீர்கள்…. இதில் எவருடைய சமாதான வார்த்தைகளையும் உங்கள் செவிகள் ஏற்காது என்பதை நான் மிக நன்றாகவே அறிவேன்… நாட்டின் பொதுவான நலன்களில் எங்களைப் போன்றோர்க்கு இயற்கையாகவே அக்கறை இருப்பினும் முக்குல வேந்தர்களாகிய உங்கள் குடிப்பழக்கமாகி விட்ட இந்த வம்புகளிலெல்லாம் நாங்கள் தலையிடுவது நியாயமில்லை என்பதை நான் மிகமிக நன்றாகவே அறிவேன்…. போர்…. அரச தர்மமென்பீர்கள்…. வீரத்துக்கு உரைகல் போர்க்களமென்பீர்கள்… அது பற்றியெல்லாம் நான் ஒருபோதும் உன்னுடன் பேச விரும்பவில்லை…. அதற்காக நான் இங்கு வரவுமில்லை…. கேள்…. மிகவும் கவனமாகக் கேள் மன்னா….! கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தினும், முன் தோன்றி வளர்ந்த மூத்தகுடிமகள் தமிழ்மகளை… இம்மண்ணின் ஒவ்வொரு அணுவையும் உலகத்தின் உச்சாணியில் வைத்த இலக்கியச் செல்வங்களை வாரி வழங்கியுள்ள தமிழ்த் தாயைக் கறைப்படுத்தி களங்கம் விளைவிக்கும் இழிசெயலைத் துணிந்து செய்ய உன்போர்த் தர்மம்

எவ்வாறு அனுமதித்தது என்று தான் கேட்க வந்தேன் சோழமன்னா...! உன் போர்த் தர்மம் எவ்வாறு அனுமதித்தது என்று தான் கேட்க வந்தேன்.....?

மன்னன் : என்ன? (அரியணையிலிருந்து இறங்கி வந்து) தமிழ்த்தாய்க்குக் களங்கமா..... கறைப்படுத்தும் இழிசெயலுக்கு நான் அனுமதியளித்தேனா...? அப்படி ஏதேனும் தவறு நடந்துவிட்டதா பாவேந்தே...?

நாகனார் : ...தமிழ் மண் என்றும் கண்டறியாத் தவறுகள் நடந்து முடிந்து விட்டது! பாண்டியம்பதியின் தொன்மை வாய்ந்த கலாச்சார மாளிகைகள்.... நமது சீரிய பண்பாட்டையும் நிகரற்ற நாகரிகத்தையும் பாருலகுக்கெல்லாம் பறைசாற்றிக் கொண்டிருந்த கல்வெட்டுச் சாசனங்கள்.... தமிழ்நூல் ஆராய்ச்சிக் கேந்திர மண்டபங்கள்... அறச்சாலைகள்... கல்விக்கூடங்கள்... ஏன்... அசக்தர்களின் பாதுகாப்புக்கான அன்னச் சத்திரங்கள், சாவடிகள் ஈறாக அனைத்துமே உன் திடும் பிரவேசத்தால் அழித் தொழிக்கப்பட்டுவிட்டது.... நீ புகுந்து வந்த வழியெங்கும் சான்றோர் செய்த அறப்பணி மனைகளனைத்துமே தகர்த்துத் தரைமட்டமாக்கப் பட்டுவிட்டது... அல்லது... உடைத்து உருக்குலைக்கப் பட்டிருக்கிறது... பல்லாண்டு காலமாகப் பேணிப் பாதுகாத்து வந்த யுத்த தர்மங்கள் உனது காரண காரியமற்ற போர் நடவடிக்கைகளால் மீறப் பட்டிருக்கிறது... சோழமன்னா மீறப்பட்டிருக்கிறது...!

மன்னன் : ....? தளபதி.... தமிழ்வேள் நாகனார் கூறியவற்றைக் கேட்டீரா....?

தளபதி : ஆமாம் வேந்தே! போர் வெறி கொண்ட நமது வீரர் கூட்டம் எதிர்ப்பட்ட அனைத்தையும் தாக்கித் தகர்த்து விட்டமையால் ஏற்பட்ட தவறு மன்னா.... அதற்காக நாம் மிகவும் வருந்த வேண்டியவர்களாகத் தானிருக்கிறோம் மன்னர் மன்னா....!

மன்னன் : ...ஆ...தாயே! தமிழன்னையே! முக்குலத்தோரையும் ஈன்றெடுத்த முதல்வியே பேரமுதே....

பெரும்பொருளே..... என்னை மன்னித்து விடு! எது நடைபெறக்கூடாதோ அதுவே நடைபெற அனுமதித்து விட்ட என்னைப் பெரு மனதுடன் மன்னித்து விடு! திரிபுவனத்தையும் வென்ற வீரகாவியத்தைப் படைத்த சோழமன்னன் தமிழன்னைக்குக் களங்கம் விளைவித்த அபவாதத்தையும் தேடிக் கொண்டதற்காக தமிழன்பர்களே.. தமிழ்ப்பற்றுடையோரே.. தமிழ்ச்சான்றோரே என்னை மன்னித்துவிடுங்கள்! நிகழ்ந்தது எது பற்றியும் வெற்றிப்போதையில் அறியாதிருந்து விட்ட என் பேதமையைத் தக்க தருணத்தில் அகற்றி உண்மை நிலை முழுமையும் உணர வைத்த அறிஞர் பெருந்தகையே நீங்களும் என்னை மன்னித்து விடுங்கள்! தேவி... ஆலவாய் அங்கையற்கண்ணி... மீனாட்சி... மதுரையம்பதியில் வீரம் விளைவித்தேன்.... விவேக மற்ற செயலையும் விளைவித்து விட்டேன்.. திரிபுவனச் சக்கரவர்த்தியென வீராபிஷேகம் செய்து விஜயமாமுடி தரித்துக் கொண்டேன்.... தீராத பழியையும் கூடவே தேடிக்கொண்டு விட்டேன்! ஆம்! தளபதி! இப்பாண்டிய மண்ணில் இனி ஒரு கணமும் இருக்கத் தகுதியிழந்து விட்ட நமது சோழப்பெரும்படை உடனே நாடு திரும்பட்டும்! அத்துடன்.. தமிழ் கூறும் நல்லுலகம் இப்பெரும் பழியை இனி ஒரு போதும் நினைவில் வைத்துக்கொண்டிரா வண்ணம் பொன்னும் பொருளுமாக வாரி இறைத்து நம்மவரால் நாசமாக்கப்பட்டிருக்கும் அறச்சாலைகள் ஆய்வுக் கூடங்கள் எதையும் விட்டு வைக்காமல் புதுப்பித்து மிகப்பெரும் புனருத்தாரணம் செய்து கொடுக்க உடனே நடவடிக்கைகள் தொடங்கட்டும்.. எல்லாவற்றிற்கும் மேலாக நாம் சிறைப்படுத்தியிருக்கும் மன்னர் குலசேகர பாண்டிய பூபதியை உடனே விடுவித்து இந்த ராஜ்ஜிய பாரத்தை நாளையே அவரிடம் ஒப்படைத்து விடுவதற்கான சகல ஏற்பாடுகளும் தங்குதடையின்றி நடைபெறட்டும்..... நான் இங்கிருந்து இப்போதே புறப்படுகிறேன்.....!

அடுத்து இங்கிருந்து வரும் செய்தி நல்லவையாக இருந்தாலன்றி நான் பூரண அமைதி கொள்ள இயலாது என்பதை மனதில் கொண்டு உமது பணி தொடரட்டும்! புலவர் பெருந்தகையே என் இதய கமலங்களை மிக எளிதில் துலக்கிய தங்களின் திண்ணிய அறிவாற்றலை என் உயிருள்ள வரை மறக்க மாட்டேன் அறிஞரே... என்னை மன்னித்து எனக்கு விடைகொடுத்து அனுப்பி வையுங்கள்!

நாகனார் : மாமன்னா! உனது உயர்ந்த பண்பால் இன்று மேலும் உயர்ந்தே நிற்கிறாய்... என்றும் உன்புகழ் நிலைத்து நிற்கும்! நிகழ்ந்து விட்ட தவறுகளை நாளையே சரி செய்து கொள்ளலாம்... ஆகவே அவசரப்படாமல் இங்கிருந்து கொண்டே.....

மன்னன் : மன்னிக்க வேண்டும் தமிழ் மன்னா... நான் இனி ஒருகணமும் இம்மண்ணிலிருக்கத் தகுதியுடையேன் அல்லன்... என்னை வாழ்த்தி வழியனுப்பி வையுங்கள்! அடுத்து- ஒருமுறை தாங்களும் சோழமண்டலத்துக்கு வருகைதந்து என் விருந்தினராகத் தங்கியிருந்து வரவும் வேண்டுகிறேன் தமிழ்வேந்தே...?

நாகனார் : உனது அன்பையும் பண்பையும் தமிழ் மீது நீ கொண்டிருக்கும் பற்றையும் பாசத்தையும் நான் பெரிதும் போற்றுகிறேன் சோழ மன்னா! சோறுடைத்த சோழத்தின் சிறப்புக்கு மேலும் சிறப்பாக இக்காலம் ஒரு சீரிய வரலாற்றுக் காலமாகவே இருக்கும்.....

மகிழ்ச்சியோடு சென்று வா கோமகனே... மீண்டும் விரைவில் நாம் சந்திப்போம்! (சோழ மன்னன் செல்ல – வீரர்கள் பின் செல்கின்றனர்).

வீரன் : மண்ணின் மரபு காத்து தமிழர் பண்பு காத்த சோழப் பெருந்தகை இராஜராஜ குலோத்துங்க சோழ மாவேந்தர்!

எல் : *வாழ்க!*

(சபை கலைகிறது) *(காட்சி மாறுகிறது)*

காட்சி : 9

இடம் : மதுரை அரண்மனை

பாத்திரங்கள் : குலசேகர பாண்டியன் - வேங்கை மார்பன்

(மன்னனும் தளபதியும் உரையாடிக் கொண்டிருக்கின்றனர்)

மன்னன் : வேங்கை மார்பா! உன் பராக்கிரமத்தை நான் பெரிதும் பாராட்டுகிறேன்! சோழனின் அமளி துமளி ஆர்ப்பாட்டங்களனைத்துக்கும் சிறிதும் பதட்டமடைந்து விடாமல் இளவரசன் சுந்தர பாண்டியனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்த உனது சாதுர்யத்தையும் அரசியல் விவேகத்தையும் நான் மிகவும் பாராட்டுகிறேன்– இளவரசனுக்கு முடிசூட்டி வைத்த செய்தியை நாடெல்லாம் அறிவித்து அவன் அரியணை அமரும் தினத்தைப் பெருவிழாவாகக் கொண்டாட ஏற்பாடு செய்வோம்! சோழன் நல்லெண்ணத்துடன் நாடு திரும்பியிருக்கக் கூடுமென நம்புவதற்கில்லை– இருந்த போதும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நமது படை பலத்தைப் பெருக்குவோம்– இனி அன்னியர் எவரும் இப்பாண்டியம்பதியைத் தீண்டாதவாறு பாதுகாக்கத் திட்டமிடுவோம்!

வேங்கை : வேந்தே–!

மன்னன் : உனது வியப்பு எனக்குப் புரிகிறது வீரனே– அமைச்சர் அழகப்பெருமாள் தேவர் என்னைப் பாதுகாக்க எண்ணி எதிரிகளின் வாள் வீச்சுக்குப் பலியானார்! இமைப்பொழுதில் நான் சிறை பிடிக்கப்பட்டேன்! இன்று... ஏதோ தானம் கொடுத்து விட்டுச் சென்றுள்ளதைப் போன்ற சோழனின் சிந்தனை மாற்றத்தின் காரணங்களை ஏற்று மீண்டும் இவ்வரியணையில் வீற்றிருக்க ஏனோ என் மனம் கூசுவதோடு நாட்டின் மிக முக்கிய பிரஜைகளான நீங்கள் இளவரசனுக்கு அணிவித்த மணிமுடியை அங்கீகரிக்க மறுப்பதற்கு நான் தயாராகவுமில்லை.... திருப்பூவண க்ஷேத்திரத்தில் மணிமுடி தரித்துக்கொண்ட சுந்தரபாண்டியனுக்கு திருப்பூவணநாதரின் பேரருளால் சகல கீர்த்திகளும்

உண்டாகுமென்பது என் திடமான நம்பிக்கை...! ஆனாலும்... இந்த ராஜ்ஜிய பாரத்தை இளவரசனோடு உங்கள் தலைகளில் சுமத்திவிட்டு நான் ஒரு போதும் ஓய்வெடுத்துக் கொண்டு விட மாட்டேன் வீரனே... ஆட்சிப் பொறுப்பேற்கும் சுந்தரபாண்டியனின் கரங்களைப் பலப்படுத்த உங்களுடனிருந்தே நானும் உதவுவேன்... இப்போது உங்கள் இளவரசன் ஆட்சி பீடமேறிய செய்தியை உலகுக்கறிவித்து விழா எடுப்போம்! பின்னர் நாட்டை ஒரு குடையின் கீழ் நிறுத்துவோம்! மமதை கொண்ட அந்தச் சோழனின் மண்ணில் நமது மாமன்னன் மாறவர்ம சுந்தர பாண்டியனின் வீராபிஷேக வெற்றி விழாவுக்கான அடித்தளம் அமைப்போம்!

வா போகலாம் வேங்கை மார்பா!

(காட்சி மாறுகிறது)

காட்சி : 9-1

இடம் : சிவலிங்கம் உள்ள நந்தவனம்

பாத்திரங்கள் : பொன்னனையாள்

(பொன்னனையாள் மலர் தூவி லிங்கத்தை வழிபடுகிறாள்)

சௌந்திர நாயகியின் நாயகனே
சரணம் அய்யனே சங்கரனே அரனே —சௌ
வெந்தணல் மெழுகு போல் உருகிடும் உயிர்களை
எந்தை நீயல்லால் (இங்கு) யாரே காக்க வல்லார்
சிந்தை யிரங்கி அருள் ஈசனே ஜெகம் மகிழ
விந்தை புரிந்த மகாதேவனே —சௌ

மங்கைக்கு வரம் அருள மாயவனே வந்தாய்
கங்கையைச் சுமந்து (கொண்டு) லிங்கமாக நின்றாய்
திங்கள் முடிஅணிந்த கெங்காதரனே நின்
பஞ்கஜ மலர்ப்பாதம் நம்பிடும் எனக்கருள் —சௌ

(பொன்னனையாள் செல்லல்)

(காட்சி மாறுகிறது)

காட்சி : 10

இடம் : வீதி

பாத்திரங்கள் : வீரன் பவளம் , விவசாயி சிங்காரம்

(பவளமும் சிங்காரமும் எதிரெதிர் சந்திக்கின்றனர்)

சிங்காரம் : என்னாண்ணே.... எங்கே புறப்பட்டாச்சு....?

பவளம் : சரி தான் போ! நல்ல சகுனம்! அப்பா சிங்காரம்..... நல்லது நடக்கணும்னு சாமியைக் கும்பிட்டு போயிட்டு வான்னு சொல்லப்பா போயிட்டு வான்னு சொல்லு?

சிங்காரம் : கோவிச்சுக்காதே அண்ணே பவளம்.... இப்பத்தான் சண்டையினு போனே... நல்ல வேளையாகச் செத்துப் போயிடாமெ எதிரிகள் கையிலே அகப்பட்டு சிறையிலேயிருந்துட்டு வந்து பத்து நாள் கூட ஆகலை... அதுக்குள்ளற மறுபடியும் சண்டையான்னு கேட்டேன்.... ஏன்னா.... மாடா உழைச்சுக் கொடுக்கிறதுக்கு மகராசன்க நாங்க இருக்கோம்.... உங்களுக்குத்தான் சண்டை சண்டையினு ஓயாத சண்டை ஒழியாத சண்டையாயிருக்குமேன்னு கேட்டுட்டேன்....?

பவளம் : ...உம் சண்டையின்னு வந்துட்டா என்னப்பா செய்றது! மனுசனுக்குத் தன்மானம்னு ஒன்னுருக்கே...

சிங்காரம் : ஆமாமா... இருக்கு இருக்கு...! அதிருக்கட்டுமண்ணே... என்ன அப்படித் திடீர்னு சோழராசா சண்டை போட்டு நம்ம நாட்டைப் பிடிச்சாரு... இப்ப அவராத் திடீர்னு போய்ட்டாரு.....

பவளம் நீ ஒன்னு... திடீர்னு அவரா ஒன்னுந் தெரியாமெப் போயிடலை... பயந்துட்டாரு... தலை தப்பிச்சாப் போதும்னு நாட்டை விட்டுட்டு ஓடிட்டாரு...! இப்ப நம்ம பெரிய மகாராசாவே இளவரசருக்குப் பட்டம் கட்டி விடப்போறாரு... அதுக்குத்தான் நாளை மதுரை அரண்மனையிலே பெரிய விழா... ஆமா, நீ வரலையா அந்த விழாவுக்கு.....?

சிங்காரம் : அட நீங்க ஒன்னு.... வருசமெல்லாம் விழாவாத் தானேயிருக்கு... ஒரு சண்டை..... அதுக்கப்பறம் ஒரு

விழா— இதுதானே அண்ணே நாட்டுலே நாம கண்ட பலன்.... இந்தா பாருங்க.. ஊர்ல நட்டதெல்லாம் தண்ணியில்லாமெக் கருகிச் சாகுது.... குளம் குட்டையெல்லாம் வறண்டு கெடக்கு- இதிலே விழா என்னண்ணே விழா....

பவளம் : அட நீ என்னப்பா... யாரும் தண்ணியைக் கொண்டு வந்து குளத்திலயா கொட்டுவாங்க... மழையில்லேன்னா யார் என்னப்பா செய்றது! இத பாரு... மழையில்லேன்னா தண்ணியில்ல தண்ணியில்லேன்னா வெள்ளாமெயில்லை.... அதெல்லாம் அவங்க அவங்க தலையெழுத்துப் போல நடக்கிற விஷயமப்பா... இந்த விசாரத்தையெல்லாம் விட்டுட்டு நீ இப்ப மதுரைக்கு வா... வந்து பாரு விழாவை... அதிலகூட நம்ம திருப்பூவணம் பொன்னனையாளோட நாட்டியக்கச்சேரி நடக்குது!

சிங்காரம் : என்ன என்ன— பொன்னனையாளோட நாட்டயக் கச்சேரியா— அண்ணே அண்ணே..... அந்தப்பொண்ணு... சும்மா... அப்சரசு மாதிரியா ஜிலுஜிலுன்னு- அழகு அழகு அப்பிடி அழகளணே- பிச்சுத் தின்னுடலாம் போலிருக்கு... நான் ஒருநாள் அந்த நந்தவனத்துப் பக்கமாப் பாத்துட்டு அப்பிடியே அசந்து போய் நின்னுட்டேன் பவளண்ணே!

பவளம் : —உம்- அந்த அழகியோட அரங்கேற்ற நாட்டியத்தை வந்து பாரு- அப்பறம் சோறும் வேணாம், தண்ணியும் வேணாம்!

சிங்காரம் : அப்படின்னா புறப்படுங்கண்ணே—?

பவளம் : (சிரித்து)— சரிவா!

சிங்காரம் : அண்ணே அண்ணே, கொஞ்சம் நில்லுக.... ஒரு எட்டு, ஓடிப்போயி அந்த உழவுமாடுகளைப் பிடிச்சு தொழுவத்துல அடச்சிட்டு வந்திடுறேன்..?

சிங்காரம் : ..... அட அந்த நோஞ்சான்க தானே.... ஙகப்பா ஓடிறப்போகுது... தானா வீட்டுக்குப் ரேயிடும்... நீ

வாப்பா– தாமதித்சுப்போனா அப்பறம் நிக்கக் கூட இடங்கிடைக்காது–!

பவளம் : சரி சரி.... வாங்கண்ணே!

(செல்கின்றனர்) (காட்சி மாறுகிறது)

காட்சி : 11

இடம் : மதுரை அரண்மனை

பாத்திரங்கள் : மாறவர்ம சுந்தர பாண்டியன் ; வேங்கை மார்பன் மற்றும் பொதுமக்கள், வீரர்கள்...
பொன்னனையாள் ; நட்டுவனார்
நல்லார்க்கினியன் ; கமலநயனன்.

(இளவரசன் மாறவர்ம சுந்தரபாண்டியன் அரியணையில் அமர மக்கள் மலர் தூவி வாழ்த்துகின்றனர்)

வீரன் : இராஜாதிராஜ இராஜகெம்பீர இராஜமார்த்தாண்ட இராஜபராக்கிரம சந்திரவம்ச குலதிலக மாமன்னர் மாறவர்ம சுந்தரபாண்டியபூபதி!

எல் : வாழ்க!

வீரன் : சகலபுவனமும் வென்றருளிய பாண்டியவம்ச குலதிலக மாறவர்ம சுந்தரபாண்டியத்தேவர்!

வீரன் : சர்வ சாம்ராஜ்ஜிய மண்டலாதிபதி மாறவர்ம சுந்தரபாண்டிய மாமன்னர்!

எல் : வாழ்க!

(வீரன் கையசைக்க – நட்டுவனார் தாளமிசைத்துப் பாட பொன்னனையாள் நாட்டிய நிகழ்ச்சி மகிழ்ச்சி ஆரவாரத்துடன் நடைபெறுகிறது)

அழகு தெய்வமே....
மனம் கனிந்து ஆடம்மா நாட்டியம் –அழகு
மாமன்னர் முன் ஆடம்மா நாட்டியம்-நம் –அழகு
மாமன்றத்தின் முன் ஆடம்மா நாட்டியம்-இம் –அழகு

அன்னம் பயில்நடை ஆரணங்கே - உன்
கன்னம் சிவந்ததன் காரணம் என்னம்மா -அழகு

மன்மதன் வந்துன்னை முத்தமிட்டானோ
மாமலர் தென்றல் தழுவினதோ அம்மா
புன்னகை அணிகலன் ஒன்று போதாதோ
பொன்னகை சுமந்திடை நோவதும் ஏனம்மா -அழகு

ஆடிமுடிந்த அலுப்போ அம்பலத்தில்
ஆடிமுடிந்த அலுப்போ சத்சபையில்
பாடிமகிழ்ந்த இளைப்போ உமையுடன்
ஆடிமுடிந்த அலுப்போ
ஓடி ஓடிச் செய்த உழைப்பின் களைப்போ உம்மைச்
சாடி எம்மன்னர் தந்த பிரம்படியின் திகைப்போ-ஆடி

ஓடிய பிறை கனன்று ஒளிதரும் சிலிர்ப்போ முகம்
வாடிய சுடர்க் கொடியை அணைந்த படபடப்போ
மூடிய முடி மேல்உறை மலைமகள் முணுப்போ உம்மை
நாடிய என்னை ஆட்கொள்ளும் தயக்கத்தின்
பரிதவிப்போ - ஆடி

(நடனத்துக்குப்பின் காட்சி மாறுகிறது)

காட்சி : 12

இடம் : பொன்னனையாள் வீடு

பாத்திரங்கள் : நட்டுவனார் - கமலநயனன் - செங்கமலம்

(நட்டுவனாரும், கமலநயனனும் வந்து)

நட்டுவனார் : பொன்னனையாள்.. பொண்ணு.. செங்கமலத்தைக் கூடக்காணவில்லையே..

கமலநயனன் : செங்கமாத்தை....! (செங்கமலம் வந்து)

செங்கமலம் : ...அடடே நீங்களா.. வாங்கய்யா வாங்க.. உட்காருங்க..

நட்டுவனார் : பரவாயில்லை செங்கமலம். எங்கே பொன்னனையாள்?

செங்கமலம் : அதை ஏன் கேட்கிறீங்க நட்டுவனாரய்யா.. அவளோட அம்மாவுக்குப் பிடிச்சிருந்த முனி இப்ப இவளையும் நல்லாவே பிடிச்சு ஆட்டுதுங்க.. நேத்து

மதுரையிலிருந்து வந்தவ தானுங்க... அந்தச் சிவலிங்கத்தையே கட்டி அழுதுக்கிட்டிருக்கா....

நட்டுவனார் : அப்படிச் சொல்லாதே செங்கமலம்... இவளோட தாய் மின்னனையாள் மகாபக்தி சிரத்தையுடைய மிகச்சிறந்த பதிவிரதை! உண்மையான சிவபக்திக்கு உதாரணமாக வாழ்ந்தவள் மின்னனையாள்.. இவளுக்கும் இவள் தாயைப் போலவே தெய்வபக்தி!

செங்கமலம் : என்னங்க பக்தி பக்தி... பக்தீன்னா பசிகூடத் தெரியாத பக்தியா... அதுதான் போகட்டும்... ஆசை இருக்க வேண்டாம் பொம்பளைக்கு...? நேத்து மகாராஜா சுந்தர பாண்டிய பூபதி கொடுத்த பொன்னும் மணியும்... அதோ பாருங்க... ஒரு மூலையிலே குப்பை மாதிரிக் கொட்டிக்கெடக்கு... அட அதுவுந்தான் போகட்டும்... இது வரைக்கும் நடைபெறாத அளவிலே கோலாகலமா நடந்திருக்கே நம்ம இளவரசரோட முடிசூட்டு விழா... அந்த... விழாவிலே நடந்ததே இவளோட அரங்கேற்ற நாட்டியம்... அங்கே மலைமலையாக் குவிஞ்சிருக்கே முத்தும்பவளமும் பொன்னும் மணியுமா பரிசுகள்... அதைப்பத்தியெல்லாம் ஒரு நாலு வார்த்தை சொல்லுடீன்னா.... ஊஹீம்....

நட்டுவனார் : (சிரித்து) அவள் சொல்லாவிட்டால் போகட்டும் செங்கமலம்.... நான் சொல்கிறேன்....

கமலநயனன் : நானும் கூட நிறையச் சொல்றேன் செங்கமாத்தை... (சிரிப்பு)

நட்டுவனார் : நேற்று நடைபெற்ற இளவரசருடைய முடிசூட்டு விழா, சோழப் பெரும்படை அராஜகம் செய்துவிட்டுப்போன சில தினங்களில் நடைபெற்ற விழாவாகத் தெரியவில்லை.... எதிரிகள் கால்பட்ட சுவடே தெரியாமல் – நமது பூமியின் வரலாறு கண்டிராத – இதற்குமுன் எவருமே கேட்டறியா மிகப்பெரும் விழாவாக நடைபெற்றது!

கமலநயனன் : பூமியே குலுங்கின மாதிரியா வாணவேடிக்கை...

நட்டுவனார் : ஏதோ– இந்த உலகத்தையே ஒரு நொடியில் வெற்றி கொண்டு விட்டதைப் போல மக்களிடையே உற்சாகம் ஒரு உத்வேகம்! அர்த்தமும் அவசியமும் நிறைந்த வீரஆவேசம்! மதுரையம்பதியே இந்திரலோகமாக மாறிவிட்ட கண்கொள்ளாக்காட்சி!

கமலநயனன் : வீட்டுக்கு வீடு தான தர்மம்.......

நட்டுவனார் : மக்கள் வாரி வழங்கிய... இல்லை இல்லை... வாரி இறைத்த பொன்னும் மணியும் முத்தும்பவளமும் வைரமும்வைடூரியமும் மாணிக்கமும் மரகதமும் தெருவெல்லாம் சிதறிக்கிடக்குது செங்கமலம்!

கமலநயனன் : கூட்டிப்பெருக்கி அள்ளியிருந்தால் கூட கோடிகோடியாத் தேரும் அத்தை....

செங்கமலம் : ... அட அநியாயமே... எனக்குத்தான் இதெல்லாம் பார்க்கக் கொடுத்து வைக்கலை.....

நட்டுவனார் : அது மட்டுமல்ல செங்கமலம்.. அரண்மனையில், சோழப் பெரும் படையை எதிர்த்து வீரசாகசம் புரிந்த ஆயிரக்கணக்கான வீரர்களுக்கு மன்னர் சுந்தரபாண்டியர் வாரி வாரிக் கொடுத்தார்.... மாமன்னர் குலசேகர பாண்டியபூபதி அவர்கள் அவ்வீரர்களைக் கட்டித்தழுவி உச்சி மோந்து வாழ்த்தியருளிய காட்சி உள்ளத்தை உருக்கும் காட்சியாயிருந்ததம்மா... அப்பெரும் விழாவின் உச்சக்கட்ட நிகழ்ச்சிகளாக அமைந்த நிகழ்ச்சிகள் நமது திருப்பூவணத்து மண்ணுக்கு மிகவும் பெருமையளிக்கக் கூடியதாக இருந்த நமது திருப்பூவணத்திறைவன் லிங்கேஸ்வரன் அருளிய கிருபாகடாட்சம் தான் செங்கமலம்....!

செங்கமலம் : சொல்லுங்க...சொல்லுங்க... விபரமாச் சொல்லுங்கய்யா நம்ம ஊருக்குக் கிடைச்ச பெருமையை....?

நட்டுவனார் : அன்று... சோழமன்னனுக்குப் பணிந்து அவனது வீராபிஷேக விழாவில் கலந்து கொள்ள மறுத்து

உயிர் துறந்தும் ஊரை விட்டே ஓடித் தலை
மறைவாக வாழ்ந்தவர்களுமான
எழுத்தாயிரமுடைய ஆயிரத்து முப்பது அந்தணர்
குடும்பங்களுக்கும், அவர்கள் தலைமறைந்து வாழ்ந்த
இராஜகெம்பீரம் முதல் சதுர்வேத மங்கலம்
வரையிலான நாற்பது கிராமங்களையும்
அவர்களுக்கே பிரம்மதேயமாகவும்
திருப்பூவணத்திறைவருக்குத் தேவதானமாகவும்
மான்யமாக வழங்கியது ஒரு மாபெரும் சிறப்பு
நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சிக்கு முத்தாய்ப்பாக
உடனடியாகவே நமது புஸ்பவனேஸ்வரப்
பெருமானுக்கு இராஜகோபுரம் எழுப்ப
வேண்டுமென்பதும் மன்னரின் உத்தரவு—

செங்கமலம் : என்ன என்ன..... திருப்பூவணத்தாருக்கு
ராஜகோபுரமா.. ராஜயோகம் தான் நம்ம ஊருக்கு-
சொல்லுங்க சொல்லுங்க! சொல்லுங்கய்யா......

நட்டுவனார் : மற்றுமொரு சிறப்பான நிகழ்ச்சியையும் கேள்
செங்கமலம்! நினைவினின்றும் என்றும் நீங்காத
நிகழ்ச்சி... அதுவே நமது பொன்னனையாளின்
அதிஅற்புத அரங்கேற்ற நாட்டிய நிகழ்ச்சி.... ஓ...
அங்கு பொன்னனையாளா ஆடினாள், இல்லை..
அந்த அம்பலவாணனே அவளை ஆட்டுவித்தான்..
சபையே மகிழ்ச்சியில் சுழன்று ஆடியது....
மதுரையம்பதியே ஆனந்தக் கூத்தாடியது
செங்கமலம்.... மாமன்னர் மனம் நெகிழ்ந்து
பாராட்டினார்... தாயைவிட குட்டி பதினாறடி
எட்டியே பாய்ந்து விட்டது எனவும் கூட
வெகுவாகப் புகழ்ந்தார்... மன்னர் சுந்தரபாண்டிய
பூபதி வழங்கிய பரிசுகள் இதுவரை எவரும்
அடைந்திராத பெருமையுடையதாயிருந்தது—
இளவலின் கண், அழகுச் சிலை நமது
பொன்னனையாளின் மீது பதிந்துவிட்டது என்பதை
எல்லோராலும் உணர முடிந்தது செங்கமலம்!

கமலநயனன் : ஆமாத்தை.... சுந்தர பாண்டிய பூபதி நம்ம பொன்னனையாள்கிட்ட மனசைப் பறி கொடுத்துட்டாரு.. ஆனா.... மயங்கிவிழத்தான் மறந்துட்டார் அத்தை...? (சிரிப்பு)

நட்டுவனார் : ......எடுத்த எடுப்பிலேயே - தன் முதல் பிரவேசத்திலேயே மன்னரின் அபிமானத்தையும் அரசு நர்த்தகி என்ற பெரும்புகழையும் தேடிக்கொண்டாள் பொன்னனையாள்...!

செங்கமலம் : எல்லாம் உங்க ஆசீர்வாத பலன் தானய்யா.....

நட்டுவனார் : ஆண்டவன் அனுக்கிரஹமும் வேண்டும் செங்கமலம்.. இறையருள் நிரம்பப்பெற்றவள் பொன்னனையாள்.. செய்யும் பணியைத் தெய்வட பணியாகக் கருதும் இயல்பும் அதற்கான திடசித்தமும் தெளிவுமுள்ளவள்.....!

செங்கமலம் : எல்லாம் இருக்கு! நிறையக் குறையுமிருக்கே வாத்தியாரய்யா.....?

நட்டுவனார் : குறைகளை நீக்கிக்கொண்டு மன்னர் மனம் கவர்ந்து விட்ட இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டால் மதுரையம்பதியின் ராஜகோபுரத்தில் நின்று ஆடலாம்!

செங்கமலம் : இவ எங்கே வாத்தியாரய்யா பயன்படுத்தப் போறா.. அவதான் அந்த சிவலிங்கத்தைக் கட்டி அழுதுக்கிட்டிருக்காளே!

நட்டுவனார் : ....உம்ம்.. கலைத்தாயின் பேரருளும் புஸ்பவனேஸ்வரரின் கருணா கடாட்சமும் நிறையப் பெற்றுள்ள பொன்னனையாளுக்கு நாம் என்ன சொல்லி விட முடியும் செங்கமலம்....?

செங்கமலம் : குருநாதர் நீங்கள்! அவள் குணத்தை ஒருவழிப் படுத்த உங்களைத் தவிர வேறு யாரால் முடியும் வாத்தியாரய்யா...?

நட்டுவனார் : உம் உம்... முயற்சிப்போம் செங்கமலம்!

செங்கமலம் : உங்களால் முடியுமய்யா— நிறையச் சொல்லுங்கள்— அடிமேல் அடி வைத்தால் அம்மியும் நகருமே.....!

நட்டுவனார் : இறைவன் சித்தம் எப்படியோ...ம்ம்... நான் சென்று வருகிறேன்..... பொன்னனையாளிடம் நான் வந்து போனதாகச் சொல் செங்கமலம்!

கமலநயனன் : இந்தக் கமலும் வந்துபோனதாக அவ காதிலே போட்டு வை செங்கமாத்தை.....

நட்டுவனார் : ......மேலும்..... வருகிற சித்திரைப் பெருவிழாவன்று அரண்மனையில் நாட்டிய நிகழ்ச்சி உண்டு என்பதையும் அவளுக்கு ஞாபகப்படுத்து செங்கமலம்!

செங்கமலம் : ஆகட்டும் வாத்தியாரய்யா.....

(செல்கின்றனர்) (காட்சி மாறுகிறது)

காட்சி : 13

இடம் : ஒப்பனை அரங்கம்

பாத்திரங்கள் : பொன்னனையாள் - நட்டுவனார் - மன்ன்ன் மாறவர்ம சுந்தர பாண்டியன்

(பொன்னனையாள் ஒப்பனை செய்துகொண்டிருக்க நட்டுவனார் வருகிறார்)

நட்டுவனார் : .....பொன்னனையாள்.....

பொன் : ......ஐயா, நான் தயாராகிவிட்டேன்.

நட்டுவனார் : பொன்னனையாள்! உன் மனதையும் திடமாகத் திறந்து வைத்துக்கொண்டு தயார்ாகவேயிரு— மன்னர் சுந்தரபாண்டியபூபதி அவர்கள் உன் மனமறிய சற்று நேரத்தில் இங்கே வரப்போகிறார்—!

பொன் : என்ன! மன்னர் என் மனமறிய வரப் போகிறாரா—? பெற்றவர் பிள்ளையைப் பற்றி அறிய மாட்டாரா என்ன! விபரீதமான வேறு சோதனைகள் எதற்கும் என்னை ஆளாக்கி விடாதீர்கள் ஆசிரியரே—?

நட்டுவனார் : விபரீதமான சோதனை எதுவுமில்லை பெண்ணே— மன்னர் உன்னை நேசிக்கிறார்!

பொன் : என்ன...?

நட்டுவனார் : பாண்டி மாமண்டலத்தின் அரசு நர்த்தகியான நீ இனி மா மன்னரின் அந்தரங்கக் காதலியாகவும் பவனிவரப்போகிறாய்...?

பொன் : தவறு! தவறு பெரியவரே தவறு....! தலை நீட்டித் தன்னை ஒருவரிடம் ஒப்படைத்துவிட்ட பெண் ஒருத்தியை மண்ணாளும்மன்னர் விரும்புவது மிகப்பெரும் தவறு! மாற்றான் மனைவியை விரும்புவது தவறினும் பெரிய தவறு குருவே!

நட்டுவனார் : என்ன! மாற்றான் மனைவியா... நீயா... என்னம்மா சொல்கிறாய்?

பொன் : ....ஆம்! இதோ... என் தாய் மின்னனையாள் திருப்பூவணத் திறைவருக்காக அணிந்து கொண்ட முத்தாரம்! தங்கத் திருமாங்கல்யம்! என் தாய்க்கு இன்மையில் கிடைக்காத அப்பெரும்பேற்றினை இப்பிறவியிலேயே நான் அடையவிரும்பி.....

நட்டுவனார் : (சிரித்து) ஓ... அதுவா... அது தெய்வபக்தியம்மா...?

பொன் : ஆமாம் குருநாதா! தெய்வபக்தி தான்... காதலாகிக் கசிந்துருகிக் கலந்த தெய்வபக்தி... திருப்பூவணத் திறைவனிடம் என்னைப் பூரணமாக ஒப்படைத்துக் கொண்ட பக்தி! என்றோ அவர் என்னை ஏற்றுக் கொண்டு விட்டார்... அவருடன் இரண்டறக் கலந்து விட்ட நான் இப்போது கன்னிப் பெண்ணல்ல கலைப் பேரறிஞரே!

நட்டுவனார் : கதை பேசாதே! காலால் உதைத்துத் தள்ளிவிடாதே தானாக வரும் சீதேவியை...!

பொன் : கடுஞ்சொல் வேண்டாம் கலைஞரே! இப்பிறவியில் இத்திருமேனியை திருப்பூவணத் திறைவனைத் தவிர இப்புவியில் வேறு எவ்வளவு பெரியவராயினும் தீண்ட அனுமதிக்க மாட்டேன் பெரியவரே... இது என் தாய் மீது ஆணை!

நட்டுவனார் : அரச ஆணையை மீறுவது...

பொன் : பிறர் பொருளை அபகரிக்க நினைப்பதற்குத் தான் அரசு ஆணை என்று பொருளா அறிஞரே....
(மன்னர் வந்து மறைந்திருந்து கவனித்தல்)

நட்டுவனார் : நீ கடவுள் பெயரால் கற்பனையில் உலவுகிறாய் பெண்ணே!

பொன் : கடவுளே கற்பனையானால் என் நினைவுகளும் கற்பனையாகவே நின்றுவிட்டுப் போகட்டும் கலைஞரே....!

நட்டுவனார் : நிதானமற்ற சிந்தனை... அடித்தளமில்லாத மனக்கோட்டை.... குறையே சொல்ல முடியாத குருட்டு நம்பிக்கை!

பொன் : முரட்டுத்தன மறியாத குழந்தைப் பிள்ளை நான்.... முரண்டு பிடிக்கும் நிலைக்கு என்னை ஆளாக்கிவிடாதீர்கள் ஆசிரியரே....?

நட்டுவனார் : என்ன! (சிந்தித்து – நடந்து) இருக்கட்டும்– இவ்வுலகச் சிற்றின்ப ஆசைகளற்று ஒரு பேரின்ப மோன நிலைக்கு ஆளாகி விட்டதாகக்கூறும் உனக்கு பொன் மீதும் பொருள் மீதும் கொண்ட பற்று சிறிதும் நீங்கியதாகத் தெரியவில்லையே ஏன்.... புறஇன்பங்களையெல்லாம் துறந்து இறைவனைச் சேர்ந்துவிட்டதாகக் கூறும் உனக்குப் பொன்னும் பொருளும் எதற்கம்மா பூங்கொடி....?

பொன் : (சிரித்து).... என் தந்தையினும் இனியவரே.... தங்கள் சந்தேகமும் சரிதான் கலைப் பேரறிஞரே... ஒரு கவளம் சோற்றுடன் என் பிராணேசர் பூவணத்தாரின் காலடியில் கட்டுண்டு கிடக்க விரும்பும் எனக்கு இப்போகப் பொருள் எதுவும் வேண்டவே வேண்டாம் அன்பரே.. ஆனாலும்.... இந்தச் சொக்கேசன் அடிமைக்கு ஒரு சிறு ஆசை.... அது மிகப்பெரும் பேராசை– ஆம்– பேராசை தான்– கலைத்தாயின் பேரருளால் கிட்டிய அப்பொன்னால் அந்த ஆடலழகன் லிங்கேஸ்வரப் பெருமானை அப்படியே முழு உருவமாக வார்த்தெடுத்து என் கண்கள் குளிரக் கண்டு அகங்குளிர அப்படியே ஒருமுறை ஆலிங்கனம் செய்து (கண்களை மூடிப்

பரவசத்துடன்)... பூமிநாதா.... புஸ்பவனேஸ்வரா...
ஆருயிர்நேசா... சொக்கேசா... சோமசுந்தரா...
மின்னனையாள் துணைவா... பொன்னனையாள்
இதயம் கவர்ந்த தலைவா...

நட்டுவனார் : பொன்னனையாள்! இதென்ன பிதற்றல்! பித்தம் தலைக்கேறி விட்ட சித்த பிரமை உனக்கு.. ஆ! மன்னர்! (மன்னர் வருதல்)

பொன் : ...மன்னர்... (மருண்டு)... ஆ? மன்னர் மன்னா... இந்த அபலையைக் காப்பாற்றுங்கள் மகாபிரபு! (மண்டியிட்டு வணங்குகிறாள்)

நட்டுவனார் : (வணங்கியபடி)... மாமன்னா... விவரமறியாத விளையாட்டுப் பருவம் இவளுக்கு.... விபரீதமாகச் சிந்திக்கிறாள்... சிறுமியை மன்னித்தருள வேண்டும் மகாபிரபு...!

மன்னன் : ... நல்லார்க்கினியரே... உங்களிடையே நடைபெற்ற உரையாடல் அனைத்தையும் நான் கேட்டுக்கொண்டு தானிருந்தேன்!

நட்டுவனார் : ...பிரபு?

மன்னன் : ...ஆம்... கேட்டுக்கொண்டு தானிருந்தேன் அன்பரே... பொன்னனையாள் ஏதுமறியாக் குழந்தைப் பெண்ணல்ல... தன் கலைத் திறத்தால் நம் பாண்டியம்பதிக்கே பெருமை சேர்த்த நர்த்தன வித்தகி இவள்... தம் உள்ளத்தை நம் மண்ணின் மரபுக்கேற்ப வைராக்கியப் படுத்திக் கொண்டிருக்கிறாள்... அவள் வைராக்கியம் வெறும் தெய்வபக்தியால் ஈர்க்கப்பட்டது மட்டுமே என்பதை அவளாகவே என்று உணர்ந்து திரும்புகிறாளோ அதுவரை அவள் விருப்பத்துக்கு விரோதமாக அவளிடம் யாரும் எதுவும் பேச வேண்டாம். பாண்டிய நாட்டின் தலைசிறந்த கலைப் பெட்டகம் இவள்... நமது பே'ரபிமானி! இன்று முதல் இவளுக்குத் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு இப்போதே உத்திரவிடுகிறேன்... மேலும் இவள்

விரும்பிய திருப்பூவணநாதரின் திருவுருவத்தைப் பொன்னால் உருவாக்கித் தரும் சிறந்ததொரு சிற்பியை உலகத்தில் எங்கிருந்த போதும் அழைத்து வர உடனே ஆட்களை அனுப்பி வைக்கிறேன்...

நட்டுவனார் : ...மாமன்னா...?

மன்னன் : ...கவருதல் எளிது... அது தர்மமல்லவே கலைஞரே... அவள் மனம் கனியும் காலம் வரும்... அதுவரை காத்திருப்போம்... இப்போது சபைக்குப்போவோம்! (செல்ல)

நட்டுவனார் : .....! பொன்னனையாள் புறப்படு! (செல்ல)

பொன் : பொன்னார்மேனியனே... பிறைசூடிய பெருமானே... இறைவனே... (ஓடுகிறாள்).

(காட்சி மாறுகிறது)

காட்சி : 14

இடம் : வீதி

பாத்திரங்கள் : பவளம் - சிங்காரம்

(பவளமும் சிங்காரமும் எதிர் எதிர் சந்திக்கின்றனர்)

சிங்காரம் : என்னாண்ணே... எங்கே புறப்பட்டாச்சு?

பவளம் : விடிஞ்சது போ! கேட்டுட்டீல... இனி உருப்பட்டாப்ல தான்!

சிங்காரம் : கோவிச்சுக்காதேண்ணே... விடிஞ்சதும் பொழுதுமா அரண்மனையிலே விழா விழான்னு போவியே... அப்படி ஏதாச்சியும் விழாவான்னு கேட்டுட்டேன்...!

பவளம் : நீ ஒன்னு.... விழாவாவது ஒன்னாவது.... நம்ம மகாராசா சண்டைக்கு வான்னு சோழ நாட்டை இழுக்கிறதுக்கு ஆளு அனுப்பிச்சிட்டாரு...போனவன் எப்படி வர்ரானோ... நாளையோ பின்னையோ சண்டைக்குப் போகணுமப்பா சண்டைக்குப் போகணும்!

சிங்காரம் : அதுக்கென்னண்ணே கவலை? அது தான் தன்மானம்னு ஒன்னுயிருக்கேன்னு நீ தானே அடிக்கடி சொல்வே...?

பவளம் : ஆமாமா! இருக்கு... இருக்கு.... நீ வேறெ.. வீட்ல ரெண்டு குமரு கெடக்கிறதக் கரையேத்த முடியலை.... சேவுகந்தான் அரண்மனையிலே.... செத்தம்னுமில்ல பொழச்சம்னுமில்ல....? (செல்ல)

சிங்காரம் : உம்.. கொள்ளுன்னா ஆஹாஹா.. கடிவாளம்ன்னா ஹூஹூஹூ..? (செல்லல்)

(காட்சி மாறுகிறது)

காட்சி : 15

இடம் : மதுரை அரண்மனை

பாத்திரங்கள் : மன்னர் மாறவர்ம சுந்தரபாண்டியன் - தளபதி வேங்கை மார்பன் - வைரமுத்து - வீரர்கள் பொதுமக்கள் - ரோமாபுரி சிற்பி.

(வீரர்கள் பொதுமக்கள் சூழ மன்னன் ஆசனத்தில் அமர்ந்திருக்க தளபதி எழுந்து)

வேங்கை : மன்னர் மன்னா! சோழநாடு சென்று திரும்பிய வீரன் வைரமுத்தன் சபைக்கு வந்து கொண்டிருக்கிறான் பிரபு...

(வைரமுத்து வந்து வணங்கி)

வைரமுத்து : மாவேந்தே! சோழபுரத்து மன்னர் இராஜராஜ குலோத்துங்க சோழதேவரை அவரது கொலு மண்டபத்திலேயே சந்தித்தேன்! எமது கொற்றவர் சமீபத்தில் சேர நாட்டை வென்று 'சேரத்தை வென்றருளிய பாண்டி மாதேவர்', 'கோநாடு கொண்ட கோமகன்' 'சேரபாண்டியர்', 'கேரளபாண்டியர்', என்றெல்லாம் வீரச்சிறப்புப் பட்டங்களைப் பெற்றுத் திரும்பிய வரலாற்று நிகழ்ச்சிகளைக் கூறி சோழ மண்ணில் எமது மாவேந்தரின் வீராபிஷேக விஜயமாமுடி பற்றிய அபிலாஷையை வெளியிட்டேன்! சீற்றம் கொண்டார் சோழர்! தஞ்சைத் தரணியில் பாண்டியர் படைவீரர்களுக்குச் சமாதி கட்டுவேன் எனத் துள்ளிக் குதித்தார்....!

எல் : ஹ் ஹ்...!

வைரமுத்து : ...மீன்கொடி வேந்தரின் வீராபிஷேக வெற்றிவிழா விண்ணெட்டும் மண்ணெல்லாம் கோலாகலமாகக் கொண்டாடும் காலத்துக்கு நாள் குறித்து முகூர்த்தக்கால் நட்டு வைக்கும் படி கோரித் திரும்பியுள்ளேன்....! சோழத்தில் போர் முரசம் ஒலித்துக் கொண்டிருக்கிறது பிரபு....!

மன்னர் : —ஓ— சிறப்பான திக்விஜயம் உன்னுடையது வீரனே- அந்தச் சோழதேவனின் கொட்டத்தை அடக்குவோம்... காவேரிக்கரைப் பூமியைக் கைப்பற்றுவோம்... அங்கு வீரம் விளைவித்து வீராபிஷேக விஜயமாமுடி தரிப்போம்- ஆலவாய்ப் பெருநாடு சோழனால் இழந்த பெருமையை மீண்டும் நிலைநிறுத்துவோம்!

(வைரமுத்து வணங்கிச் செல்ல ரோமாபுரி சிற்பி வருதல்)

சிற்பி : வணக்கம் மன்னர் மன்னா!

மன்னன் : ...ரோமாபுரி சிற்பக்கலைஞரே- வாருங்கள்! நீங்கள் போன காரியம் என்னவாயிற்று....?

சிற்பி : மகாராஜா- திருப்பூவணம் சென்றேன்... அரசாங்க நர்த்தகி பொன்னனையாளைச் சந்தித்தேன். ஆள் உயரத்தில் சிலை ஒன்று செய்ய வேண்டிய அளவுக்கு அவளிடம் தங்கம் குவிந்திருப்பதையும் கண்டேன்... அப்படியே உருக்கி எடுத்து அழகான சிலை ஒன்றை வடித்து விடமுடியும்! ஆனால்....

மன்னன் : ....ஆனால்.... சொல்லுங்கள் சிற்பியாரே...?

சிற்பி : செதுக்க வேண்டிய வடிவம் பற்றி- ஆமாம்... அந்த உருவம் பற்றி அவளால் தீர்மானிக்க முடியவில்லை மகாராஜா....!

மன்னன் : என்ன? வடிவமற்ற உருவமா?

சிற்பி : வடிவமற்ற உருவம் ஏது மகாராஜா? மகாராஜா மாறவர்ம சுந்தர பாண்டிய பூபதியாகிய தங்களின் அழகையும் ஆண்மைத் திறத்தையும் விவரித்தேன்— அவள் ஒப்புக்கொள்ளவில்லை... மாமன்னர்

பரம்பரையில்– எவரையும் ஏற்க மறுத்துவிட்டாள்–! கடவுள்கள்– உங்கள் நாட்டில் ஊருக்கு ஒன்று பத்து எனக் கொலுவீற்றிருக்கும் அனைத்துக் கடவுள்களின் அழகான உருவங்கள் பற்றியும் ஒன்று விடாமல் கேட்டேன்– அவள் ஒப்பவில்லை– பதிலாக– அவள் மனதில்– இதய நினைவில் ஒரு அழகான கடவுள் இருக்கிறாராம்– அவர் தான் அவளுடைய புருஷக் கடவுளாம்– அவரைப் போன்ற உருவம் செய்து கொடுக்க வேண்டுமாம்!– அப்படி– அவள் மனதில் நினைத்திருக்கின்ற ஒரு உருவத்தை இந்த உலகத்தில் எந்த சிற்பக் கலைஞனாலும் செய்துதர இயலாது மகாராஜா!

மன்னன் : என்ன! மனதில் நினைத்திருக்கும் உருவத்தைச் சிலையாக வடிப்பதா?

சிற்பி : ஆமாம் மகாராஜா..... அவள் விருப்பம் அது.... கலைஞன் ஒரு கருப்பொருளை மனதில் கொண்டு அதன்பின்னணியில் கற்பனையாக விரிவாக்கப்பட்ட கலைப்படைப்புக்களை உருவாக்குகிறான்– பொன்னனையாள் கூற்றைப்போல மற்றவர் நெஞ்சில் நிழலாடும் மானசிகமான ஒரு மாயத் தோற்றத்தை அடையாளம் கண்டு படைப்புக்களை உருவாக்குவதென்பது மனிதக் கலைஞர்களுக்குச் சாத்தியமில்லை மகாராஜா.....?

மன்னன் : –இவ்வாறெல்லாம் அவளிடம் விளக்கினீரா?

சிற்பி : —எந்த விளக்கத்தையும் அவள் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை.... மன்னிக்க வேண்டும் மகாராஜா.... பொன்னனையாள் தற்போது சுய நினைவில் இல்லை.... அவளுக்குச் சித்தப் பிரமை....!

மன்னர் : —ஆ— இருக்கட்டும்! தளபதியாரே! இக்கலைஞருக்குத் தேவையான சகலமும் கொடுத்துத் தகுந்த பாதுகாப்போடு வழியனுப்பி

வையுங்கள்! அடுத்து..... சோழநாட்டில் நமது வீராபிஷேகம்! பிறகு பொன்னனையாள் விருப்பம் பற்றிச் சிந்திப்போம்!

(சிற்பி வணங்கிச் செல்ல)

வேங்கை : போர் முரசம் ஒலிக்கட்டும்!

(முரசம் ஒலிக்கிறது)

வீரன் : சந்திரவம்ச் குலதிலக திருபுவன திக்விஜய மாறவர்ம சுந்தரபாண்டிய மாதேவர்!

எல் : வாழ்க!

வீரன் : வாழ்க தென் மாமண்டல பாண்டித்திருநாடு!

எல் : வாழ்க, வாழ்க!

(சபை கலைகிறது) (காட்சி மாறுகிறது)

காட்சி : 16

இடம் : பொன்னனையாள் வீடு

பாத்திரங்கள் : கமலநயனன் - செங்கமலம் - பொன்னனையாள்

(கமலநயனன் அழுது கொண்டுவர செங்கமலம் வந்து)

செங்கமலம் : ....டேய் கமலு..... ஏன்டா இப்படி அழுது தொலைக்கிறே வெள்ளிக் கிழமையும் பொழுதுமா..?

கமலநயனன் : வேறென்ன! அந்த விடியா மூஞ்சிக் கலைஞன் என்னோட பொன்னனையாளைப் பார்த்துப் பைத்தியம் பிடிச்சவன்னு சொல்லிட்டுப் போறானே!

செங்கமலம் : அதுக்காக....?

கமலநயனன் : அதுக்காகவா! அவன் மட்டும் என் கையிலே அகப்பட்டிருந்தா.. அரண்மனையாயிருந்தாலும் இருந்துட்டுப் போகட்டும்னு அப்பிடியே பிடிச்சு....!

செங்கமலம் : உக்கும்.... அகப்படாத வரைக்கும் நீ தப்பிச்சே.... போடா போடா, இவனே.. அவன் ரோமாபுரியிலேயிருந்து வந்த சிற்பியடா ரோமாபுரி சிற்பி! பெரிய மேதாவி.....!

கமலநயனன் : ஆங்.... பெரிய...மே தாவி.....! அதுதான் பொன்னனையாள் சொல்றபடி சிலை செய்ய முடியலை.....

செங்கமலம் : அவ சொல்ற சிலை செய்ய ஆண்டவனே வந்தாலும் முடியாதுடா முடியாது.....
(பொன்னனையாள் வருகிறாள்)
இவ... ஏதோ... மனசிலே யாரையோ அடைச்சு வச்சிருக்காளாம்.. அவரு தான் அழகாம்.. என்னடா பைத்தியம் இது, மனசில் யாரை வேணாலும் எப்படி வேணாலும் அழகு அழகாப் பண்ணிக்கிடலாம்.... அது வெளியே தெரியுமா.... அதோ அடர்ந்த கிருதாவும் நீண்ட கிடாய் மீசையுமா கையிலே பெரிய அரிவாளுமா நம்ம கண்மாய்க் கரையிலே கம்பீரமா ஆஜானுபாகுவா காவல் இருக்காரே ஆணழகன் நம்ம கருப்பணசாமி... அவரோட அழகுக்கு மேலயாடா ஒரு அழகு இருக்கு.... அதை விட்டுட்டு என்னமோ மனசிலே இருக்காம் மனசிலே.....

கமலநயனன் : என்னாத்தை நீ.. நம்ம கருப்பண சாமியோட பொத்தாம் பெரிய உருவச் சிலையைத் தங்கத்தாலே செய்ய முடியுமா..... அதுக்கு வண்டி வண்டியாகக் களிமண்ணுல வேணும்.. அதுக்கு எங்கே போறது...?

செங்கமலம் : வேறெங்கேடா போகனும் செம்மண்ணு! அதுதான் வேண்டிய களிமண்ணு உன்னோட தலையிலேயும் இவளோட தலையிலேயும் இருக்கேடா...!

கமலநயனன் : (தலையைத் தொட்டுப்பார்த்து) ஹ்....? அப்படியே காணலையினாலும் கூட உன்னோட தலையிலேருந்து எடுத்துக்கலாமா அத்தை.....!

செங்கமலம் : அடச்சீ, வாயை மூடுடா அசடு! அத்தை மூதேவி பிடிச்சவளுக்கேத்த அம்மான் தெம்மாளி நீ..... ரெண்டு பேருமா எப்படியோ கட்டி அழுங்க..... (செல்கிறாள்)

கமலநயனன் : உம்ம்...? பொன்னனையாள், பொன்னனையாள், உண்மையைச் சொல்லு... உனக்குப் பைத்தியமா பிடிச்சிருக்கு....?

பொன் : இதுவரை பிடிக்கவில்லை மாமா... இனிமேல் நான் செய்யப் போகும் செயலால் தான் எனக்குப் பைத்தியம் என்ற பட்டமே கிடைக்கப்போகிறது மாமா....

கமலநயனன் : வேண்டாம் பொண்ணு வேண்டாம்! அப்படி எதுவும் செய்துடாதேம்மா... நான் இப்பவே தேசாந்திரம் புறப்பட்டுப்போய்... எங்கேயிருந்தாலும் தேடிக்கண்டுபிடிச்சு.... உன் மனசு போல சிலை செய்ற கலைஞனைக் கையோட கூட்டிவர்ரேன் பொண்ணு....

பொன் : வேண்டாம் மாமா வேண்டாம்! கலைஞன்... சிலை... எல்லாம் முடிந்து விட்ட கனவாகி விட்டது.... என் எண்ணத்தில் குடி கொண்டிருக்கும் இறைவனைச் சிலை வடிவில் அரவணைத்துக் கொள்ளத் துடித்த எனது இதயத் துடிப்புக்கள் இப்போது சிதைந்து ஓய்ந்துவிட்டது... இனி இதுபற்றிச் சிந்திப்பது பேதமை மாமா பெரும் பேதமை! ஆகவே தான்.... சிலை செய்ய நினைத்துக் குவித்துள்ள பொன்னையும் மற்றும் பொருட்களனைத்தையும் நாளை முதலே ஏழை எளிய மக்களுக்குத் தானமிடுவது என்று தீர்மானித்து விட்டேன்! *(செங்கமலம் வந்து கவனிக்கிறாள்)*

கமலநயனன் : ....தானமா! அய்யோ! வேண்டாம் பொண்ணு வேண்டாம்.... அப்படி எதுவும் செய்துடாதே! எல்லாத்தையும் தானம் கொடுத்துட்டா அப்பறம் நாமும் ஏழையாய்ப் போயிடுவோம்! அப்பறம் ஊரிலே உன்னையும்.... என்னையும் கூட யாரும் மதிக்க மாட்டாங்க.....?

பொன் : எவரும் மதிக்க நான் வாழ விரும்பவில்லை மாமா... பிறக்கும் போது எதையும் எவரும் கொண்டு

வருவதில்லை! கொண்டு போவதைப் போல குவித்து வைத்துக் கொண்டிருப்பதிலும் பயனில்லை.

செங்கமலம் : ....ஏண்டியம்மா.... சந்யாசம் போப்போறியா....?

பொன் : இல்லக்கிழத்தி சந்யாசி ஆகிவிட முடியுமா? இனி முழுநேரமும் என் இறைவனுக்குத் தொண்டு புரிவேன்... முன் நிகழ்ச்சியாக.... இப்போது என் எண்ணத்தை ஈடேற்ற இயலாத பொன்னையும் பொருளையும் தானமிடப் போகிறேன்.....!

செங்கமலம் : தானமா? அடி அசடே! இனி ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் இதைப் போல செல்வம் சேர்த்துப் பார்க்க முடியாதுடி ஏமாளிப் பெண்ணே!

பொன் : செங்கமலம்! இது என் சொந்த விருப்பம்! இதில் நீ தலையிடாதே! நான் சேர்த்தேன்.... நானே அழிக்கிறேன்! மாமா! தானம் பற்றி உடனே ஊராருக்குத் தெரியப் படுத்துங்கள்!

செங்கமலம் : அய்யோ, அய்யோ... பைத்தியம் தான்... பைத்தியமே தான்! அடக் கருப்பா.... நீ தாம்ப்பா இவளைக் காப்பாத்தனும்.... (செல்ல)

கமலநயனன் : .....? பொண்ணு.....?

பொன் : கலங்க வேண்டாம் மாமா! நான் மேற்கொள்ள விருக்கும் எண்ணற்ற ஏழை எளிய மக்களின் துயர்துடைப்புப் பணிக்கு நீங்களும் துணைபுரியுங்கள்! அதுவே இப்போது நம் முன்னுள்ள மிகப் பெரும் இறைப்பணியாகும்! வாருங்கள்!

(செல்கின்றனர்) (காட்சி மாறுகிறது)

காட்சி : 17

இடம் : வீதி

பாத்திரங்கள் : சிவநேசம் - பலவேசம்

(சிவநேசமும் பலவேசமும் சந்திக்கின்றனர்)

பல : அய்யோ! சிவநேசம்! போச்சுப்பா சிவநேசம்! எல்லாம் போச்சு!

சிவநேசம் : அட என்னப்பா நீ? என்ன போச்சு! ஏன் போச்சு- சும்மா பதட்டமில்லாம விசயத்தைச் சொல்லப்பா-?

பல : அய்யோ சிவநேசம், யாரோ வயித்தில வகையா அடிச்சுட்டாங்கப்பா வகையா அடிச்சிட்டாங்க...!

சிவநேசம் : பலவேசம்... அடிச்சது அடிச்சிட்டாங்க... இதில எப்படி அடிச்சா என்ன? விசயத்தைச் சொல்லிட்டு அழப்பா!

பல : அந்தப் பொன்னனையாள் கொடுத்த தானமப்பா- ஒரு கடகப்பொட்டி நிறையத் தங்கமும், மணியும்... மச்சு வீட்டு மருசல்லே மறைச்சு வச்சிருந்தேன்... யாரோ..... என் கண்ணுலெ மண்ணெத் தூவிட்டு அப்படியே கொண்டு போய்ட்டாங்கப்பா அப்படியே கொண்டு போய்ட்டாங்க....

சிவநேசம் : என்ன! உன்னுடையதைத் திருடிக் கொண்டு போயிட்டாங்களா- என்னப்பா சொல்றே பலவேசம்?

பல : ஆமாப்பா, ஆமா ஆமா..... திருடித்தான் கொண்டு போயிட்டாங்க?

சிவநேசம் : அட தெய்வமே! அது ஒன்னு தான் இதுவரை நம்ம பூமியிலே நடக்காமெ இருந்திச்சு..... இப்ப அதுவும் நடக்குதா, இனி நாடு உருப்பட்டாப்ல தான்-! ஆ- அதுசரி- பொன்னனையாள் கொடுத்த தானம்னு சொன்னியே..... அவங்க ஏழை எளியவங்களுக்குத் தானே தானம்னாங்க- அதிலெ நீ எப்படி.....?

பல : அட நானும் ஏழையினு சொல்லித்தாம்ப்பா தானம் வாங்கினேன்-!

சிவநேசம் : அடப்பாவி- ஆத்துப் பாசனத்துல அஞ்சாறு காணி வச்சு பசியாமெச் சாப்பிட்டுக் கிட்டிருக்கிற நீ ஏழையினு பொய் சொல்லி தானம் வாங்கலாமா.... அட..... அதுவும் சரி..... தானம்னு கேட்டு வந்த

		ஒவ்வொருத்தருக்கும் அந்தம்மா தன்னோட ரெண்டு கைகளாலே மட்டும் தான் அள்ளிக் கொடுத்தாங்க.... அப்படியிருக்க.... உனக்கு மட்டும் இதிலே.. ஒரு கடகப்பொட்டி நிறைய.... எப்படி.....!
பல	:	....? அட, அதுவும் அப்படித்தாம்ப்பா......!
சிவநேசம்	:	...எப்படி...?
பல	:	பல தடவை.. ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு மாதிரி வேசத்திலே போய் வாங்கி ஒரு கடகம் சேர்த்தேம்ப்பா....!
சிவநேசம்	:	அட பாவமே! பொய்பித்தாட்டம்.. நயவஞ்சகம், நம்பிக்கை மோசம்....! இப்படியெல்லாம் சம்பாறிச்சா அது எப்படியப்பா தங்கும்.....!
பல	:	ஆமாப்பா அப்படித்தானப்பா.... பலநாள் நடந்து சேர்த்தேன் ஒரு நாள்ல பறிபோயிடுச்சு.
சிவநேசம்	:	போகாமெ என்ன செய்யும்? பலவேசம்! நல்லாப் பாடுபடனும்! பக்கத்தில இருப்பவங்களுக்கும் பசியினு வர்றவங்களுக்கும் கொடுக்கனும்...... மிச்சமிருந்தாச் சேக்கனும்... அது தானப்பா தங்கும்... பல தலைமுறையையும் காக்கும்! அதை விட்டுட்டு குறுக்குவழியிலே தேடினா ஊரிலே திருட்டுத்தனமும் குற்றச்செயல்களும் பெருகத் தானப்பா செய்யும்.....! அதனாலே ஊரு கெடும், நாடு கெடும்! சரி சரி வா போகலாம்.... இனிமேலாவது திருந்தி நட!

(செல்கின்றனர்) *(காட்சி மாறுகிறது)*

காட்சி : 18

இடம் : பொன்னனையாள் வீடு

பாத்திரங்கள் : செங்கமலம் - ஏழை விவசாயி - கமலநயனன் - பொன்னனையாள் - வீரன் வைரமுத்து

(ஏழை விவசாயி வந்து)

ஏ.வி. : ....! அம்மா! அம்மா....!

(செங்கமலம் வந்து)

செங்கமலம் : ....யாரப்பா நீ .....என்ன வேணும்....?

ஏ.வி. : ஏழையம்மா...... ஏதாவது தானம்...?

செங்கமலம் : ......தானமா.... அடபாவி... நிதானமா ஆற அமரச் சிந்திச்சு வாரியாக்கும்..... ஆறுமாசமா அள்ளி இறைச்சாளேய்யா அப்பெல்லாம் வரக்கூடாதா..... இப்ப ஒரு பொட்டுப்பொடி இல்லை...... ஒரு தட்டுத்தவசம் மருந்துக்குக் கூட வீட்ல இல்லை...... இப்ப வந்து நிக்கிறியே அய்யா..... போ போ...... (கமலநயனன் பொன்னனையாள் வருகிறார்கள்)

பொன் : யாரம்மா இது.....?

ஏ.வி. : ... ஏழை விவசாயி அம்மா நான்... இடையில் நேர்ந்த விதியால் இந்தக் கெதியம்மா.... தெற்குச் சீமையில் நாலு ஏர் வச்சு நல்லபடி வகைதொகையாப் பொழச்சவனம்மா.... நாலுவருசமா வானம் வழி விடலை... பூமித்தாய் கொடுக்கலைன்னா பிழைக்கிறது எப்படிம்மா.... ராஜபார்வையும் எங்க பக்கம் திரும்பலை... கண்ணீரும் கம்பலையுமா நண்டுஞ் சிண்டுமா நின்னதுகளைப் பார்க்கச் சகிக்காம அதுகளை அப்படியே அனாதைகளா விட்டுட்டு இப்படியே வெளியேறி வந்த பாவியம்மா நான்.....

பொன் : ......? பெரும் வெள்ளப் பெருக்கால் பேரழிவு ஒரு பக்கம்... வானம் பொய்த்த வறட்சியின் பேரழிவு மற்றொரு பக்கம்... வேதனை மிகுந்த இம்மாறுபட்ட நிலையைச் சீர் செய்ய இங்கு எவருக்குமே சிந்தனையில்லை... உம்..... இறைவன் சகலத்தையும் சகலருக்காகவும் படைத்தான்.... மேடு பள்ளங்களையும் ஏற்றத் தாழ்வுகளையும் அதிகார வர்க்கம் படைத்துக் கொண்டிருக்கிறது...! பாடுபடும் மக்களின் பசியையும் பிணியையும் போக்க முயலாமல் போர் போரென்று பூமியின் செல்வாதாரங்கள் அனைத்தையும் பாழடிக்கும் ஏகபோகங்களின் ஆதிக்கவெறிக்கு முடிவு தான் எப்போது... உம்ம்...? செங்கமலம்! ஒரு துளசி மணி மாலை கொடு.....! (செங்கமலம் சென்று வந்து

மணிமாலை கொடுக்க பொன்னனையாள் அதை வாங்கி அணிந்து கொண்டு தன் கழுத்திலிருந்த முத்து மாலையைக் கழற்றி ஏழையிடம் கொடுத்து)

பொன் : ...பெரியவரே... என்னிடம் எஞ்சியிருந்த ஒரே ஒரு முத்து மாலை இது... இதோ..... இதைக் கொண்டு போய் வைத்துக் குடும்பத்தைக் காப்பாற்றுங்கள்...!

ஏ.வி. : (பெற்றுக்கொண்டு) மகராசி நீ... உன் மனம் போல் வாழனும் தாயே...! (செல்லல்) (வீரன் வந்து சுற்றும் முற்றும் தேடுகிறான்)

கமலநயனன் : .....? யேய்.... என்னப்பா தேடுறே?

வீரன் : .....? பொன்னனையாள் வீடு....?

கமலநயனன் : இதுவே தான்! நீ யாரைப் பார்க்கனும்....!

வீரன் : நான் கேட்க வந்தது.... அரசு நர்த்தகி பொன்னனையாள் வீடு...?

கமல்நயனன் : அதே வீடு தானப்பா இது! இதோ உன் முன்னாலே நிக்கிறது தான் சாட்சாத் பொன்னனையாள்... அரசு நர்த்தகி... நாட்டியக்கலா நர்த்தன வித்தகி! நீ வந்த விசயத்தைச் சொல்லு...?

வீரன் : .....? (பதட்டத்துடன் வணங்கி) பாண்டி மாமண்டலத்தின் நாட்டியக் கலாநிதி... நடனப் பேரரசி... தங்களுக்கு அரசவையிலிருந்து ஆணை அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது... நமது மாமன்னர் மாவீர மாறவர்ம சுந்தர பாண்டியபூபதி அவர்கள் சோழ நாட்டை வென்று தஞ்சைத் தரணியின் தலைநகராம் உறையூரில் வீராபிஷேக விஜயமாமுடி தரித்து பல வீரச் சிறப்புப்பட்டங்கள் பெற்று தற்போது தாயகம் திரும்பிக் கொண்டிருக்கிறார்... வரலாறு கண்டறியாச் சாதனை கொண்ட அவ்வீரத்திருமகனை வரவேற்க அலைஅலையாக இப்போதே மதுரையம்பதியை முற்றுகையிட முனைந்து விட்டது மக்கள் கூட்டம் – நாளை அரண்மனையில் நடைபெறும் இவ்வீரத்திருவிழா

நிகழ்ச்சியில் தங்களின் நடன நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளதாக ஆணை... உத்தரவுக்காக....?

பொன் : ஓ.... நீ போய் வா! அரசவை உத்திரவைப் பொன்னனையாள் ஏற்றுக் கொண்டதாகக் கூறு! (வீரன் வணங்கிச் செல்கிறான்)

செங்கமலம் : திடுதிப்னு இப்படி வரும்னு தலையிலே அடிச்சுக்கிட்டேனே.... கேட்டியா.... ஒரு பொட்டுப் பொடி கூட வைக்காமெனத் தானம் பண்ணினியே பெரிய தானம்.... இப்ப என்ன செய்வே...? ராசாங்க நாட்டிக்காரி இப்படி மூழியா உருவிய கோலத்தோட போய் நில்லு... நிக்கிறதென்ன..... சபையிலே ஆடு! மகாராசா மணமணன்னு மணத்துக் கிருவாரு....?

கமலநயனன் : மணக்காட்டி வேணாலும் போறாரு... கோபத்திலே அது இதுன்னு ஏதாச்சும் செய்துட்டா.....?

பொன் : உங்களுக்கு எந்த பயமும் வேண்டாம்! என் இதயத்தில் குடி கொண்டிருக்கும் இறைவன் ஒரு போதும் என்னைக் கைவிட்டு விடமாட்டார்! பூமியைக் காக்கும் பூமிநாதன் இப்பூவையைக் காக்காமலா போய்விடுவார்... நான் மட்டுமே நாளை அரசவைக்குப் போய் வருகிறேன்! மா மதுரைப் பெருமக்களின் மகத்தான அபிமானத்தையும் உறுதியாகப் பெற்றே திரும்புவேன்....(செல்ல)

செங்கமலம் : (தலையிலடித்துக் கொண்டு) உம்ம்... இது உருப்படாது... உருப்படவே உருப்படாது.... (செல்ல)

கமலநயனன் : நட்டுவனார் மாமா தள்ளாடிப் போயிட்டாரு... எப்படி இந்தப் பொண்ணு சமாளிக்கப் போகுதோ தெரியலை.... சொக்கநாதா, நீ தானப்பா பொன்னனையாளைக் காப்பாத்தனும்!

(செல்லல்) (காட்சி மாறுகிறது)

காட்சி : 19

இடம் : மதுரை அரண்மனை

பாத்திரங்கள் : மன்னன் மாறவர்ம சுந்தர பாண்டியன் - வேங்கைமார்பன் - வீரர்கள் - பொதுமக்கள் - பொன்னனையாள் - நட்டுவனார் - கமலநயனன்.

(மன்னர் சபைக்கு வர வாழ்த்தொலி முழங்குகிறது)

வீரன் : *இராஜாதிராஜ இராஜகெம்பீர இராஜமார்த்தாண்ட இராஜபராக்கிரம சந்திரவம்சகுல திலக மாவேந்தர் மாறவர்ம சுந்தர பாண்டியபூபதி!*

எல் : *வாழ்க!*

வீரன் : *சகல புவனமும் வென்றருளிய பாண்டிவம்ச குலதிலக மாறவர்ம சுந்தரபாண்டியத் தேவர்!*

எல் : *வாழ்க!*

வீரன் : *சர்வ சாம்ராஜ்ஜிய மண்டலாதிபதி தென்னர் கன்னிக்கயல்மீன் கொடிக்கதிபதி மாறவர்ம சுந்தரபாண்டியபூபதி.*

எல் : *வாழ்க!*

வீரன் : *சோழநாடு வென்று தஞ்சைத் தரணியில் வீராபிஷேக விஜயமாமுடி கொண்டருளிய இராஜகெம்பீரன், சோணாடு கொண்ட பாண்டியன், அகிலபுவன வீரதேவர், திரிபுவனச் சக்கரவர்த்தி மாறவர்ம சுந்தரபாண்டிய மாமன்னர்!*

எல் : *வாழ்க!*

(வீரன் கையசைக்க பொன்னனையாள் நடனநிகழ்ச்சி பெரும் மகிழ்ச்சி ஆரவாரத்துக்கிடையே நடைபெறுகிறது)

அங்கையற்கண்ணி உம்முடன் ஆடுகிறாள் - உம்
செங்கமல பதமிணைந்து (ஒயில்) தளர்
நடைபோடுகிறாள் - அங்

தங்கம் நிகர் எழிலாள் தம் புன்னகையை வீசுகிறாள்
செம்பவளம் இதழோ தேன்மழையோ சொல்
மயிலோவென - அங்

பூங்கொடி போல் இடை உம்மிடை அணைய
புருவங்களோ விலலென வளைய குழல் சரிய
தாங்கிய தடையில் மென்தளிர்க் கரங்கள் விரிய
தத் தகிட தக தகதரிகிட வென -அங்

உம்மைப் போல் ஆண்டி ஆகி ஆட ஓடி வந்தேன்
- நடனம் ஆட ஓடி வந்தேன்.
- புகழ் பாட ஓடி வந்தேன்.

என்னை எவரும் நிர் மூட மென்று எள்ளி
நகையாடிடினும் நான் - உம்
மண்ணில் உயர் போகமெல்லாம் பொய்யெனக்
கண்டேன் இந்த
மண்ணில் உயர் போகமெல்லாம் பொய்யெனக்
கண்டேன் உம்

மலரடி இணைவதன்றிப் (பெரும்)
பேரொன்றுமில்லை பகன்றேன் - உம்

மானாட மயிலாட மாங்கிளிகள் குயிலாட மந்திகள்
கூட ஆட
மண்ணாட விண்ணாட மாடங்கள் கூடங்கள்
கோபுரங்களோடு ஆட
நீராட நெருப்பாட நிழலாட வெளி(ஒளி)யாட
சத்சபைகள் சேர்ந்து ஆட
விண்ணவர்கள் முப்பத்து முக்கோடி தேவர்களும்
மூவரோடிணைந்து (உம்மோடிணைந்து) ஆட

(நடனம் முடிகிறது) சபை கலைகிறது (காட்சி மாறுகிறது)

காட்சி : 20

இடம் : வீதி

பாத்திரங்கள் : சித்தன் - மடாதிபதியின் எடுபிடி ஆள்

(சோமசுந்தர் சடைமுடியுடன் தோளில் பை - தளர்நடையுடனான சித்தனாக மாறி வீதிகளில் வருதல்)

இல்லாமை சூழ் கோர சமுதாயம் உண்டாச்சு
இரக்கம் பெரும்-விலையாகிப்போச்சு!
மனித இரக்கம் பெரும் விலையாகிப் போச்சு!
பெரும் பொல்லாங்கு பகல் வேஷம் பாசாங்கு
பகட்டுகள் பதவிகள்-முக்கியம் ஆச்சு!

இரக்கம் பெரும் விலையாகிப் போச்சு!
கிறுக்குத்தனம் எங்கும் மிதமிஞ்சலாச்சு!
இன்று இல்லாமை கல்லாமை இயலாமை
முயலாமை என்பதே-மலிவுப்பொருளாச்சு!
எதிலும் இயலாமை மலிவோ மலிவாச்சு!

உன் போல பிறரை நீஎண்ணாத வரையிலும்
பித்தன்-உனக்கெவ்வாறு அருள்வான்?
இந்தப்பித்தன் உனக்கெவ்வாறு அருள்வான்?
வெறும் எத்தனாய் உலகத்தை ஏமாற்ற நினைத்தாலும்
சித்தன்-உன் கணக்கீட்டில் அறிவான்.

நான் பித்த னென் றெண்ணமா உனக்கு?
உன் செயல் பற்றி அறிதலே பெரும் வேலை எனக்கு!
நித்தமும் நீ செய்யும் பாவத்தின் பட்டியல்கள்
குறிப்பேட்டில்-கணக்கேறியிருக்கு!
என் குறிப்பேட்டில் கணக்கேறியிருக்கு!

எல்லோரும் இன்புற்று வாழ்ந்தால் இவ்வூரிலுள்ள
தெய்வங்கள்-எந்நாளும் வாழும்!
தெய்வங்கள் உன்னோடும் வாழும்!
என நல்லோர்கள் சொல்லி வைத்த நீதிவழி
நின்றிடில் கோயில்-ஒரு சொர்க்கமாய்த் தோணும்!
இதயக் கோயில் ஒரு சொர்க்கமாய்த் தோணும்!

தெய்வங்கள் உன்னோடும் வாழும்!
கோயில் ஒரு சொர்க்கமாய்த் தோணும்!
இல்லாமை இயலாமைக் கொடுமைகள் நீங்கி
மண்ணில்-இன்பங்கள் பெருக்கெடுத்தோடும்!
மண்ணில் இன்பங்கள் பெருக்கெடுத்தோடும்!

(ஒவ்வொரு துணுக்காகப் பாடவும்)

எல்லா உயிர்களும் இன்புற்று வாழாமல்
எனக்கென்ன-கோயில் ஒரு கேடு? இங்கு-எல்

இப்படிச் சொன்னால் இது எந்த ஊர்ச் சாமியோ
என்று நீ-போட்டாலும் போடுவாயே ஒரு
போடு!-எல்

பணம் பண்ணும் பாவத்தைக் கை கழுவிப்
போக்கிட-பன்னீரில் அபிஷேகம் செய்தாய்!
தினம் பன்னீரில் அபிஷேகம் செய்தாய்!
மனம் நொந்து வாழ்க்கையில் வாடிடும் ஏழைமகன்-
கண்ணீரில் அபிஷேகம் செய்தான்!
ஏழை கண்ணீரில் அபிஷேகம் செய்தான்!

நீ பன்னீரில் அபிஷேகம் செய்தாய்!
அவன் கண்ணீரில் அபிஷேகம் செய்தான்!
அந்தக் கண்ணீரின் உஷ்ணத்தில் கல்லாகிப்
போய்விட்ட-இதயம் இனி எவ்வாறு இயங்கும்?
என் இதயம் இனி எவ்வாறு இயங்கும்?

ஈ எறும்போடு உயிர் எண்ணாயிரம் கோடி
இறைவனின்-படைப்பென்று சொல்வாய்!
இந்த இறைவனின் படைப்பென்று சொல்வாய்!
பின் தீதென்றும் எண்ணாது கீழ்ஜாதி மேல்ஜாதி
பலஜாதி-பேதங்கள் கொள்வாய்!

என் படைப்பினில் பேதங்கள் இல்லை!
நீ உண்டாக்கிக் கொண்டால் அது என்
பொறுப்பில்லை!
உன் ஜாதிமத பேதங்கள் சமயங்கள் சண்டைகளில்
என் பாடு தான்-ரொம்பத் தொல்லை!
அதில் என்பாடு தான் ரொம்பத் தொல்லை!

என்னிலும் நீ என்ன உயர்ந்தவன்?
உன்னிலும் நான் என்ன தாழ்ந்தவன்? அட
என்னையும் உன்னையும் படைத்தவன்-ஒரு
மண்ணை வைத்தே பையில் அடைத்தனன்....!

(பாடல் முடிகிறது)

(சித்தனும் எடுபிடியாளும் செல்லல்) (காட்சி மாறுகிறது)

காட்சி : 21

இடம் : சிவலிங்கம் உள்ள நந்தவனம்

பாத்திரங்கள் : பொன்னனையாள் - சித்தன்

(பொன்னனையாள் தேங்காய் பழத்தட்டை சிவலிங்கத்தின் முன் வைத்துவிட்டு)

பொன் : (வணங்கி லிங்கேஸ்வரா— பிராணேசா— இதோ ஒரு நொடியில் மலர் கொண்டு வருகிறேன் பிரபு! (செல்ல)

(சித்தன் தள்ளாடி வந்து)

சித்தன் : —ஓ— சிவலிங்கம்! பூந்தோட்டத்தின் மத்தியில் இந்த மூர்த்தி இருப்பதால் இந்த இடம் தான் திருப்பூவணமாக இருக்கவேண்டும்.....ஓ.... இதோ (சிரித்து) பழத்தட்டு! பசியோடு தொலைதூரம் நடந்த களைப்போடு வந்திருக்கும் எனக்கென்றே யாராவது இங்கு வைத்திருப்பார்களோ.... உம்ம்... எப்படியிருந்தாலென்ன... எனக்குப் பசி, தாகம்....! எதிரே பழம் தேங்காய்.... சர்வேஸ்வரா.... உம்.... (அமர்ந்து தட்டை எடுத்து முன்னால் வைத்துக்கொண்டு பழத்தைச் சாப்பிட்டு தேங்காயை உடைத்துத் தண்ணீர் குடித்து ஏப்பமிட— பொன்னனையாள் வந்து திடுக்கிட்டு)

பொன் : ஆ.... ஸ்வாமி....?

சித்தன் : (திகைத்து)— ஆ-? ஏதோ— பசிக்கு— ரெண்டேரெண்டு பழம்— ஒரு தேங்காய்.... அவ்வளவு தான்! ஆமாம் ஏம்மா? இதெல்லாம் உன்னுடையதா....?

பொன் : ஆமாம் சுவாமி! பூமிநாதனுக்கு பூஜைக்கென்று வைத்திருந்தேன்—

சித்தன் : ஆ? பூஜைக்கு வைத்திருந்தாயா... அபச்சாரம்! அபச்சாரம்!—? பெரியதவறு செய்து விட்டேனோ—?

பொன் : இல்லை சுவாமி! இதில் ஒரு தவறும் இல்லை! பரமனுக்குப் பரமதிருப்தி தருவதே பசித்தவர்களுக்குக் கொடுப்பது தான் ஸ்வாமி....!

சித்தன் : இருந்தாலும்.... அவன் பட்டினிதானே தாயே....?

பொன் : அணுவுக்கும் சிறிதான உயிருக்கும் உணவளித்துக் கொண்டிருக்கும் அவனுக்குப் பசியாவது பட்டினியாவது ஸ்வாமி....!

சித்தன் : —ஓ— (சிரித்து) அவனைப் பற்றி நீ எல்லாம் அறிவாய் போலிருக்கிறதே....? (சிரிப்பு)

பொன் : ....ஸ்வாமி.... தாங்கள்....?

சித்தன் : உம்ம் (சிரித்து) ஆக்கல் காத்தல் அழித்தல் எனும் முத்தொழில் புரியும் முதல்வன்.... அந்த எல்லாம் வல்ல மகேஸ்வரன்....

பொன் : ....ஸ்வாமி...?

சித்தன் : உம்– அவன் படைத்து இந்த மண்ணில் ஆட வைத்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறானே– அந்த எண்ணாயிரம் கோடி ஜீவராசிகளில் அடியேனும் ஒருவன்....

பொன் : ....?....தங்கள் பிறப்பிடம்...?

சித்தன் : பிறப்பிடமா...? ஏது எனக்கு? நினைவு தெரிந்த காலந்தொட்டு இப்படி ஊர் ஊராகச் சுற்றுகிறேன்– என் கண் திறப்பதற்கு முன்னரே பெற்றோர் மண்மூடிப்போய் விட்டிருக்கலாமெனத் தெரிகிறது– உற்றார் உறவென்று யாருமே என்னை நெருங்கி வரவுமில்லை.... பின் எவரிடம் என் பிறப்பிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது....? ம்ம்.... இதிலும் கூட ஒரு சௌகர்யம் தான்.... இந்த மண்ணில் எந்த இடத்தையும் என் பிறப்பிடம் என்று கூறிக் கொள்ளலாம் அல்லவா.... (சிரிப்பு).

பொன் : ....தங்கள் திருநாமம்...?

சித்தன் : பேருக்கு என்னம்மா குறை.... ஊருக்கு ஒன்றாகச் சொல்லி அழைப்பார்கள்.... அதையெல்லாம் யாருக்கு நினைவில் வைத்துக் கொள்ள முடியும்....? தற்போது விளங்கும் பெயர் சித்தன்!

பொன் : ஸ்வாமிக்குக் குடும்பம் குழந்தைகள்....!

சித்தன் : உம்ம்… எங்கேயோ ஒரு மலையடிவாரத்தில் எப்போதோ ஒரு குடும்பம் அமைந்தது… அம்மம்மா… அவள் பொல்லாத வாயாடி…. கொடுசூரி… நீலி…. படுஓடுகாலி…. உம்ம்…. மகாபத்ரகாளி…. அவள் பெற்றெடுத்த குழந்தைகள் ரெண்டு…. தாயைப் போலவே ரெண்டும் படுசுட்டிகள்…!

பொன் : ….அய்யோ பாவம்….! ஸ்வாமி நிம்மதியற்ற ஆத்மா போலிருக்கிறது…?

சித்தன் : என்ன செய்வதம்மா… பாழாய்ப்போன இந்த ஆத்மா இன்னும் மூவாசையையும் பற்றிக் கொண்டிருக்கிறதே…?

பொன் : ….ஸ்வாமி….! தங்களுக்குச் சிரமமில்லாதிருந்தால் அருகிலுள்ள என் வீட்டில் தங்கி சிறிது சிரம பரிகாரம் செய்து கொண்டு பிறகு போகலாமே….!

சித்தன் : …ஓ… இதிலென்னம்மா சிரமம்…. பசித்தவனுக்குச் சோறு தான் முக்கியம்…! ஆமாம்… என்னைப்பற்றி எல்லாம் விசாரித்து அறிந்துகொண்ட நீ… உன்னைப் பற்றி எதுவுமே கூறவில்லையே….?

பொன் : நிறையக் கூறுகிறேன் ஸ்வாமி…. இதோ நொடியில் பூஜையை முடித்துக் கொண்டு வந்துவிடுகிறேன்…!

சித்தன் : ஓ… ஆறஅமரச்செய்… ஒன்றும் அவசரமில்லை….

(பொன்னனையாள் மலர் தூவி பூஜை செய்கிறாள்)

மின்னனையா ளொரு பாகமதாயமர்
பொன்னனையாள் நேசாசிறு
புன்னகை யாலொரு ஜாடையில் ஆட்கொள்ள
வேண்டுகிறேன் ஈசா
விண்ணளாவி நிறைவேத நாயகா சோமசுந்தரேசா
செறு
தென்னவ னீட்டிய பாலனை மீட்டிய சர்வதிய
நாசா
பித்தனே பிறைசூடியவா பெருஞ் சித்தர் பாடும்
இறைவா
எத்தனே சுயமானவனே எனைநித்தம் ஆளும்
தலைவா

வித்தகா வினை தீர்ப்பவா தேவதேவர் போற்றும் முதல்வா
சித்தமே எனக் கீந்தருள் சகல சமய மேற்றும் தேவா

பொன் : வாருங்கள் ஸ்வாமி... (செல்கின்றனர்)

(காட்சி மாறுகிறது)

காட்சி : 22

இடம் : பொன்னனையாள் வீடு

பாத்திரங்கள் : சித்தன் - பொன்னனையாள் - செங்கமலம் - கமலநயனன் - வீரன்

(சித்தன் ஏப்பமிட்டபடி ஒரு ஆசனத்தில் அமர்ந்து பொன்னனையாள் தரும் தாம்பூலத்தை மென்றுகொண்டே)

சித்தன் : ஆ.... அறுசுவை உணவு.... உம்ம்.... விருந்தோம்பும் பண்பு.... தமிழ் மக்களுக்கென்றே அமைந்த தனிச்சிறப்பு... தாய்குலத்தின் கைப்பாங்கே பாங்கு...!

பொன் : ஸ்வாமி.... வெளிதேசப் பயணங்கள் மேற்கொண்டதில்லையோ?

சித்தன் : ...ஓஹோஹோ... நல்லகேள்வி...! நான் காணாத தேசம் உண்டா... மிதிக்காத மண் தான் உண்டா....? இருந்தாலும் இந்த மண்ணின் சிறப்புக்கு ஈடு இணையே கிடையாதம்மா...! (கமலநயனன் வந்து)

கமலநயனன் : ...சரிதான்! இந்த ருசிகண்டபூனை இனி போகாது... (செல்ல)

சித்தன் : அதனால் தானோ என்னவோ.... இந்த மண்ணில் சித்தர்கள் அதிகமாகவே தோன்றியுள்ளார்கள்..... (செங்கமலம் வந்து)

செங்கமலம் : விடியவிடிய வேதாந்தம் பேசினால் போதும் அம்மாவுக்கு வேறு தீனியே வேண்டாம்...! (செல்ல)

சித்தன் : ...ஓ... கேட்க மறந்து விட்டேனே... இவர்களெல்லாம் யாரம்மா....?

பொன் : ....இவர் என் தாய் ஸ்வாமி...!

சித்தன் : ....பெற்ற தாயா....?

பொன்	:	....பெற்றவளினும் இனியவள் ஸ்வாமி.... வளர்த்த தாய்– பெயர் செங்கமலம்! அவர் என் ஒன்றுவிட்ட மாமன்... கமலநயனன்–..!
சித்தன்	:	ஓ– அழகான பெயர்கள்! அற்புதமான இதயங்கள்! (செங்கமலம் வந்து)
செங்கமலம்	:	போதும்! வயிறு நிரம்பி விடும்! (செல்லல்)
சித்தன்	:	(சிரித்து).... உங்கள் தொழில்....?
பொன்	:	ஸ்வாமி..... தேவதாசி குலத்தில் பிறந்த நான் கலைத்தொண்டு புரிகிறேன். (கமலநயனன் வந்து)
கமலநயனன்	:	....இந்த பாண்டியம்பதியின் அரசு நர்த்தகியாக்கும் எங்கள் பொன்னனையாள்....!
சித்தன்	:	என்ன, என்ன– இப்பூமண்டலமே புகழும் பாண்டிய நாட்டுக் கலைப்பேரரசி பொன்னனையாள் நீ தானா...! ஓ.... அக்கலைத் தாயின் பேரருள் பெற்ற உன்னுடைய அதிதியா இப்போது நான்.... பலே பலே... என் பாக்கியமே பாக்கியம்!
பொன்	:	....இல்லை ஸ்வாமி....! நான் பெரும் துரதிர்ஷ்டம் பிடித்தவள்..... என் தாய் மின்னனையாள் இம்மையில் நன்மைகளைப் பெற வேண்டி அச்சொக்கேசனையே நினைந்து நினைந்து உருகி மடிந்தாள்! நானும் அப்பேற்றினைப் பெறவே அவன் திருவடிகளே தஞ்சமெனக் கண்துஞ்சாது அவ்வடைக்கலவனின் பொற்பாதங்களின் அடியிலேயே விழுந்து கிடக்கிறேன்.....?
சித்தன்	:	என்னம்மா சொல்லுகிறாய் நீ......?
பொன்	:	ஸ்வாமி.....! இந்த ஜென்மம்... எத்தகைய உயர் பதவியையும் புகழையும் விரும்பி வாழவில்லை... அதோ, அந்தத் திருப்பூவணத்திறைவனிடம் என்னை ஒப்படைத்துக் கொண்டிருக்கிறேன்... அவனுடைய இதயகமலங்களில் என்றும் நீங்கா இடம்பெறும் காலத்திற்காக நான் தவம் செய்து கொண்டிருக்கிறேன்– நான் ஏற்றுக் கொண்டிருக்கும்

கலைத் தொண்டு கூட ஆடல் பிரியனான என் தலைவனின் திருப்திக்காகத் தான் ஸ்வாமி...!

சித்தன் : (பலமாகச் சிரித்து)... பைத்தியகாரப் பெண்ணம்மா நீ... அவன் இதய கமலத்தில் நீ இடம் பெறுவதாவது ஒன்னாவது! மனதை வண்டு போல் சுழல விடாமல் ஒரு நிலைப்படுத்தம்மா... இங்கே ஆண்டுக் கணக்கில் தவம் கிடக்கும் அடியார் கூட்டம் அவனுடைய கண் அசைவுக்காக அலை மோதிக் கொண்டிருக்கும் போது.... தாசி குலத்தில் பிறந்த உனக்கெதற்கம்மா இந்த வீண் பேராசை!

பொன் : ...குல பேதத்துக்கு அப்பாற்பட்டவன் ஸ்வாமி என் குணாளன்... என் நினைவில் நீங்காதவனாகிவிட்ட என் இனியவனை இப்பிறவியில் நான் அடைந்தே தீருவேன் ஸ்வாமி...!

சித்தன் : உம்... மிகவும் உணர்ச்சி வசப்படுகிறாய் நீ... உனக்குக் குறையில்லாத பேராசை... நிறைய சிறு பிள்ளைத் தனமான கிறுக்குத்தனம்.... உம்.... அது உன் ஜாதிக் குணம்!

செங்கமலம் : அப்படியே சூடு ஒன்னைப் போட்டு விடுங்க... அப்படியாவது சொரணை வரட்டும்.

பொன் : ....ஸ்வாமி.....?

சித்தன் : ....உம்.... கோபித்துக் கொள்ளாதே... அந்தச் சுடலைமாடன் எப்டிக் கிறுக்கனோ பித்தனோ அதைப் போலவே அவனை நம்புகிறவர்களையும் கிறுக்கர்களாகவும் பித்தர்களாகவும் ஆக்கி விடுவானெனப் பெரியவர்கள் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன்... அதைத்தான் சொல்லவந்தேன்.... பிறகு இதில் எனக்கென்ன லாபநஷ்டம்! இது உன் சொந்த விஷயம்! இதில் தலையிட நான் யார்...? ஏதோ வழியில் வந்த என்னை நல்லபடி உபசரித்தாய்... அறுசுவையோடு விருந்தும் கொடுத்தாய்... எப்படியோ.... உன்னை என்றும் மறக்க முடியாமலும் செய்துவிட்டாய்.... உம்.... நீ நல்லாயிருக்கனும்,

(பையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு)

மகராசியாய் மனம் போல் வாழனும்.....

பொன் : ..ஸ்வாமி..?

சித்தன் : ஆமாம் பொன்னனையாள்.. நான் புறப்படுகிறேன்..?

கமலநயனன் : எப்படியோ.. இடம் காலியானால் சரி!

பொன் : ..ஸ்வாமி.. என்னை ஏமாற்றிவிடாதீர்கள்.. தாங்கள் இங்கு சில தினங்களாவது தங்கித்தான் செல்வீர்களென நம்பியிருந்த என்னை ஏமாற்றிவிடாதீர்கள் ஸ்வாமி! தங்களைக் கண்டதிலிருந்தே ஏதோ ஒரு நிறைவான திருப்தியை என் மனம் அடைந்துள்ளது.. தங்களின் ஒளி துலங்கும் கமலநயனங்களைக் கண்டது முதலே என் வாழ்வு புனிதமடையத் தொடங்கி விட்டது போலவே உணர்ந்து கொண்டிருக்கிறேன்..... என் இதயதெய்வம் திருப்பூவணத்திறைவனின் சாயலைத் தங்கள் உருவில் கண்டு என்மனம் புளகாங்கிதமடைந்து கொண்டிருக்கிறேன் ஸ்வாமி..?

சித்தன் : ..ஓஹோ..? நல்லவேளை.. இந்தச் சித்தனையே கூட அந்த மகாசித்தனாக்கி விட்டாலும் விடுவாய் போலிருக்கிறதே.. சரிசரி! இனிமேலும் இங்கு தங்கியிருப்பது எனக்கே ஆபத்தாய் முடிந்தாலும் முடியும்...! உனக்கென்ன.... காலைக்கட்டிக் கொண்டிருப்பாருமில்லை கழுத்தைக் கட்டிக் கொண்டிருப்பார் எவருமில்லை.. ஒரு அக்குப்பாக்கு இல்லாத ஒண்டிக்கட்டை....! என் பாடோ... குட்டியும் குளுமானுமாகப் பெரியகுடும்பஸ்தன்..... எல்லோருக்கும் இந்தக் கிழக்கட்டையே உழைத்துத் தீனிபோடனும்.... என் தொழிலை நாடி உடனே நான் புறப்படவேண்டும் தாயே...!

பொன் : என்ன! தொழிலா? ஸ்வாமி! இந்தத் தள்ளாத வயதிலுமா தாங்கள் தொழில் செய்கிறீர்கள்?

சித்தன் : என்னம்மா அப்படிக் கேட்டு விட்டாய்....! அருந்தொழில் கலைவல்லுனர்கள் அபூர்வமாகவே

இவ்வுலகில் தோன்றுகிறார்கள்! அவர்களும் வயதாகிவிட்டது அது இதுவென்று ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி ஒதுங்கியிருந்து விட முடியுமா தாயே.....?

பொன் : அப்படி என்னதொழில் சுவாமி?

சித்தன் : ஆக்கல் காத்தல் அழித்தலெனும் முத்தொழில்! இதோ பார்! சிற்றுளி! ஒரு சிற்பத்தை உருவாக்குவேன்... அதை வியாபகத்தில் வைத்து வணங்கவும் உதவுவேன்! தேவையில்லாமல் போனால் உடைத்துச் சிதைத்துத் தூளாக்கி மண்ணோடு போடவும் உதவி செய்வேன்! அப்பேற்பட்ட அபூர்வ சிற்பக் கலைஞனம்மா நான்—

பொன் : ....ஸ்வாமி....?

சித்தன் : உம்.... ஆமாம்....! வடக்கே வெகு தூரத்தில் யாரோ ஒரு மன்னன்... மகாகிறுக்கன்! அவன் மனதில் நிறைந்து போய்விட்ட மறைந்துபோன அவனது காதல் மனையாட்டியின் சிலை ஒன்றைச் செதுக்க விரும்பி எனக்குச் செய்தி அனுப்பி வைத்திருந்தான்.... புறப்பட்டுவிட்டேன்....!

பொன் : (வியப்புடன்) ஸ்வாமி... இறந்துபோய் நினைவாக இருப்பவளைச் சிலையாக வடிப்பதா?

சித்தன் : (நிமிர்ந்து – நடந்து) ஆம்... உருவமற்ற மானசீகமான சிந்தனையின் பிரதிபலிப்பு... மிகப்பெரும் கலைப்படைப்பு! மறைந்து போய் விட்ட ஆனாலும் மறக்க முடியாமல் அம்மன்னரின் இதயத்தில் நிறைந்துகிடக்கும் அந்த மாயத்தோற்றத்தைச் சிலையாக வார்த்துக் கொடுத்துவிட்டால்... நான் விரும்பும் மட்டும் பொன்னும் பொருளும் கிடைக்குமல்லவா.... பிறகு தலைமுறைக்கும் உட்கார்ந்து காலை ஆட்டிக்கொண்டு.....
(பொன்னனையாள் அழுது குமைகிறாள்)

சித்தன் : என்னம்மாயிது.... ஏன் அழுகிறாய்?

பொன் : (குமறலுடன்) என்ன சொல்வேன் ஸ்வாமி... எதைச்சொல்வேன்.. எப்படிச்சொல்வேன் ஸ்வாமி.. என் உள்ளத்தில் இலங்கும் அந்த உலகாளும் உமையவள் பாகனை தங்கத்தால் வார்த்தெடுத்துத் தழுவிடத் தவித்துக் கொண்டிருந்த என்னை ஏமாற்றி விட்டார்கள்! ஸ்வாமி ஏமாற்றி விட்டார்கள்! பிறர் மனதில் நிற்கும் படியான உருவத்தைச் சிலையாக வார்ப்பது எங்ஙனம் எனக் கேட்டு என் ஆசையில் மண் தூவிவிட்டார்களே ஸ்வாமி..!

கமலநயனன் : மண்ணை மட்டும் தூவலை.. பொன்னனையாளைப் பைத்தியம்னு வேற சொல்லிட்டாங்க படுபாவிங்க..!

பொன் : ...ஸ்வாமி...? மனதில்... நினைவில் நிற்கும் ஒரு அந்தரங்க உருவத்தைச் சிலையாக வார்ப்பது சாத்தியமென்று கூறுகிறீர்களா?

சித்தன் : இதென்ன கேள்வி! சிற்பக்கலையின் அடிப்படை இலக்கணமே அது தானே... அவன் யாரோ ஒரு கோமாளிக்கலைஞன்.. உன்னை நன்றாகவே ஏமாற்றிப் போய்விட்டான்!

பொன் : ஆம்! நன்றாகத் தான் ஏமாற்றி விட்டார்கள்! இப்போது நான் என்ன செய்வேன் ஸ்வாமி...?

(அழுகிறாள்)

சித்தன் : அழாதே அம்மா.. இதற்காகவா அழுவார்கள்? இப்போதும் என்ன... ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை ஏதோ.. நானும் வந்தது வந்து விட்டேன்.. உன்னைப் பார்த்ததும் பார்த்துவிட்டேன்... வயிறு புடைக்க உன் வீட்டுச் சோற்றைத் தின்றதும் தின்று தீர்த்துவிட்டேன்!... இன்னும் ஓரிரு நாட்கள் இங்கு தங்கி வேண்டுமானாலும் உன் மனதில் குடி கொண்டிருக்கும் அந்தக் குப்பாண்டியை நீ விரும்பும் உயரத்தில்...

பொன் : ...ஸ்வாமி..!

சித்தன் : உம்.... உன் மனதில் பதிந்த அதே அழகனைத் தானம்மா....

பொன் : .... போதும் ஸ்வாமி போதும்! சொல்லாதீர்கள்! கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்துகொள்ள அழைக்கிறீர்களே ஸ்வாமி.. பேதை நான்... காரியசாத்தியமற்ற பின், கையில் எதையும் வைத்திருக்க விரும்பாமல் பொன்னையும் பொருளையும் அள்ளி இறைத்துத் தானம் கொடுத்துவிட்டேன் ஸ்வாமி தானம் கொடுத்துவிட்டேன்!

சித்தன் : அட அசட்டுப்பெண்ணே... கொஞ்சமும் மிஞ்சாமலா தானம் கொடுத்துவிட்டாய்.... (பலமாகச் சிரித்து)

உம்.... நீ நல்ல பைத்தியந்தான்... இல்லை இல்லை... அந்தப் பாம்பணைந்த பைத்தியக்காரப் பித்தன் இருக்கிறானே... அவன் உன்னையும் பித்துப் பிடித்தவளாகவே ஆக்கிவிட்டான்... பொன்னையும் பொருளையும் குவித்து வைத்திருந்த நீ எங்கே மீண்டும் உலக இன்பநினைவுகளுக்கு ஆளாகி விடுவாயோ என்று பயந்து உன்னை ஓட்டாண்டி ஆக்கிவைத்து வேடிக்கை பார்த்துவிட்டான் அந்த விளையாட்டுக்காரன்... ஏனென்றால்... பொருள் தானம்மா உலகத்தில் மூவாசைகளையும் உண்டாக்கி பாவச் செயல்களைத் துணிந்து செய்யத் தூண்டுகோலாய் அமைந்திருக்கிறது... பொன்னையும் பொருளையும் குவித்து வைத்துக்கொள்ள இங்கு தனியார் எவருக்கும் உரிமையில்லை என்று யாரும் சட்டமா செய்திருக்கிறார்கள்.... ஒழுங்கை.... சமூகநலச் சட்டத்தை... மனிதர் மதித்து அமுல் நடத்தத் துணியாதபோது... அவன் தானே நடத்தி வைக்க வேண்டி வந்து தொலைறது....? உம்.... தொலையட்டும்.... இப்போது உனக்கு, நீ நினைந்துருகும் அந்த நெற்றிக் கண்ணனைத்

தங்கத்தால் வார்த்தெடுத்த சிலையாக்கித் தர வேண்டும்— அவ்வளவு தானே....?

பொன் : ...ஸ்வாமி....?

சித்தன் : பொண்ணே— நான் யார் தெரியுமா உனக்கு— உம்— உனக்கெங்கே தெரியாப் போகிறது? உனக்குத் தெரிந்ததெல்லாம், உன் உள்ளத்தில் உலாவரும் உலகநாத மூர்த்தி மட்டும் தான் இல்லையா— இதோ பார்! நான் வெறும் சிற்பக் கலைஞன் மட்டுமல்ல— ஒரு இரசவாத சித்தனும் கூட... ஆம்... இரசவாதம் செய்ய வல்லவன்— தங்கம் செய்வேனம்மா தங்கம் செய்வேன்— செம்பையும் இரும்பையும் கல்லையும் மண்ணையும் காய்ச்சித் தங்கத்தை மலைமலையாகக் குவிக்கும் ஆற்றலுடையவன்.... இந்தச்சித்தன் இரசவாதம் செய்யவல்ல மகாசித்தன்!

பொன் : ஸ்வாமி (சித்தன்) காலில் விழுகிறாள்.

(செங்கமலம் சைகை செய்து கமலநயனனைத் தனியாக அழைத்துப் போய்)

செங்கமலம் : டேய் கமலு! இந்தப்பாவி தங்கத்தை மலைமலையாய்க் குவிப்பானாமே... அண்டப் புளுகன் ஆகாசப் புளுகன்டா இவன் அந்த ரோமாபுரிச் சிற்பியாவது அவனாலே முடியாதுனுட்டுப் போனான்.... இவன் என்னடான்னா தங்கமே செய்வேனுங்கிறானே.... சோத்துக்கே ஊர் சுத்துற சொக்கப்பன் சொர்க்கலோகத்துக்குப் பறந்தே போன கதையாயிருக்கு— உம்... இவன் ஏதோ மந்திரவாதி— ஆப்பிட்டத்தைச் சுத்திக்கிட்டு ஓட வந்திருக்கிற மாயாவி— இவனைச் சும்மாவிடக்கூடாது— வாடா—?

(இருவரும் சென்று ஒரு வீரனுடன் வந்து நின்று கவனிக்கிறார்கள்)

பொன் : —ஸ்வாமி— இன்னும் என்னைச் சோதிக்காதீர்கள்— இனி கணப்பொழுதும் தாமதிக்காதீர்கள்— இதோ

என் வீட்டிலுள்ள பண்ட பாத்திரங்களனைத்தையும் இப்போதே எடுத்துக் குவிக்கிறேன்..... தங்களின் அற்புத இரசவாத மகிமையால் உடனே என் அபிலாஷையை நிறைவேற்றுங்கள் ஸ்வாமி....?

சித்தன் : .....ஓ..... வீட்டிலுள்ள சகலத்தையும் தட்டுமுட்டுச்சாமான் எதையும் விட்டு வைக்காமல் எடுத்துக் கொண்டு போய் அந்தத் தனி முற்றத்தில் போடு.... இரவு ஒரு பொழுது.... காலையில் எழுந்து பார் இந்தச் சித்தனின் கைவரிசையை.... ஓடு!

பொன் : இதோ!

(மகிழ்ச்சியுடன் ஓடுகிறாள் – சித்தன் பலத்த சிரிப்புடன் செல்கிறார்)

செங்கமலம் : அய்யோ! இருந்த பொன்னும் மணியும் தான் போச்சு... இப்ப பண்ட பாத்திரங்களுக்கும் வந்ததே ஆபத்து... இந்தாப்பா... பேசாமெ நிக்கிறியே... அந்த ஆளைக் கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளுப்பா... அவன் பொல்லா எமகண்டன்.... ராவோட ராவா எல்லாத்தையும் சுருட்டி மூட்டை கட்டிக்கிட்டு ஓடிப் போயிடுவான்.....

கமலநயனன் : ஹ்! ஓடிப்போயிடுவானா, அப்படீனா, ஓடு, விடாதே பிடி..... (வீரன் சிறிது ஓடி – பிறகு நின்று நிதானித்து திரும்பி வந்து)

வீரன் : முடியாது....! இங்கு அரசு நர்த்தகியின் ஆணையை யாரும் மீறமுடியாது.. மீறினால் தலை போய்விடும்!

இது அரசாங்க உத்தரவு.... (செல்லல்)

செங்கமலம் : அய்யோ போச்சே.... எல்லாம் போச்சு.... கருப்பா.... (செல்லல்)

கமலநயனன் : ....?

(செல்லல்) (காட்சி மாறுகிறது)

காட்சி : 23

இடம் : பொன்னனையாள் வீடு

பாத்திரங்கள் : கமலநயனன் - செங்கமலம் - பொன்னனையாள் - சித்தன்

(கமலநயனனிடம் செங்கமலம் ஓடிவந்து)

செங்கமலம் : கமலு... யே் கமலு... கண்ணெல்லாம் போச்சுடா.... கண்ணெல்லாம் போச்சு....

கமலநயனன் : -இதோ- அப்படியே இருக்கே- ஏன் அத்தை பொய் சொல்றே-?

செங்கமலம் : அட பொய்யில்லேடா பொய்யில்லை.... நீ வேணாலும் போய்ப் பாருடா பாரு கண்ணை அப்படிப் பறிக்குது- அவ்வளவும் சூரியக்குஞ்சு மாதிரி ஒளி வீசுற தங்கம்டா தங்கம்.... கட்டிகட்டியாத் தங்கம்....!

கமலநயனன் : என்ன- தங்கமா-?

செங்கமலம் : ஆமாடா ஆமா! அவ்வளவும் தங்கம்.... சொக்கத் தங்கம், டேய்... அந்த ஆளு மகா சித்தன் தான்டா மகாசித்தன் தான்.... ராவோட ராவா சித்து விளையாடிட்டான்டா சித்துவிளையாடிட்டான்... போயிப்பாரு- தங்கம் கட்டி கட்டியா மலை போல குவிஞ்சு கிடக்கு....

கமலநயனன் : அதோ-

(சித்தனும் பொன்னனையாளும் வர - செங்கமலமும் கமலநயனனும் சித்தன் காலில் விழுகின்றனர்)

செங்கமலம் : சாமி! உங்க பெருமை தெரியாமெ ஏதேதோ பேசிட்டோம் சாமி- எங்களை மன்னிக்கனும் சாமி-!

கமலநயனன் : சாமி... இப்படியே கையோட கையா எங்க வீட்டுக்கும் வந்து உங்க சித்து விளையாட்டைக் காட்டிட்டுப் போகனும் சாமி-!

குவிஞ்சு கிடக்கு......

கமலநயனன் : அதோ.....

(சித்தனும் பொன்னனையாளும் வர - செங்கமலமும் கமலநயனனும் சித்தன் காலில் விழுகின்றனர்)

செங்கமலம் : சாமி! உங்க பெருமை தெரியாமெ ஏதேதோ பேசிட்டோம் சாமி- எங்களை மன்னிக்கனும் சாமி-!

கமலநயனன் : சாமி.... இப்படியே கையோட கையா எங்க வீட்டுக்கும் வந்து உங்க சித்து விளையாட்டைக் காட்டிட்டுப் போகனும் சாமி....!

சித்தன் : (சிரித்து) இந்தச் சித்தனின் பெருமையை இந்த உலகத்தில் எவரும் அவ்வளவு எளிதில் உணருவதில்லை... உம்... பொன்னனையாள், இரசவாதம் செய்து உனக்குத் தேவையான தங்கத்தைத் தயார் செய்து கொடுத்துவிட்டேன்..... என் முதல் வேலை முடிந்துவிட்டது! இப்போது உனக்குத் திருப்தி தானே....?

பொன் : ...ஸ்வாமி... ஆனந்தப்பரவசம் என்று சொல்லுவார்களே அதன் அர்த்தத்தை நான் இப்போது தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். ஸ்வாமி- தங்களின் மாபெரும் இச்செயலை எப்படி வர்ணிப்பது எவ்வாறு புகழ்வது என்று புலப்படாமலேயே திகைத்துக் கொண்டிருக்கிறேன்- அடுத்து.... என் நாயகனைச் சிலையாக வார்த்துக் கொடுத்து என் நீண்ட காலக் கனவை நிறைவேற்றிக் கொடுங்கள் ஸ்வாமி....?

சித்தன் : ஓ..... நான் இப்பொழுதே அதற்கான வேலையைத் தொடங்குகிறேன் பெண்ணே..... ஆனால்..... நீ ஒரு கடுமையான நிபந்தனையை ஏற்றுக்கொள்ள வேண்டும்....!

பொன் : .... கூறுங்கள் ஸ்வாமி... எத்தகைய கடும் நிபந்தனையாயினும் சித்தமாயிருக்கிறேன்....!

சித்தன் : ...கேள்! நான் தொடரப் போகும் கலைப்பணி மிகவும் சிக்கலானது– சிரமமானது–! உன் உள்ளத்து ஆசைகளையெல்லாம் ஒன்று திரட்டி நீ உருவகப்படுத்திக் கொண்டிருக்கும் உன் இதயதெய்வத்தை என் மதிநுட்பத்தால் புலனாய்ந்து அறிந்து சிலையாக உருவாக்கவேண்டும்– அத்தகைய சீரிய பணியிலீடுபட்டிருக்கும் பொழுது என் சிந்தனை சிறிதும் திசை திரும்பி விடக்கூடாது.... யாரும் என் வேலையில் குறுக்கிடக்கூடாது... முழு உருவச் சிலையையும் முடித்து உன் முன், பார்வைக்கு வைக்கும் வரை எனக்கு எவ்வித இடையூறும் இருக்கக்கூடாது– குறிப்பாக– நீ அந்தப் பக்கமே தலைநீட்டக்கூடாது.

பொன் : சித்தம் ஸ்வாமி... என் இதய நாதனைக் காணும் வரை இதோ இந்த இடத்திலேயே நான் தவமிருக்கிறேன்– தங்கள் வேலை முடிந்து தாங்களே என்னை அழைக்கும் வரை தங்களுக்கு என்னாலும் மற்றும் எவராலும் எவ்வித இடையூறும் நேரிடாதவாறு நான் கவனித்துக் கொள்கிறேன் ஸ்வாமி– உடனே உங்கள் பணியைத் தொடருங்கள் அய்யனே...?

சித்தன் : (சிரித்து) ...ஓ– இதோ– அப்பொன்னம்பலத்தவனின் பொற்சிலை... (பலமாகச் சிரித்து)

ஓரிரு தினங்களில் அந்தச் சுந்தரரூபனையே உன்முன் கொண்டுவந்து நிறுத்துகிறேன்.

பொன் : (கண்களை மூடி)

இதோ... என ஜென்மம் ஈடேறப்போகும் காலம் நெருங்கிவந்து கொண்டிருக்கிறது ஸ்வாமி... சொக்கேசா– சோமசுந்தரக் கடவுளே– மின்னனையாள் துணைவா– கண்ணாளா–

செங்கமலம் : சாமீ... முடிஞ்சதும் அப்படியே எங்க வீட்டுக்கும் ஒரு நடை வந்து போகனும் சாமி...?

சித்தன் : (பலமாகச் சிரிக்கிறார்)

(காட்சி மாறுகிறது)

காட்சி : 24

இடம் : மதுரை அரண்மனை

பாத்திரங்கள் : மன்னன் சுந்தரபாண்டியன் - வேங்கைமார்பன் - செங்கமலம் - கமலநயனன் - வீரர்கள்.

மன்னன் : பொன்னனையாள் இல்லத்தில் நிகழ்வது பற்றி நான் கேள்விப்பட்ட தனைத்தும் உண்மை என்று கூறுகிறீர்களா....?

செங்கமலம் : ஆமாம் மகாராஜா.... அந்தக் கிழச்சிற்பி அற்புதங்களைத் தான் செய்கிறார்..... இரசவாதம் செய்து தங்கக்கட்டிகள் குவியல் குவியலாகக் கிடந்ததை நாங்கள் எங்கள் கண்களாலேயே கண்டோம் மகாபிரபு...!

மன்னன் : பொய்! வானத்து நிலவு குளத்தில் மிதந்து கொண்டிருப்பதாகக் கூறும் பைத்தியங்களின் கூற்றைப் போலிருக்கிறது...!

செங்கமலம் : ....மகாராஜா....?

மன்னன் : இருக்கட்டும்! இப்போது என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது?

செங்கமலம் : அத்தனை தங்கத்தையும் உருக்கியெடுத்து ஆளுயரத்தில் அந்த அழகிய நாதனைப் போன்ற திருவுருவத்தை உருவாக்கிக் கொண்டிருப்பதாகப் பொன்னனையாள் பேசிக் கொண்டிருக்கிறாள்.... சிற்பம் செதுக்கும் சிற்றுளியின் சிற்றொலி இரவு பகல் எந்த நேரமும் கேட்டுக் கொண்டுதானிருக்கிறது மகாராஜா... அந்த வீட்டிற்குள் ஒரு தனி முற்றத்தில் அத்தனை திருவிளையாடல்கள் புரிந்து கொண்டிருக்கிறார் மகாராஜா அந்தச்சித்தர்....!

மன்னன் : (நடந்து)... தளபதியாரே! யாரோ ஒரு சூனியக்காரன் பொன்னனையாளின் அறியாமையைப் பயன்படுத்தி அவளை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறான் என்று தெரிகிறது... நாளையே... நாம் திருப்பூவணம் சென்று உண்மைநிலையைக்

கண்டறிய ஆவன செய்யுங்கள்!

வேங்கை : அப்படியே செய்கிறேன் மன்னர் மன்னா—! (மன்னர் செல்ல) செங்கமலம் நீங்கள் ஊர் போகலாம்... நாளை திருப்பூவணத்தில் சந்திப்போம்!

(சபை கலைகிறது) *(காட்சி மாறுகிறது)*

காட்சி : 25

இடம் : பொன்னனையாள் வீடு

பாத்திரங்கள் : சித்தன் - பொன்னனையாள் - செங்கமலம் - கமலநயனன்

(நடுநிசி-திரைச் சீலை மூடிய சிலை அருகில் தூங்கிக் கொண்டிருக்கும் சித்தனுக்கு இடையூறின்றி பொன்னனையாள் பதுங்கி வருகிறாள்)

(சித்தன் அருகில் நின்று)

பொன் : என் பிறவிப் பயனை அடையப் பேருதவி புரிந்த பேரறிஞரே— என்னை மன்னித்தருளுங்கள் ஸ்வாமி— தாங்கள் விதித்திருந்த ஒரே ஒரு நிபந்தனையைக் கூட இதற்கு மேலும் என்னால் காப்பாற்ற இயலாமல் போய்விட்டேன் ஸ்வாமி! என் பெரும் புகழை... பூவணத்துள் பேரழகை... என் இதயம் கவர்ந்த இறைவனை— இனியும் நான் காணாதிருந்தால் என் தலையே சுக்குநூறாகத் தெறித்துச் சிதறிப்போய்விடும் போலிருக்கிறது அய்யனே—! இச்சிறியவளின் பெரும் பிழையைப் பொறுத்தருளுங்கள் ஸ்வாமி...

(திரை மூடிய சிலை முன் நின்று)

பிரபு— ஆடிய பாதனே— அழகிய நாதனே— அடியாள் மனஇருள் விலக்க வாருங்கள் தேவனே....

(திரைச்சிலையை அகற்றி சிலையைக் கண்டு பிரமித்து)

...ஆ...ஆமாம்...ஆமாம் ஸ்வாமி— என் ஸ்வாமியே தான்... என் நெஞ்சம் நிறைந்த நெற்றிக்கண்ணன் தான்— பிறை சூடிய பெருமான்— நேர் வகிடு— நெடிய

கூர்வாளுக்கு நிகரான கருவிழிகளின் எடுப்பான தோற்றம்... அகன்ற மார்பு...... ஆ... சொக்கேசா... அச்சோ... அச்சச்சோ... (சிலையின் கன்னத்தில் தன் விரலால் அழுத்திக் கொஞ்ச) ஆ... அற்புதம்... அதிசயம்... ஆனந்தம்.... என் எண்ணத்தில் விளைவதெல்லாம் நிகழும் ஆச்சரியம்... என் விரல்பட்ட இடத்தில் கூடத் தழும்பேறிவிட்ட அற்புதம்.... ஆம்.... என் நினைவின் பிரதிபலிப்பு.... என் எண்ணத்தின் பிரத்தியட்சம்... ஆம்... என்னால் இனி ஒரு கணமும் தாமதிக்க இயலாது பிரபு.... இனி ஒரு கணமும் உன்னைவிட்டுப் பிரிந்திருக்கவும் முடியாது மகா பிரபு.... தயாநிதி... இதோ உன்னை என்னுள் ஐக்கியமாக்கிக் கொள்ள விழைகிறேன் கருணாமூர்த்தி... வா... என் ஜீவனோடு கலந்து என் ஜென்மத்தை ஈடேற்று பெருமானே...

(பரவசத்துடன் சிலையைத் தழுவிக்கொள்ள சிலை அவளுள் கலந்து மறைகிறது)

(சித்தன் கண்விழித்துப் பதட்டத்துடன் எழுந்து)

சித்தன் : ......ஆ... இதென்ன அரவம்? ஓ.... பொன்னனையாள் நீயா...? அடிபாவி! என்ன காரியம் செய்தாய்... என் நிபந்தனையை மீறி இந்த இருட்டுநேரத்தில் திருட்டுத்தனயாக ஏன் இங்கு வந்தாய்.... உன் குலப்புத்தியைக் காட்டிவிட்டாயே.... போ! போ வெளியே....

(திரும்பிப் பார்த்து திகைத்து)

ஆ... அய்யோ... சிலை.... சிலையைக் காணோமே.... சிலை அப்படியே... முழுஉருவத் தங்கச் சிலை....! அடி கள்ளி.... திருடி.... எங்கே அந்தத் தங்கச்சிலை.... சிலையைக் கடத்திக் கொண்டு போய் எங்கே மறைத்து வைத்திருக்கிறாய் சொல்.... சிலை எங்கே சொல்.... அடி பாதகி... மௌனம் சாதிக்காமல் சொல்.... எங்கே சிலை...?

பொன் : (கண் திறந்து)..... இம்மையில் நன்மை தரும் என் அன்பனை அப்படியே அள்ளி எடுத்து ஆலிங்கனம் செய்து என் அகத்தோடு ஐக்கியப்படுத்திக்கொண்டு

விட்டேன். ஸ்வாமி, பேதை நான் எவரும் எளிதில் பெற முடியாத பேற்றினை... பெரும் பேற்றினைப் பெற்றுவிட்டேன் ஸ்வாமி...

(சிரிக்கிறாள்)

சித்தன் : நிறுத்து! இரவுபகல் கண் விழித்து வியர்வை சிந்தப் பாடுபட்டு உருவாக்கிய சிலையை எங்கோ மறைத்து வைத்துக் கொண்டு நாடகமா ஆடுகிறாய்...? உன்னைச் சும்மா விடமாட்டேன்! ஊரைக்கூட்டுவேன்! வழக்குத் தொடருவேன்! நீதி கேட்பேன்! உன் மோசடியை உலகறியச் செய்து உன்னைத் தலைகுனிய வைப்பேன்! தேவதாசிகளே மகா சாகஸக்கரிகள் என்பதை நிருபித்துக் காட்டுவேன்... (பொன்னனையாள் சிரிப்பு)

சித்தன் : ...ஆ? என்ன மமதை உனக்கு...?

(பொன்னனையாளின் சிரிப்பு)

(செங்கமலமும் கமலநயனனும் வந்து நின்று கவனித்து செய்வதறியாது விழிக்கின்றனர்)

சித்தன் : ஓ... பார்... என்ன நடைபெறுகிறதென்பதை நீயே பார்... (ஓடுகிறார்)

பொன் : (சிரிப்பு)

(காட்சி மாறுகிறது)

காட்சி : 26

இடம் : திருப்பூவணத்தில் பொது அரங்கம்

பாத்திரங்கள் : மன்னன் சுந்தரபாண்டியன் - தளபதி - சித்தன் - பொன்னனையாள் - செங்கமலம் - கமலநயனன் - வீரர்கள் - பொதுமக்கள்.

(கூட்டத்தில் அமைதி நிலவியவுடன்)

மன்னன் : உமது முறையீட்டில் சிறிதும் நியாயமிருப்பதாகத் தெரியவில்லை... இரசவாதம் செய்ததாகக் கூறுகிறீர்... மாபெரும் சித்தர்களெல்லாம் முயன்று முடியாதென்று கைவிட்ட இரசவாதத்தை உம்மால் செய்ய முடிந்தது என்ற கூற்றைப் பகுத்தறிவுள்ள

எங்களால் ஒப்புக்கொள்ள முடியவில்லை....

சித்தன் : .....பகுத்து... ஆராய்ந்து.... அறிதல்... என்பது இந்தத் தமிழ் மண்ணுக்கே உரித்தான சீரிய மரபு வேந்தே..!

மன்னன் : என்ன கூறுகிறீர் சித்தரே நீர்.....?

சித்தன் : .....நான் இரசவாதம் செய்து தங்கத்தைக் கட்டி கட்டியாகக் குவித்து பிறகு அவற்றையெல்லாம் மொத்தமாக உலையில் போட்டு உருக்கி ஆளுயரத்தில் வார்த்தெடுத்தது முதல் அனைத்து அற்புதங்களையும் தங்கள் இரு கண்களாலும் கண்டதாகப் பிரதிவாதி பொன்னனையாளும்... சாட்சியமாக அவளைச் சேர்ந்தவர்களுமே ஒப்புக்கொள்ளும் போது....

மன்னன் : ...பொன்னனையாள் சில நாட்களாகவே சுயநினைவில் இல்லை.... எவரும் எளிதில் ஒப்புக்கொள்ள முடியாத சாதனை புரிந்நதாகக்கூறும் நீர் பொன்னனையாளின் மன நிலையை மேலும் தடுமாற வைத்துவிட்ட சூன்யக்காரராகவும் இருப்பீர் என எண்ணுகிறேன்...?

சித்தன் : ஓ! நல்ல எண்ணம்! அப்படியே எண்ணுங்கள் அரசே! பாண்டிய நாட்டில் உண்மை உறங்கத் தொடங்கிவிட்டது என்பதற்கு உங்கள் எண்ணம் ஒரு முன்னுதாரணமாகத் திகழட்டும்!

மன்னன் : இவ்வித அரச நிந்தனைகள் கடுந்தண்டனைகளை ஏற்க ஏதுவாகி விடும் சிற்பியாரே.....?

சித்தன் : ஓ... இப்படியும் பயமுறுத்தலாமோ... உம்ம்... அரசர் தமது அபிமானிக்கு ஒரு நீதி வழங்குவார்.... இவ்வாறு... நயவஞ்சகத்திற்கு ஆளாகி மோசம் போய்விட்ட அன்னியனுக்கு வேறொரு நீதி வழங்குவார்... அபிமானிக்கு ஒரு நீதி... அன்னியனுக்கு அநீதி.... கேட்டால்... அரச நிந்தனை.... தண்டனை கடுமையாகுமெனக் கூறும் அச்சுறுத்தல்... இப்படியெல்லாம் வளைந்து கொடுத்து அநீதி விளைவிக்கும் கலையை இப்போது எங்கு கற்று

வந்தீர் பாண்டிய மன்னரே....?

வேங்கை : ...சித்தரே! நிதானமாகப் பேசும்... நீர் நிற்பது அரச சபை...?

சித்தன் : யார்! தளபதி வேங்கைமார்பனா? சோழ மன்னனைப் பழிக்குப் பழி வாங்கி உம் மன்னருக்குச் சோழமண்ணில் வீராபிஷேகம் செய்து வைத்து விட்ட வரலாற்று நிகழ்ச்சியில் முதலிடம் பெற்று விட்ட போதை உனக்கு...(சிரித்து).... இங்கே, ஊர்மக்கள் உண்டிக்கும் உறைவிடத்துக்கும் திண்டாடித் தெருவில் அலைந்து கொண்டிருக்கும் போது நாடு பிடிக்கும் போராட்டமே உங்கள் பொழுது போக்காகக் கொண்டிருக்கும் உங்களிடமிருந்து உறங்கும் உண்மையைத் தட்டி எழுப்பி விட முடியுமா தளபதி.... முடியாது... முடியாது... மும்மூர்த்திகளே வந்தாலும் முடியாது....

(கூட்டத்தில அமளி-சலசலப்பு)

ஒருவன் : இந்த நாடோடிக் கிழவனுக்கு நாக்கு ரொம்பநீளம்...!

மற்றவன் : கடுமையாகத் தண்டிக்க வேண்டும் இவனை.....!

சித்தன் : ஓ... (சிரித்து)... மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழி... உம்ம்... நீதிவிசாரணையை நிறுத்திவிட்டுத் தண்டனையை வழங்குங்கள்.... மக்கள் தீர்ப்பு மஹேசன் தீர்ப்பல்லவா... நடத்துங்கள் உங்கள் காட்டு ராஜ தர்பாரை....?

(கூட்டத்தில் சலசலப்பு)

வேங்கை : (வாளை உருவி) சித்தா! இப்பூமண்டலத்தில் பாண்டிய அரசவையை அவமதித்த முதல் நிர்மூடன் நீ தான்... உன் தலையைப் பந்தாடுவதன்றி இதற்கு வேறு பரிகாரமே கிடையாது...?

எல் : வெட்டுங்கள்! கொல்லுங்கள்!

(சித்தன் சிரிப்பு)

வேங்கை : ஆ? என்ன திமிர்...?

(பாய்ந்து செல்ல - பொன்னனையாள் இடைமறித்து சித்தன் முன் நின்று)

பொன் : மகாராஜா....! இம்மாபெரும் சித்தரைத் தீண்ட அனுமதியாதீர்கள் பிரபு....!

மன்னன் : ...இவளை இங்கிருந்து அப்புறப்படுத்துங்கள்!

பொன் : மன்னர் மன்னா! என்னை இங்கிருந்து எவராலும் அவ்வளவு சுலபத்தில் அப்புறப்படுத்தி விடமுடியாது.. (கூட்டத்தில் அமளி).. உண்மையை மறைப்பானேன்....... மோசடி வழக்கில் தண்டனை வழங்க வேண்டிய என்னை விட்டு விட்டு குற்றமற்ற நிரபராதியைத் தண்டனைக்குள்ளாக்குவது மாபெரும் தவறு மன்னா மாபெரும் தவறு...! பாண்டியப் பேரரசின் பெருமை மிகு அரசவையில் ஒரு நிரபராதி தண்டிக்கப்படும் இவ்விதத் தவறு நடந்துவிட என் உயிருள்ளவரை அனுமதிக்க மாட்டேன் பிரபு அனுமதிக்க மாட்டேன்....! (கூட்டத்தில் சலசலப்பு)

இதோ.. இந்தப் பெரியவர் மகாசித்தர்..! இரசவாதம் செய்து அற்புதங்கள் புரிந்தார்! உலகம் கண்டும் கேட்டுமறியாத அற்புதங்கள் புரிந்தார்! இவர் உருவாக்கிய அத்திருமூர்த்தியின் அதிஅற்புதச்சிலையை நான் தான் திருடினேன்.... (கூட்டத்தில் பெரும் சலசலப்பு)

மன்னன் : அப்படியானால் இப்போது அந்தச் சிலையை எங்கே மறைத்து வைத்திருக்கிறாய் ஆடலரசி....?

பொன் : ...மனதில்......!

மன்னன் : (சிரித்து)... ஓ.... உன் மனதில் ஏற்கனவே பூஜித்துக் கொண்டிருந்த அந்தப் பூமி பாலகன் போலவே அமைந்திருந்த அந்த அதிஅற்புதச் சிலையை யாருமே அறியா வண்ணம் அகத்தில் மறைத்துக் கொண்டிருக்கும் ஆடலரசி.... அந்த.... உன் மலரவனை... மாயா விநோதனை நாங்களும் கண்டுமகிழும்படி..... (சபையில் பலத்த சிரிப்பு)

பொன் : எனக்காகச் சிருஷ்டித்தார் இந்தச் சிற்பி... அதை

நானே எடுத்துக் கொண்டேன்— இனி ஒரு போதும் என்னிடமிருந்து அச்சிலையைப் பிரித்து எடுத்துக் கொடுக்க முடியாத நிலையிலிருக்கிறேன்....?
(சபையில் மீண்டும் சலசலப்பு)

ஒருவன் : ...திமிர் பிடித்தவள்...

2ம் நபர் : ...அடங்காப்பிடாரி...

3ம் நபர் : ...வளர்த்த கிடாய் மார்பில் பாய்கிறது...?

4ம் நபர் : ...திருடிய குற்றத்தை ஒப்புக்கொண்ட இவளைத் தண்டியுங்கள்!

5ம் நபர் : ...ஆம்... கடுமையாகத் தண்டியுங்கள்!

மன்னன் : (கையமர்த்தி)... பொன்னனையாள்... இம்மாபெரும் சபையின் முன் நீயே உன் குற்றத்தை ஒப்புக் கொண்டு இந்த வழக்கின் சாராம்சத்தையே தலைகீழாய் மாற்றிவிட்டாய்... துரதிர்ஷ்டவசமான உனது ஒப்புதலுக்குப் பின்விளைவின் நியாயத்தை மேலும் தேடிக் கொண்டிராமல் வாதியும் உன்னால் நிரபராதி ஆக்கப்பட்டவருமான இச்சித்தர் கோரும் நியாயத்தை வழங்க வேண்டியவனாகவே இருக்கிறேன்...! (சபை ஆமோதிக்கிறது)

சித்தரே! உம்மை மோசடி செய்த வழக்கில் உமக்குச் சாதகமாகவே தீர்ப்பு வழங்கிட பிரதிவாதியும் மக்களும் விரும்புகின்றனர்! நீர் இழந்ததாகக் கூறும் பொருளைப் பெற என்ன விரும்புகிறீர்....?

சித்தன் : (சிரித்து) உம்... ஒரு பெரும் போராட்டம் நடத்தினாலன்றி எந்த அரசிடமிருந்தும் நீதியை எதிர்பார்க்க முடியாது என்பது மெய்யாகவே நிருபிக்கப்பட்டு விட்டது!

மன்னன் : வீண் விவகாரம் பேச வேண்டாம்! நீர் இழந்ததைப் பெற என்ன விரும்புகிறீர் என்பதை மட்டும் கூறும்...?

சித்தன் : ஓ...? (சிரித்து) சரி சரி! இதோ... பொன்னனையாள்...! மகாசாகஸக்காரி! பலே கைகாரி! என் நிபந்தனையை மீறி சர்வவியாபக சர்வேஸ்வரனின் திரு உருவைத் தன் இதயத்தில் நிறைத்து மறைத்துக்கொண்ட நீலி! அவளிடம்

மறைந்திருக்கும் எனக்குரிய அப்பொருளைப் பெற அவளையே என்னிடம் ஒப்படைத்து விடுவது ஒன்று தான் தகுந்த நீதி!

மன்னன் : என்ன? பொன்னனையாளை உம்மிடம் ஒப்படைப்பதா?

சித்தன் : ...ஏன்? அடையவிருந்த ஒரு பொருளை அபகரித்துக் கொள்ள அயலான் ஒருவனுக்குச் சந்தர்ப்பம் நேர்ந்துவிட்டதே எனக் கலக்கமா மாமன்னா.....!

மன்னன் : ஆ....?

வேங்கை : இவன் மகா அயோக்கியன்! திமிர் பிடித்தவன்! இவனைச் சும்மா விடக்கூடாது.... பிரபு....!

மன்னன் : (எழுந்து வாளை உருவி) மூடனே.... என்ன சொன்னாய்?

பொன் : (மறித்து) பிரபு.....!

சித்தன் : (பலமாகச் சிரித்து).... சுந்தரபாண்டியா....?

மன்னன் : ஆ.....?

வேங்கை : ஆஹ்....?

எல் : ஆ....?

சித்தன் : (சிரித்து).... மாறவர்ம சுந்தரபாண்டியத்தேவனே! இதோ என்னைப் பார்! (மறைதல் சிரிப்பு)

பொன் : ....ஸ்வாமி.... என் அய்யனே... என்னை விட்டுப் போய்விடாதீர்கள் ஸ்வாமி....

மன்னன் : (வணக்கத்துடன்) ஆ... அகிலபுவனமும் அண்ட சராசரமும் காத்தருளும் அம்பிகை பாகா... லிங்கேசா.... அம்பிகேஸ்வரா... பூமிநாதா... புஸ்பவனேஸ்வரா... சொக்கேசா.... சோமசுந்தரா... தயாநிதியே... கருணாகரா... உனது திருவிளையாடல் அறியாது விளையாடி விட்ட எங்களை மன்னித்தருள் மகேஸ்வரா.....

சித்தன் : ...பாண்டியமன்னா... யாம் பொன்னனையாளின் அன்புக்காகவே இத்தலத்தில் தோன்றினோம்... அவளுக்காகவே இத்திருப்பூவணத்தில் இரசவாதம் செய்தருளித் திருவிளையாடல் புரிந்தோம்! யாமே மதுரையிற் சித்தராகிய சோமசுந்தரக் கடவுள்.....!

பொன் : ...மகாபிரபு... தேவதேவா... மகாதேவா... பிராணேசா... இந்த எளியவளின் நிமித்தம் இம்மண்ணில் எழுந்தருளிய இறைவனே... இனியவனே...

"மின்னனையாள் திருமேனி விளங்க வோர்
தன்னமர் பாகம தாகிய சங்கரனே...
புனிதமடைந்தேன் பூமி நாதனே.....!"

சித்தன் : பொன்னனையாள்... உன் பக்தி கண்டு பெரிதும் பரவசமடைந்தோம்! மேலும் பல்லாண்டு காலம் இப்பூவணத்து லிங்கேஸ்வரனுக்குத் தொண்டு புரிந்து இறுதியில் எம் பதம் வந்தடைவாயாக!

(எல்லோரும் வணங்கி நிற்க மலர் மாரி பொழிகிறது)

(காட்சி மாறுகிறது)

காட்சி : 27

இடம் : பொது அரங்கம்

பாத்திரங்கள் : மன்னன் சுந்தரபாண்டியன் - வீரர்கள் - பொன்னனையாள் - பொதுமக்கள்.

(மன்னரும் பொன்னனையாளும் வணங்கி நிற்க- அனைவரும் சூழ்ந்திருக்க-ஒளிமயமான சித்தன் பேசுகிறார்)

சித்தன் : எமது மகாபக்தையான பொன்னனையாளின் புகழ் பரவச் செய்த மாறவர்ம சுந்தரபாண்டிய மன்னனே... எம் இடப்பாகம் அமர்ந்த மின்னனையாள் சமேத திருப்பூவணத்திறைவருக்கு ராஜகோபுரம் எழுப்பி கோயில் கொண்டருளச் செய்த உனது புகழ் இம்மண்ணுள்ள மட்டும் இருக்கும்!

திருப்பூவணம் வாழ் இனிய மக்களே....

எமது திருவிளையாடல் ஒன்றால் ஆட்கொள்ளப்பட்ட இம்மண் இப்புவனம் உள்ள மட்டும் புகழுடன் விளங்கும்! யாமே இவ்வுலகைப் படைத்தோம்; சகல ஜீவராசிகளையும் படைத்தோம்!

எல்லா உயிர்களும் இன்புற்று வாழவே இயற்கைச் செல்வங்களனைத்தையும் படைத்தோம்!

சகல உயிர்களிடத்திலும் அன்பு செலுத்தி வாழுங்கள்!

ஜாதி மத இன பேதங்களை அகற்றுங்கள்!

மனித நேயமே மகத்தான இறையருள்!

வாழ்வீர் வளமுடன்!

(ஒளிமறைதல்)

எல் : பொன்னார் மேனியனே போற்றி!
மின்னனையாள் துணைவா போற்றி!
பொன்னனையாள் நேசா போற்றி! போற்றி!
தென்னவர் கோனே திருப்பூவணத்திறைவா போற்றி!
(மங்களம் பாடுகின்றனர்)

– நாடகம் நிறைவடைகிறது

ஆசிரியர் குறிப்பு

பெயர் : கே.பி.சிவப்பிரகாசம்

பிறப்பு : முகவை மாவட்டம் திருப்புவனத்தில் 26.11.1926–ல்.

பெற்றோர் : பூவணலிங்கம், முத்துராக்கம்மாள்.

பொது வாழ்க்கை : ESLC (8–ஆம் வகுப்பில்) மாகாணத்தில் முதல் மாணவராகத் தேர்வு. விடுதலை வீரர் சோழ வந்தான் சீனிவாச வரதய்யங்கார் அவர்களின் தொடர்பு கிடைக்கிறது. (மகாகவி பாரதி 'அமிர்தம்' எனும் இதழ் துவங்க எட்டையபுரம் சமஸ்தானம் உதவி செய்ய மறுத்த போது, 'உனது சொத்துகளை விற்றுப் பணம் கொண்டு வா' என்று உத்தர விடுமளவிற்கு நெருங்கிய நண்பர் அவர்!) அவரது தேசியப் பள்ளியில் ஆசிரியர் வேலை... ஆங்கில அரசு கைது... ஆறுமாத சிறைத் தண்டனை. அங்கு முன்னாள் மத்திய உணவு அமைச்சர் டாக்டர் திருமல்ராவ் அவர்களது உதவியாளராக சேவை. தண்டனை முடிந்து வெளி வருகையில் வரவேற்று அழைத்து வந்தவர் இராமகிருஷ்ண நாயுடு அவர்கள் (விடுதலை வீரர் என். சங்கரய்யா அவர்களின் மாமன்) ஆவார். திருப்புவனம் பேரூராட்சி மன்ற உறுப்பினர், தமிழக உள்ளாட்சித்துறை ஊழியர் சங்க மாநிலத் தலைவர்,

தமிழக விவசாயிகள் சங்க முகவை மாவட்டத் தலைவர்,
தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மதுரை மாவட்டத் தலைவர்.

படைப்பும் பரிசும் : 16 வயதில் N. சுப்பிரமணியன் அவர்களது மதுர மித்ரன் இதழின் துணை ஆசிரியர்.
'ஜனசக்தி', 'தாமரை', 'சாந்தி', புலவர் குழந்தையின் 'வேளாளன்', ஏ.எஸ். சர்மாவின் 'செட்டிநாடு', மதுரை S. காமராஜின் 'இரும்புத் திரை', மதுரை துரைப்பாண்டியனின் 'இந்திய முரசு'... இதழ்களில் கவிதை, சிறுகதை, கட்டுரைகள்.
'தீ பரவட்டும்', 'மகா நதி' – இதழ்களின் அச்சுப் பொறுப்பு. ஏராளமான வீதி நாடகங்கள் எழுதி, நடித்ததுடன் 'திருப்பூவண நாதர்', 'சின்ன மருது பெரிய மருது' மேடை நாடகங்கள் எழுதியமைக்காக 'கலைஞர்' – எனும் விருது.
'விடியாத பயணம்' – சிறுகதை 'இலக்கியச் சிந்தனை' – பரிசினை 1975 ஏப்ரல் மாத சிறந்த சிறுகதைக்காகப் பெற்றது.
கல்வெட்டுகள் – 'NCBH, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்' – 2001 ஆம் ஆண்டு இலக்கியப் பரிசு பெற்ற சிறுகதைத் தொகுப்பு நூல்.

மறைவு : 30.11.2004.



கே. பி. சிவப்பிரகாசம்

26-11-1926-ல் முகவை மாவட்டம் திருப்புவணத்தில் பூவணலிங்கம் முத்துராக்கம்மாள் தம்பதியருக்கு பிறந்த கே.பி.சிவப்பிரகாசம் படித்தது எட்டாம் வகுப்புதான். தமது 16-ம் வயதிலேயே மதுர மித்ரன் இதழின் துணையாசிரியரானார். ஜனசக்தி, தாமரை, சாந்தி, வேளாளன், செட்டிநாடு, இரும்புத்திரை, இந்தியமுரசு இதழ்களில் அவரின் படைப்புகள் வெளிவந்தன.

தீ பரவட்டும், மகாநதி ஆகிய இதழ்களின் அச்சுப்பொறுப்பை ஏற்று இலக்கியப் பணியாற்றியவர். ஏராளமான வீதி நாடகங்களை எழுதியவர். திருப்பூவணநாதர், சின்ன மருது பெரிய மருது ஆகிய மேடை நாடகங்களை எழுதி கலைஞர் எனும் விருதும், விடியாத பயணம் சிறுகதைக்கு இலக்கியச்சிந்தனை பரிசும், கல்வெட்டுகள் எனும் சிறுகதை தொகுப்பு நூலுக்கு கலை இலக்கியப் பெருமன்ற பரிசும் பெற்றவர்.

அலமேலு
பதிப்பகம்